
www.padippakam.com

# மாணவர் கட்டுரைகள்



திருமதி. விக்னா பாக்கியநாதன் பீ.ஏ

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மாணவர் கட்டுரைகள்

திருமதி.வி.பாக்கியநாதன் பீ.ஏ

முதற்பதிப்பு - 1995
கலைவிளக்கு வெளியீட்டகம்
Droote.13
44328 Dortmund
Germany



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# எமதுரை

புலம்பெயர்ந்து வாழும் நம்மினத்து மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும்பொருட்டு " மாணவர் கட்டுரை கள்" என்னும் இந்தக் கட்டுரைத்தொகுப்பு நூலை வெளியிடுகின்றோம். மேலை நாடுகளில் வாழ்ந்துவரும் எம் சிறுவர்கள் தாயகத்தையும் எம் தமிழ்ப் பண்பாடுகளையும், தாய்மொழியையும் ,தமிழுக்குத் தொண்டு செய்த பெரியார்களையும் , விடுதலைத்தியாகிகளையும் ஓரளவுக்காவது அறிந்திருத்தல் அவசியம் என்ற சிந்தனையுடனே தொகுக்கப்பட்ட கட்டுரை நூலே இதுவாகும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் எமது கலாச்சாரங்க ளையும் , தாய்மொழியையும் , மரபுகளையும் மறவாது நிலைநிறுத்த வேண்டும் என்ற பரந்த நோக்குடனே எம்மவர்களால் ஒன்றியங்கள், சங் கங்கள், பண்பாட்டுக் கழகங்கள், தமிழ்க்கல்வி நிலையங்கள மற்றும் அமைப்புகள் என்பன செவ்வனே செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவை இங்கு வாழ் மாணவர்களின் கல்விநலனில் அக்கறைகாட்டி எமது பாரம்பரியத்தையும் , விடுதலையையும், தமிழ்ப்பெரியார்களையும் மற்றும் தாயக நிகழ்வுகளையும் மாணவர்கள் மனதில் நிலைநிறுத்தும் வண்ணம் ஆண்டுதோறும் பேச்சு-கட்டுரைப் போட்டிகளை நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே. இவ்வாறான போட்டிகளுக்கென மாண வர்களுக்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட நேரத்துக்கு அமைய எழுதப் பட்டு, அவர்களின் வாக்குவல்லபத்தின் மூலம் முதலாம் இடத்தைப் பெற்ற பெரும்பாலான பேச்சுக்கள் இங்கே கட்டுரை வடிவமாக்கப்பட் டுள்ளன.

இங்கு தமிழ்பயிலும் மாணவர்களுக்கு கட்டுரை அறிவை வளர்க்கும் பொருட்டும், தொடர்ந்து மாணவர்கள் இங்கு நடாத்தப்படும் பேச்சு-கட்டுரை - போட்டிகளில் பங்குபற்றுவதற்கும், தமிழ்மொழிப் பரீட்சைக்குத் தம்மைத் தயார்படுத்திச் செல்வதற்கும் இந்நூல் பயன்ப டும் என எதிர்பார்க்கின்றோம்.

ஏற்கனவே பல நூல்களை வெளியிட்டு, கடந்த வருடம் தமிழ்மொழி ஆண்டு- 3 செயல்நூலை வெளியிட்ட "கலைவிளக்கு வெளியீட்டகம்" இந்நூலையும் வெளியீடு செய்கின்றது.

– ஆசிரியர்–

01.01.1995

Droote.13
44328 Dortmund



படிப்பகம்

www.padippakam.com



# உள்ளே.........


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. தமிழர் பண்பாடு | 5 |
| 2.தமிழ்மொழி | 8 |
| 3. தாய்மொழிக்கல்வியின் அவசியம் | 11 |
| 4. தமிழர் திருநாள் | 14 |
| 5. நவராத்திரி | 17 |
| 6. மனிதனும் விஞ்ஞானமும் | 20 |
| 7. இன்பத்தமிழில் இலக்கியச்சுவை | 23 |
| 8. நல்லைநகர் ஆறுமுகநாவலர் | 25 |
| 9. சி.வை.தாமோதரம்பிள்ளை | 28 |
| 10. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் | 30 |
| 11. சுவாமி விபுலாநந்தர் | 32 |
| 12. ஔவையார் | 35 |
| 13. திருவள்ளுவர் | 37 |
| 14. பாவேந்தர் பாரதிதாசன் | 40 |
| 15. மகாகவி சுப்பிரமணியபாரதியார் | 43 |
| 16. அகிம்சைத்தந்தை காந்தியடிகள் | 47 |
| 17. கரும்புலி வீரர்கள் | 50 |
| 18. தியாகச்சுடர் திலீபன் | 52 |
| 19. அன்னை பூபதி | 56 |
| 20. தமிழர் தாயகம் | 59 |
| 21. சிறுவர்களைப் பாதிக்கும் வெளிநாட்டுக் கலாச்சாரம் | 62 |
| 22. ஒற்றுமையே உயர்வு | 65 |
| 23. பணிவுடமை | 67 |
| 24. உலகநியதி | 70 |
| 25. தமிழ் வளர்த்த இத்தாலிய அறிஞர் | 75 |


படிப்பகம்

www.padippakam.com

5

# தமிழர் பண்பாடு

உலகிலுள்ள காலநிலை பௌதிகச் சூழ்நிலைக்கேற்ப மக்களும் மக்கள் வாழ்க்கையும் வேறுபடுகின்றன. இத்தகைய சூழ் நிலைகளால் மக்கள் வாழ்க்கைமுறை வேறுபடும்போது ஒவ்வோர் இனமக்களுக்கும் ஒவ்வொரு பண்பாடுகள் தோன்றின. இந்தவகையில் தமிழர் பண்பாடு, பாரம்பரியம் என்பன மிகவும் தொன்மையானவை என சிந்துவெளி நாகரிகங்கள் எமக்குச் சான்று பகர்கின்றன.அத்துடன் தமிழர் பண்பாடு எனும்போது, அது " இன்று நேற்று தோன்றிய தல்ல, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த குடி தோன்றியபோதே " ஆரம்பமாகியது என இலக்கிய அறிஞர்கள் செப்பிச் சென்றுள்ளனர். தமிழர்களாகிய நாம் தனித்துவமான ஒரு பண்பாட்டைக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பெருமைப் படுகின்றோம்.

எமது பண்பாட்டின் ஆரம்பகாலத்தை நோக் கின் லெமூரியாக் கண்டம் கடற்கோள் கொண்டபோது இமயம் எழுந் தது என்பது புவியியல் வரலாறு. பன்னெடுங்காலத்திற்கு முன் கட லால் கொள்ளப்பட்டபோது பல்லாயிரக் கணக்கானோர் இறந்தனர். எஞ்சிய தமிழர்கள்தான் இமயம் முதல் குமரிவரையுள்ள இந்தியப் பெருநாடெங்கும் பரவி வாழ்ந்திருக்கின்றனர். அக்காலத்துத் தமிழர் களின் கலை, நாகரிகம், மொழி, இலக்கியம், அரசியல், ஆட்சிமுறை யாவும் மேம்பாடுடையதாக இருந்தமைக்கு சிந்துவெளி நாகரிக கரப்பா – மொகைஞ்சதரோ கல்வெட்டுக்கள் ஆதாரமாகவுள்ளன.

ஒரு நாட்டுக் கலாச்சாரம்,பண்பாடு, பழக்க வழக்கங்கள் என்பன அந்நாட்டுச் சமுதாயத்திற்காகவே சமுதாயம் விதித்துள்ள, நடைமுறைப்படுத்துகின்ற ஒழுங்கு ரீதியிலான ஒரு கட் டுக்கோப்பு அமைப்பு எனலாம். நமது பண்பாடுகளும் பழமையான பண்பாட்டுப் பிடியிலிருந்து தோன்றியவையாகும். பழந்தமிழர் பண்பாடு அன்றைய காலச்சூழ்நிலைகள் –சமுதாயச்சூழ்நிலைகள் என்பவற்றுக்கு ஏற்ப தோற்றம் பெற்றவை. சங்கநூல்கள் அனைத்துமே தமிழர் பண் பாட்டையும் அதன் தொன்மைச் சிறப்பையும் விளக்குகின்றன. தமிழி னத்துக்கே உரிய அரசியல் வரலாற்றுக் காவியமான சிலப்பதிகாரம் காட்டும் நெறிகள் நமது பாரம்பரியப் பண்பாடுகளைப் பிரதிபலித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகக் காட்சியளிக்கின்றன. மேலும்

www.padippakam.com



தமிழைப்போல் மொழிக்கும் பண்பாட்டுக்கும் சிறப்புக்கொடுக்கும் மொழி உலகில் வேறு எங்கும் இல்லை எனலாம்.

காதல், போர், வீரம் என்பன சங்ககாலத் தமிழர் வாழ்க்கையின் முக்கிய வாழ்க்கைத் தத்துவங்களாக இருந்தன. அகப்பொருள் கருதி தமிழன் ஐந்து திணைகளாக நிலத்தை வகுத்தான். இந்த ஐந்து திணைகளைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகை நிலங்களோடு பொருத்தி இப்பெயர்களாலேயே அந்தத் திணைகளைக் குறிப்பிட்டான். இந்த நிலங்களின் பெயராலும் செய்கின்ற தொழிலாலும் தொழிற்பகுப்பு முறையின் எளிமை கருதியும் நால்வகை வருணங்களைப் படைத்தான். ஆனால் அன்று தொழிற்பகுப்பை வகுத்து சமுதாயத்தை முன்னேற்ற அன் - றைய தமிழன் நினைத்தானேயன்றி மக்களைப் பிரித்துவைக்க ஒருபோதும் அவன் எண்ணியதேயில்லை. அத்தகைய பேருள்ளம் படைத்தவர்கள் அன்றைய தமிழர்கள். " பிறப்பினாலே என்ன இருக்கிறது? அன்புடை நெஞ்சங்கள் கலந்துவிடும் காதல் " என்ற முறையில் உயர்குடி தாழ்ந்த குடி என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற கருத்து சங்கப்பாடலில் விரவிவரும் ஒன்றாகும்.

காதல் ஒழுக்கங்களில் ஒருவன் ஒருத்திக் கோட்பாட்டை வலியுறுத்தி வாழ்ந்தமை நம் பண்டையதமிழ்ப் பண்பாடாகும். பெண்ணைத் தெய்வமாக மதித்து அவளுக்குப் பெருமை கொடுத்து வாழ்ந்தார்கள். கற்புநெறி உயிரிலும் மேலாகக் கருதப்பட்டது. தமது கற்பை நிரூபிக்க எத்தனையோ வீரச்செயல்களைப் புரிந்தனர் அன்றைய தமிழ்ப்பெண்கள். பண்டைத்தமிழ் மக்கள் ஒழுக்கம், மானம், மரியாதை, என்பவற்றையே அணிகலன்களாகக் கொண்டு வாழ்ந்தனர். " அன்பே தெய்வம். கூடிவாழ்ந்தால் கோடி நன்மை, யாதும் ஊரே யாவரும் கேளிர்." என்று செப்பியோரும் இணைந்து வாழ்ந்து தமக்கென ஒரு தனிப்பண்பாட்டை அமைத்துக் கொண்ட பெருமை நம் பண்டைத் தமிழருக்கே உண்டு. இல்லம் நாடி வந்தோரை உபசரித்து விருந்தோம்பும் பண்பும் பண்டைத் தமிழருடன் பிறந்த ஒரு செய்கை என்பதை எண்ணும்போது நாம் பெருமைப்பட வேண்டியுள்ளது. செய்தொழில் மதித்தல், கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பனவும் எமது மூதாதையர் பண்புகளில் முக்கியமானவையாகும். ஐரோப்பியர் வருகையின் பின்னர் எமது பண்பாடு சிறிது நலிவு பெற்றும் புதியவற்றை ஏற்றும் மாற்றம் பெறலாயிற்று. இவ்வாறு தொடர்ந்து வந்த அந்நியப் படையெடுப்பினால் இம்சைப் படுத்தப்பட்ட நிலையில் எமது பண்பாடு சிதைவுற்றமை வரலாறு

www.padippakam.com



கண்ட உண்மை. காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற அரசியற் பொருளாதார மாற்றங்கள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்பவற்றால் புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. பெண்களின் வாழ்க்கையில் விழிப்புணர்வுகள் தோன்றின. சமுதாய விழிப்புணர்வுகள் தோற்றம் பெற்றன.

இன்று நமது தாயகத்தில் நடைபெறுகின்ற விடுதலைப் போராட்டம் எமது பண்பாட்டிற்கு ஏற்பட்ட திடீர்த்திருப்பு முனையாகிவிட்டது. பெண்கள் களத்தில் இறங்கிவிட்டார்கள். பொதுவுடைமை மக்கள் வாய்ப்பாடாக மாறியது. அந்நியநாடு வந்த பலரிடம் மேனாட்டுப் பண்பாடு கலந்து இரட்டைப் பண்பாடு தோன்றியது. அத்துடன் மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த எமது சில பண்பாடுகளில் ஒரு புதுமலர்ச்சி ஏற்பட்டது. சமத்துவம் , தாயகசுதந்திரம், எம்மதமும் சம்மதம் என்ற கொள்கைகள் எம் மத்தியிலே இடம்பெற்றுவிட்டன. எவ்வளவுதான் மேலைநாட்டு ஆதிக்கத்திணிப்பு இருந்தபோதும் இந்துமதம், கலாச்சாரம், பண்பாடு, மொழி என்பன ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றில் ஒன்று தங்கி கலாச்சார மரபுகளாக மிளிரும் தன்மை தமிழினத்துக்கே உண்டு. பண்டைத் தமிழ்ப் பண்பாடு தூய்மையான பழக்கவழக்கங்களையும், நன்னெறிப் பாதைகளையும் கொண்டுள்ளது. அதன்வழி நாமும் வாழ வேண்டும். தேவையான போது சில மரபுகளை வளர்ச்சிகருதி மாற்றியமைத்து, மாட்சிமிக்க தமிழ்ப் பண்பாட்டின் தரம் குன்றாமல் பாதுகாக்க வேண்டும்.

தமிழர்களாகிய நாம் எமது மொழியையும் எம் மதத்தையும், எமது கலாச்சாரத்தையும் சென்ற இடமெல்லாம் வளர்க்க வேண்டும். காலத்துக்கு ஏற்ப நாம் சிறிது சிந்தித்து, சூழ்- நிலை அறிந்து பயன்பாடுணர்ந்து" கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளி " எம் பண்பாட்டை மேன்மேலும் வளர்ச்சிநிலை நோக்கிக் கொண்டு செல்லும் பாரியபொறுப்பு இளந் தலைமுறையினருக்கே உண்டு எனலாம். இப் பொறுப்புணர்ந்து அவர்கள் செயலாற்றி எமது கலாச்சாரத்தை மேன்மைப்படுத்துவார்களாக!

வாழ்க தமிழ் மொழி!
வளர்க தமிழ்ப்பண்பாடு!

# தமிழ்மொழி

எண்ணிறந்த அரும்பெரும் காவியங்களும் நுண்ணிய கருத்துக்களும், புண்ணிய பாடல்களும் நிறைந்த மொழியே தமிழ்மொழி. அதுவே எங்கள் அன்னைமொழி என்றபோதில் நாம் பெருமைப்படாமல் இருக்கமுடியுமா? பற்பல அறிஞர்கள் கூடி, சங்கம் அமைத்து, ஆராய்ந்து வளர்த்தமொழி தமிழ்மொழி.அதனால் இது சங்கத்தமிழ்—மங்காத்தமிழ் எனவும் போற்றப்படுகின்றது. இதன் சிறப்பை ஔவையார் விநாயகரை நோக்கி, சங்கத்தமிழ் மூன்றும் தா! என்பதிலிருந்து உணர்ந்துகொள்ள முடியும். இந்தச் சங்கத்தமிழானது இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது. வண்டமிழ், தண்டமிழ், செந்தமிழ், தேன்தமிழ், நற்றமிழ், பைந்தமிழ், மதுரத்தமிழ், அமுதத்தமிழ் , எனப் பலபெயர்கள் தமிழ்மொழிக்கு உண்டு.

தமிழ் என்றும் இளமை மாறாதது. முருகக்கடவுளுடன் தமிழை ஒப்பிட்டுக் கூறுமளவுக்குப் பேறுபெற்றது தமிழ்மொழி. இதனால் முருகக்கடவுளுக்குத் தமிழ்க் கடவுள் என்றும் பெயர் வழங்கப்படுகின்றது. முருகனுக்குப் பன்னிரு தோள்கள் ,பன்னிரு கைகள் அதேபோல தமிழில் உள்ள உயிர்எழுத்துக்கள் பன்னிரண்டு ஆகும். முருகனுடைய ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உள்ளன. எனவே ஆறு முகங்களிலும் பதினெட்டுக் கண்கள் இருக்கின்றன. இதேபோல தமிழில் மெய் எழுத்துக்கள் பதினெட்டு ஆகும். அடுத்து முருகனுக்கு ஆறு முகங்கள் உள்ளன. இதேபோல தமிழ் எழுத்துக்களில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற முப்பிரிவுகளுள்ளே ஒவ்வொன்றிலும் ஆறு எழுத்துக்கள் உள்ளன. அதாவது வல்லினத்தில் க்,. ச், ட், த், ப், ற் என ஆறு எழுத்துக்கள். மெல்லினத்தில் ங்,ஞ், ண், ந், ம், ன் எனவும் இடையினத்தில் ய், ர், ல், வ், ழ், ள், எனவும் எழுத்துக்கள் உள்ளன. இவ்வாறு முருகனுக்கும் தமி ழுக்கும் ஒப்புவமை உண்டு என அறிவோம்.

'தமிழ்' என்னும் சொல்லிலேயே வல்லினம், மெல்லினம், இடையினம், என்ற மூன்று பிரிவுகளைச் சேர்ந்த எழுத்துக்கள் இருப்பதை அவதானிக்கமுடியும். த—வல்லினம், மி—மெல்லினம், ழ்— இடையினம் என்ற மூவின எழுத்துக்களையும் கொண்ட பதமே தமிழாகும். ஒருவருக்குத் தாய்ப்பாலோடு ஊட்டப்படும் மொழியே

தாய்மொழி எனப்படுகின்றது. அதுவே எங்களுக்குத் தாய்மொழியாக அமைந்திருக்கின்றது. தமிழ்மொழியைச் சங்கம் அமைத்து வளர்த்த இடத்தைக் கூறும்போது, பாரதியார் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே ' என்றார். அம்மா என்பது நம் குழந்தையின் முதல் வார்த்தை. "அ" என்று வாயைத் திறந்து "ம் " என்று வாயை மூடி "மா " என்று வாயைத் திறந்தால் அம்மா வருகிறாள். அதாவது வாயைத் திறந்து மூடிப் பின் திறந்தால் அம்மா என்ற சொல் வருகின்றது.

இறைவன் நாயன்மார்களுக்குத் தமிழிலே அடிஎடுத்துக் கொடுத்தார் என்று எமது சமயநூல்கள் கூறுகின்றன. உதாரணமாக "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன் " என்று சேக்கிழார் பெருமானுக்கும், " பித்தா" எனத் தொடங்கிப் பாடு! என சுந்தரருக்கும் அடி எடுத்துக் கொடுத்தமையை நோக்கலாம். உமாதேவியார் ஊட்டிய பால் அருந்திய ஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே தமிழில் தேவாரம் ' பாடினார் ' என்று புராணவரலாறு உண்டு. இவற்றை நாம் நோக்கும் போது தெய்வத்தன்மை கொண்டது தமிழ் என்பது புலனாகிறது.

ஐம்பெருங்காப்பியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு பதினெண்மேல்க்கணக்கு , நீதிநூல்கள், அறநெறிப்பனுவல்கள், இதிகாச புராணங்கள், தேவாரங்கள், பிரபந்தங்கள், எனப் பலவகைப்பட்ட நூல்களின் பொக்கிஷமாக விளங்குவதுதான் எம் தமிழ்மொழி. தமிழ் என்ற மங்கைக்கு ஐம்பெருங்காப்பியங்கள் ஆபரணங்களாக இருக்கின்றன. தமிழ் மங்கையின் காலுக்குச் "சிலப்பதிகாரம் " கைக்கு அணியும் காப்பென "வளையாபதி" காதுக்கு " குண்டலகேசி" இடையில் அணிந்து கொள்ள " மணிமேகலை " கழுத்துக்கு மாலையாக " சீவகசிந்தாமணி" போன்ற ஆபரணங்களாக இக்காப்பியங்கள் துலங்குகின்றன.

சங்ககாலத்தில் நக்கீரர் போன்ற புலவர்களால் வளர்க்கப்பட்டு, மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு வந்து பின்னர் ஔவை, வள்ளுவர் உட்பட பல புலவர்களாலும் கவிச்சக்கரவர்த்திகளாலும் வளம் படுத்தப்பட்டு வந்தது நம் தமிழ்மொழி. இளங்கோவடிகள்,கம்பர் காலத்தில் தமிழ்மங்கை மெருகுடன் வளர்ந்து வரலானாள். காலத்துக்கேற்ற கோலம் சற்று மாறுவதுபோல காலம் செல்லச் செல்ல நம் தமிழ்மொழி பழைய இலக்கணத் தமிழிலிருந்து விடுபட்டு வளரத்தொடங்கியது. ஈழம் தந்த ஆறுமுகநாவலர் கடுந்தமிழை இலகுமயப் படுத்தி வைத்து, தமிழ் உரைநடையின் தந்தை எனப் போற்றப்படுகின் - றார். அவரைத் தொடர்ந்து பாரதியார் இலகு தமிழிலே கவிதைகள் புனைந்தார். இவ்வாறு காலவேகத்துக்கு ஏற்ப தமிழ்மொழி வளர்ச்சி பெற்றாலும் அது கன்னித்தமிழ் என்றே இன்றும் கூறப்படுகின்றது.

தமிழிலே பல தத்துவக்கருத்துக்கள், உயர் கருத்துக்கள் இருக்கின்றன என்பதை அறிந்த பல வேற்றுநாட்டறிஞர்கள் தமிழைக்கற்றுத் தமிழுக்கு இலக்கணம் வகுத்துள்ளனர். உதாரணமாக இத்தாலி நாட்டைச் சேர்ந்த கொன்சைன்டைன் பெஸ்கி என்பவர் வீரமாமுனிவர் என்ற தமிழ்ப்பெயரைச்சூடி, தேம்பாவணி, வேத விளக்கம், பரமார்த்தகுரு கதை, திருக்காவலூர்க் கலம்பகம், முதலிய நூல்களையும் இயற்றினார். தொன்னூல் விளக்கம், சதுரகராதி, போன்ற இலக்கண நூல்களைத் தமிழுக்கு எழுதிய அந்நியரும் இவரே. இவர் திருக்குறளை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்து எழுதினார் என்ப -தும் குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

இற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னே தமிழ்மொழி இந்தியா, இலங்கை உட்பட சில கீழைத்தேசங்களில் மட்டுமே ஒலித்துக்கொண்டிருந்தது. ஆனால் இன்று உலகமே வியக்கும் வண்ணம் தமிழ்மொழி ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா உட்பட்ட கண்டங்களில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. பாரதி கண்ட கனவு போல " தேமதுரத் தமிழோசை " உலகமெலாம் பரவி விட்டது. பாரதி இன்று உயிரோடு இருந்திருப்பின் இதைக்கண்டு இன்பமடைந்து இன்னும் பல பாக்கள் யாத்திருப்பான்.

இன்று தஞ்சம் கோரிவந்துள்ள எம்மவர்களால் தமிழ்மன்றங்கள், ஒன்றியங்கள், சங்கங்கள், அமைக்கப்பட்டும், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுவர் பாடசாலை அமைத்தும் தமிழ் பேணப்படுகிறது. தஞ்சம் கோரிவந்துள்ள நாம் எம் தாய்மொழியைப் பேணி வளர்த்து வருகின்றோம் என்பதை எண்ணி மகிழ்வடையவேண்டும். இன்று பலதரப்பட்ட ரீதியில் தமிழ்மொழி வாழ்கிறது. 300 ஆண்டுகளுக்கு முன்னர் ஜேர்மன் பாதிரி "பெப்ரிஷியஸ்" என்ற பெயருடையவர் இந்தியாவுக்கு வந்து மதம் மாற்றும்போது, தமிழைக் கற்று, தமிழ்நூல்களை எழுதினார் எனக் கூறப்படுகின்றது. இவர் ஐயந்திரிபறத் தமிழைக் கற்று இசைநயம்படைபின் பாடல்களையும் இயற்றினார். இவரும் தமிழ் இலக்கணம்பற்றி ஒரு நூலை இயற்றி அது முடியுமுன் 24.01.1791 ல் மரணமடைந்தார்.

ஒரு அந்நியநாட்டவர் தமிழகத்துக்கு வந்து தமிழ்த்தொண்டு செய்தாரென்றால் , ஏன் இங்கிருக்கும் நாம் எமது தாய்மொழியை வளர்க்கும் பணியில் ஈடுபடக் கூடாது? ஜேர்மன்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட "பெப்ரிஷியஸ்"தமக்கு அந்நியமொழியான தமிழைக் கற்றுத் தேர்ந்து தமிழை வளர்த்தார் என்று சொல்லும்போது, இங்கிருக்கும் நாம் தமிழுக்குத் தொண்டு செய்து வளர்க்காமல் விட்டோம் என்றால் நாம் பெரும் கேடு செய்தவர்களாவோம். எனவே நாம் எங்கு வாழ்ந்தாலும் எமது தாய்மொழியினை மறவாது போற்றி வளர்ப்பது எமது கடமையாகும்.

www.padippakam.com

11

# தாய்மொழிக் கல்வியின் அவசியம்

"தாய்மொழியைத் திறமையாகப் பயன்படுத்த அறியாத எவனும் பிறமொழியைத் திறமையாகப் பயன்படுத்திக்கொள்வதும் கற்றுக்கொள்வதும் கடினம் என அறிஞர் பெர்னாட்ஷோ கூறியுள்ளார். தாய்மொழிக் கல்வியின் அவசியம் என்ன? அது ஒருவனுக்கு எவ்வகையில் அவன் வாழ்க்கைக்கு உறுதுணையானது? போன்றவற்றுக்கான விடைகளை ஒருவன் அந்நிய நாடொன்றில் வாழும்போது முழுமையாக அறிந்துகொள்ள முடியும். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் சிறுவர் தமது தாய்மொழியை மறவாது கற்பது மிகவும் அத்தியாவசியமாகும்.

ஒரு தாய்க்கும் சேய்க்கும் உள்ள தொடர்பு, இணைப்பு, பந்தம் எத்தன்மையானதோ அத்தன்மையைப் போன்றதுதான் ஒரு பிள்ளைக்கும் அதன் தாய்மொழிக்கும் உள்ள தொடர்பு என்பதை மறுக்கமுடியாது. இதைச் சுருக்கமாகச் சொன்னால் தாயைப் போன்றதுதான் தாய்மொழி என்பதாகும். தாய்மொழியை எவனொருவன் மறக்கிறானோ, அது அவன் தன் தாயை , ஈன்ற அன்னையை மறப்பதற்கு ஒப்பான செயல் என்றே கூறமுடியும். தாயின் மூலமாக அவன் உதிரத்துடன் ஊட்டப்படும் மொழியாகிய இத் தாய்மொழி முதல்மொழி என்ற பெருமையையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. " குழந்தையின் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எவ்வளவு இன்றியமையர்ததோ அவ்வளவு இன்றியமையாததாக மனிதனின் மன வளர்ச்சிக்குத் தாய்மொழி விளங்குகின்றது. ஒரு குழந்தை தனது முதற்பாடத்தைக் கற்பது அன்னை என்ற அறிவாலயத்திலிருந்துதான். ஆகவே குழந்தையின் உளவளர்ச்சிக்கு தாய்மொழியை அன்றி, வேறொரு அந்நியமொழியை அவர்கள் மீது திணிப்பது தாய்நாட்டுக்குச் செய்யும் துரோகம் " என்று அழுத்தமாகக் கூறிவைத்தார் அண்ணல் காந்தியடிகள்.

ஆம்! இவை எவ்வளவு உண்மையான கருத்துக்கள்! ஐதார்த்தமான சிந்தனைகள்!! உயிர்மூச்சுடன் தாய்மொழி ஒன்றியிருக்கும் போது, அதைப் புறக்கணித்து அந்நிய மொழியைக் கற்று, அறிஞராகலாம் , பெரியாராகலாம், என்று எண்ணுவது தவறு. தாய்மொழியை மறந்து ஒரு பிள்ளை அந்நியமொழியைக் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட்டால் பூரணமான அறிவுவளர்ச்சி

படிப்பகம்

www.padippakam.com



பெற்றுவிட்ட பிள்ளை எனக்கூற முடியாது. தாயை வெறுத்துவிட்டு மாற்றாந்தாயுடன் வாழும் ஒரு பிள்ளையின் மனவளர்ச்சியைப் போன்றதாகவே இது இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

நாம் வேற்றுநாட்டில் வாழ்வதால் எமது சிறார்கள் வேற்றுமொழிக் கல்வியைப் பாடசாலையில் கற்றுவருகின்றார்கள். துரதிஷ்ட வசமாக அவர்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப வேற்றுமொழியைக் கற்பதனால் அன்னைமொழி அவர்களுக்கு அந்நியம் என எண்ணக்கூடாது. ஒவ்வொரு பிள்ளையும் தான் தான் வாழும் நாட்டுக்கு ஏற்ப அந்தந்த மொழியைக் கற்பது, அம்மொழியில் அறிவைப் பெறுவது என்பவை சாதாரண விடயம். ஆனால் குடியேறிய நாட்டு மொழியுடன் தாய்மொழி அறிவும் இருக்கும்போது தான் உண்மையான அறிவுப் பூரணத்துவம் பெற்ற பிள்ளையாக வளரமுடியும். தாய்மொழியை மறந்து , வெறுத்து, அந்நியமொழியில் எத்தகைய தேர்ச்சி பெற்றிருப்பினும் அக்கல்வி குடத்துள் விளக்குப் போன்றதாகும்.

மொழி என்பது கருத்துவாகனம் மட்டுமன்றி தன் இன நாகரிகத்தினதும் , பண்பாட்டினதும் இருப்பிடக் கொள்கலமாகும். தாய்மொழி தெரியாதவனுக்குத் தன் இனத்து நாகரிகம் தெரியாமற் போகின்றது. தன் பண்பாட்டின் பண்பு புதைந்து போகின்றது. இப்படியான ஒருவனை நாம் முழுமனிதன் எனலாமா? சிந்திக்க வேண்டிய விடயம். ஒருவர் தாய்மொழி தெரியாமல் தாய் வரைந்த கடிதத்தையோ, மனைவி எழுதிய மடலையோ வாசித்து விளங்கிக் கொள்ள இன்னொருவர் உதவியை நாடுவது அல்லது ஒரு மொழி பெயர்ப்பாளரைத் தேடுவது எவ்வளவு கேவலம்? என்பதை உணர்ந்து பார்த்தாலே தாய்மொழியின் அத்தியாவசியம் தானாகப் புரியும்.

தாய்மொழிக் கல்வியின் அவசியம் புரியாமல் வளரும் பிள்ளைகளையும், தாய்மொழியைப் போதிக்க விரும்பாத பெற்றோர்களையும் எண்ணும்போது மிகவும் வேதனையாக உள்ளது. இவர்கள் தமது தவற்றினை உணரும் காலகட்டம் வெகுதூரத்தில் இல்லை. தாய்மொழியைக் கற்பது எந்தவொரு பிள்ளைக்கும் கடினம் அல்ல. தாய்மொழி தெரியாமல் சிலைபோல தலைகுனிந்து நிற்பதுதான் கடினமான காரியம் எனலாம். தாய்மொழி தெரியாத ஒரு

பிள்ளைக்குத் தாய்நாடும் அந்நிய நாடு என்றே கூறமுடியும். ஏனெனில் தாய்மொழியாம் எமது தமிழ்மொழி தெரியாமல் ஒரு பிள்ளை தமிழீழத்தில் .... தமிழ்மண்ணில் மற்றவர் பேசுவதை விளங்கிக்கொள்ளத் திராணியற்று நிற்கிறது என்றால் அதன் அர்த்தம் என்ன? மொழியைப் புரிந்துகொள்ள முடியாத அந்நிய நாடொன்றில் நிற்கிறது

www.padippakam.com



என்றுதானே அர்த்தம் கொள்ள முடியும். பெற்றோர்களே! இத்தகைய துர்ப்பாக்கிய நிலை எமது பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடாது. இதைத் தினம் தினம் சிந்தித்து, தாய்மொழிக் கல்வியின் அத்தியாவசியத்தைப் புரிந்து அவ்வறிவைப் புகட்டுவது எம் தலையாய கடனாகும்.

தாய்மொழியில் எத்தனையோ அறிவுக் களஞ்சியங்கள், நீதிநூல்கள், பண்டைப் பெருமை கூறும் பனுவல்கள், எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. இவற்றை நாம் படித்துப் பயன் பெற வேண்டாமா? பண்டைத் தமிழராம் நம் மூதாதையர் வாழ்வு நெறிகளை அறிய வேண்டாமா? அதற்கு என்ன வழி? ஒரேயொரு வழிதான் உண்டு. நம் தாய் மொழியைக் கற்று அவ்வறிவின் மூலம் அறிவுக்களஞ்சியங்களை எம் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

எத்தனையோ அந்நியநாட்டு அறிஞர்கள் தமது தாய்மொழியை மட்டுமன்றி எமது தமிழ்மொழியைக் கற்று, அதற்கு இலக்கணமும் வகுத்துள்ளனர். எமது நாட்டு அறிஞர்கள், பெரியார்கள் பலர், பல கஸ்டங்களை எதிர்நோக்கி, அவற்றை முறிய - டித்துத் தமிழை வளர்த்தனர்: தமிழுக்குச் சேவை செய்தனர்: தமிழுக் - காக மடிந்தனர். வசதியான வாழ்க்கையை இங்கே வாழும் நாம் எமது தாய்மொழிக்குத் தொண்டு செய்யாவிட்டாலும், இங்கே அம் மொழியைக் கற்காமல் இருப்பது நீதியா? இது தாய்மொழியை நிந் திப்பது போலாகிவிடுகின்றது. தமிழன்னை பெற்றெடுத்த மைந்தர்கள் தமிழை உதாசீனப்படுத்தலாமா?

" தமிழுக்கும் அமிழ்தென்று பேர் - அந்தத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர் ...................... என்று புரட்சிப் பாவலன் பாரதிதாசன் கூறியது போன்று, எமது தாய்மொழியை எமது உயிரெனக் கொண்டு அதனைப் போற்றுவோம்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும் .................. என்ற பாரதியின் விருப்புக்கு இணங்க உலகமெலாம் தமிழின் நாதம் ஒலித் திடச் செய்வோம்.

எத்தனைமொழியை எமது சிறுவர்கள் கற்றாலும் அத்தனை மொழியுடன் முதல்மொழியான தாய்மொழியையும் ஐயந் திரிபறக்கற்க வேண்டும். அத்துடன் தாய்நாட்டுக்கும் தாய்மொழிக்கும் நற்புகழ் தேடிக்கொடுக்க வேண்டும்.

வாழ்க தாய்மொழி!
வாழ்க தமிழ்மொழி!!

படிப்பகம்

# தமிழர் திருநாள்

தமிழ்க்குடிப் பெருமக்களால் ஆண்டு தோறும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவரும் திருநாட்களுக்குள் மிக முக்கியமானவை புதுவருடப்பிறப்பும் தைப்பொங்கலும் ஆகும்.இத்திரு நாட்கள் எமது கலாச்சாரம் பண்பாடு என்பவற்றை எடுத்தியம்புவது மட்டுமன்றி, இந்துசமயத்தோடு தொடர்புபட்டு , சமயச்சார்புடையதாக வும் இருக்கின்றன.இதனால் இத்திருநாட்கள் பண்டைத்தமிழர் 'வாழ்வு முதல் இன்றைய தமிழர்கள் வாழ்வுவரை முக்கிய பண்டிகைகளாக இடம்பெற்று வருகின்றன. இதை இன்னும் நாம் கூர்ந்து நோக்கின் எமது தாய்நாட்டில் மட்டுமல்ல, உலகநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களா லும் தற்போது கொண்டாடப்பட்டு வருகின்றன என்றால் இத்திருநாட் களின் பெருமையை மேலும் எடுத்துக் கூறவேண்டிய அவசியம் இல்லை.

தமிழர் திருநாட்களிலே சமயரீதியாகவும் பருவகால மாற்றங்களோடும் வானிலைப்புவியியலோடும் தொடர்புடையதாக இருப் பது புத்தாண்டுத் திருநாளாகும். தமிழர் திருநாள் என்னும் தலைப் பிலே புத்தாண்டுத் திருநாள் பற்றி ஈண்டு நோக்குவோம். எமது நாடு ஒரு விவசாய நாடாகும். விவசாயத்தை நம்பியே எமது மக்களின் ஜீவாதாரம் அமைந்துள்ளது என்று கூறினும் மிகையாகாது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் பூமி விளைந்து, நுங்கு கனிந்து, மலர் கள் மலர்ந்து குலுங்கிக் காற்றிலசைந்து மனதுக்கு மகிழ்வூட்டும் இள வேனிற்காலம் சித்திரை மாதத்திலே ஆரம்பமாகிறது. இந்த மாதத்தில் பொதுவாக மக்கள் மகிழ்வுடன் இருப்பார்கள். அத்துடன் சூரியன் மேடராசியிற் புகும்போது தமிழ்ப்புத்தாண்டு பிறக்கிறது என்று கணிப் பிட்டுள்ளனர். இதேநேரத்தில் தமிழகத்தின் மையமாக விளங்கும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் மூலஸ்தானத்தை வடக்கு நோக் கிச் செல்லும் சூரியன் கடக்கிறது. இந்நிகழ்ச்சியிலே வானியற்கலையும் சமயமும் ஒன்றிணைந்திருக்கின்றன என்று எமது சமயப்பெரியார்கள் கூறியுள்ளனர். இக்கூற்றினை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா?இல்லையா என்பது சர்ச்சைக்குரிய விடயம். அதை ஆராய்வதற்கு இது தகுந்த இடமல்ல. அவ்வாறிருந்தும் புத்தாண்டு சித்திரை மாதமாம் இளவேனி லிலே பிறக்கிறது என்பது நம்மவர்கள் ஏற்றுக்கொண்ட முடிவு என லாம்.

www.padippakam.com



பூமாதேவி புதுவண்ணப் பட்டாடை கட்டி அழகுமயிலா கக் காட்சியளிக்கும் வேளையிலே, அரும்புகின்ற புதுவருடத்தின் விடியலிலே மக்கள் பெருமகிழ்ச்சியுடன் துயில்நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவர். அதிகாலையிலே மருத்துநீர் வைத்து மங்கல நீராடிப் புத்தாடை அணிவர். சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை குதூகல மாகக் காட்சியளிப்பர். புத்தாடை அணிந்தவராய் பூசைத்திரவியங்களு டன் கோவில்களுக்குச் சென்று வழிபடுவர். அன்றைய தினம் ஆலயங் களில் விசேட பூசைகள் நடைபெறும். ஆலயத்தின் சந்நிதியிலே, பிறந் துள்ள புதுவருடத்தில் செய்வன யாவும் நலமே அளிக்கவேண்டும் என இறைவனிடம் வேண்டித் தொழுவார்கள். பின்னர் புதுவருடப்பி றப்புக்கு என அன்று அதிகாலையில் தயாரிக்கப்பட்ட பலகாரவகைகள், விஷேட உணவு வகைகள், என்பவற்றை உற்றார் உறவினர்களுடன் கூடி அருந்தி மகிழ்வர். வருடப்பிறப்புக்கு என விஷேடமாக ஒரு சம் பல் நம்முன்னோரால் தயாரித்து உண்ணப்பட்டது. வேப்பம் பூவையும் மாங்காயையும் , சர்க்கரையையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்த சம்பல் புத்தாண்டு உணவுவகைகளுடன் சேர்த்துக் கொள்வது பண்டைத் தமிழர் மரபு. இதன் காரணம் ஒரு முக்கியமான வாழ்க்கைத் தத்துவத்தைப் புலப்படுத்துவதாகவே இது அமைந்துள்ளது. மக்கள் வாழ்க்கையில் கைப்பும், புளிப்பும் , இனிப்பும் மாறிமாறி வருவது இயல்பு. அவற்றைச் சமமாக மதிக்கவேண்டும் எனவும், பிறந்துள்ள புதுவருடத்தில் எல்லாவற்றையும் சமாளித்து வாழ்வோம் எனவும் உறுதி கொள்வதற்காகவே இந்த சம்பல் உண்ணப்பட்டது.ஆனால் தற்காலத்தில் இம்முறைகள் அருகி விட்டன.

புண்ணியகாலமான புதுவருடத் தினத்திலே புதிய தொழிலை ஆரம்பித்தல், கைவிஷேடம் வழங்கல், போன்ற மங்கல காரி யங்கள் செய்யப்படுகின்றன. அடுத்து நண்பர்கள், உறவினர்கள், வீடுகளுக்குச் சென்று புத்தாண்டு வாழ்த்துக்களைக் கூறித் தாமும் அவர்களிடமிருந்து வாழ்த்துக்களைப் பெற்று மகிழ்வர். இவ்வாறாக புத்தாண்டுத் தினத்தில் உள்ள மகிழ்ச்சியும் இனிமையும் தொடர்ந்து சில நாட்கள் வரை மக்கள் மனதில் நிறைந்து நிற்கவே, அவர்களது வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். இத்தினங்களிலே கலை விழாக்கள், விளையாட்டுக்கள் என்பன ஆங்காங்கே நடைபெறும்.

தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவரும் இதே தினத்தில் புத்தாண்டுத் தினத்தைக் கொண்டாடுகின்றார்கள். சிங் களவர் இத்திருநாளைக் கொண்டாடினாலும் தமிழர்களின் பாரம்பரிய

படிப்பகம்

பண்பாட்டுத் திருநாளே இப்புது வருடம் ஆகும். நமது நாட்டில் மட்டுமன்றி இந்தியத் தமிழ்மக்களாலும் , ஏனைய நாடுகளில் வாழும் தமிழ் மக்களாலும் கொண்டாடப்படுவதால் இது தமிழருடைய திரு நாளே எனக் கூறமுடியும். அந்த அடிப்படையிலேயே இன்று ஜேர்மனியிலும் தற்போது புதுவருடத்தை மக்கள் சிறப்பாகக் கொண்டாடி, கலைநிகழ்ச்சிகளையும் நடாத்தி வருதலை நாம் காணக் கூடியதாயுள்ளது.

தமிழர்களாகிய நாம் எங்கு வாழ்ந்தாலும் எமது கலை, கலாச்சாரம், மொழி என்பவற்றைப் பேணி , அதற்கு விழா எடுத்துப் போற்றுவது எமது கடமை. சிறியோர்கள் பெரியோர்கள் அனைவரும் எமது மண்ணை மறவாது, அந்நிய மண்ணிலே எமது மண்ணின் பெருமையை நிலைநிறுத்தி, புத்தாண்டு கொண்டாடுவது எமக்கு மிகவும் பேரின்பத்தைக் கொடுக்கும் செய்கை எனலாம். தொடர்ந்து இவ்வாறான செயல்நடவடிக்கைகள் இங்கு மட்டுமல்ல அகிலவுலகிலும் நடைபெற்று தமிழின் பெருமையும் தமிழ்ப்பண்பாடும் நிலைக்க வழி சமைப்போம்.

## மாணவர் கவனத்துக்கு..........

தமிழ்க்கணனியின் எழுத்துவடிவத்தில் ஆக்கப் பட்ட இந்நூலில் ஆங்காங்கே சில இடங்களில் சொல்லிடைவெளிகள் ஏற்பட்டுள்ளன. இச்சொற்களை இனங்கண்டு அச்சொற்களின் பொருளை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

www.padippakam.com



# நவராத்திரி

இவ்வுலக வாழ்க்கை இன்பமயமாக அமையவேண்டும்: அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் உதவ வேண்டும்: என்பது இந்துசமயப் பேரறிஞர் பலரின் கருத்தாகும். இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்துக்கள் ஆண்டு தோறும் பல பண்டிகைகளை , விஷேட தினங்களைக் கொண்டாடுகிறார்கள்: அத்துடன் விரதங்களை அனுட்டித்து இறைவன் இன்னருளைப் பெறுவர்.

உலகத்தையும் உயிரினங்களையும், சடப்பொருள்களையும் இறைவன் தன் சக்தியினால் தோற்றுவிக்கின்றான். அச்சக்தியை உலக மாதாவாக இந்துக்கள் வணங்கி அவளுக்கு விழாவெடுக்கின்றனர். இவ்வாறாகச் சக்திக்கு இயற்றும் விஷேட விழாவே நவராத்திரி எனப் படுகிறது. சக்தி விரதங்களிலே தலையானது நவராத்திரி விரதமாகும். இது புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி ஈறாக ஒன் பது நாட்கள் அனுட்டிக்கப்படும். அதாவது அமாவாசைக்கு அடுத்த நாட்தொடக்கம் ஒன்பது இரவுகள் நவராத்திரி எனக் கொண்டாடப்படு கிறது. ஆகவே நவராத்திரி என்பதன் பொருள் ஒன்பது இரவுகள் ஆகும். இந்தியாவிலே பத்தாம் நாளான விஜயதசமியையும் சேர்த்து " தசரா" என்ற பெயர் சூட்டி அனுட்டிப்பர். தசம் என்பது பத்தைக் குறிக்கும். இந்தப் பத்து நாட்களையும் சக்தியின் நோன்பு நாட்களாகக் கருதி " தசரா " என்றழைப்பது குறிப்பிடத்தக்கது.

வீரத்தைத் தரும் சக்தியைத் துர்க்கை எனவும், செல்வத்தைத் தரும் சக்தியை இலக்குமி எனவும், கல்வியைத் தரும் சக்தியை சரஸ்வதி எனவும் இந்துக்கள் போற்றி வணங்குகின்றனர். நவராத்திரிக் காலத்தில் இந்த முத்தேவியருக்கும் விழா எடுக்கின்றனர். முதல் மூன்று இரவும் துர்க்கை வழிபாட்டிலும், அடுத்த மூன்று இரவும் இலக்குமியை வழிபாடு செய்வதிலும் இறுதி மூன்று இரவும் கல்வித்தெய்வமாம் கலைமகள் வழிபாட்டிலும் ஈடு பட்டு அவர்தம் கடாட்சத்தை வேண்டி நிற்பர். ஒன்பதாம் நாள் ஆயுத பூசை நிகழும். தத்தம் தொழில் செய்வதற்குரிய ஆயுதங்கள், பயன்படுத் தும் கருவிகள், சாதனங்கள், கற்றற்குரிய நூல்கள், முதலியவற்றைப் பூசையில் வைத்து வழிபடுவர். இவ்வாறு நடாத்தும் ஆயுதபூசையின் நோக்கம் " செய்யும் தொழிலே தெய்வம்" என்ற தத்துவத்தை விளக்கு வதற்கான வழிபாட்டுமுறை எனலாம்.

www.padippakam.com



நவராத்திரி ஒன்பது நாட்களும் காலையில் நீராடித் தூயவுள்ளத்தினராய் தேவியைப் பூசிப்பர். தினமும் ஒன்றுமுதல் பத்து வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளைக் குமாரி, கல்யாணி, ரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா, சீதா, ஆகிய தேவியின் அம்சங்களாகப் பாவித்து பூசனை செய்யும் வழமை இந்தியாவிலே பரவலாக உண்டு. இத்தினங்களில் பலர் விரதமிருந்தும், உபவாசம் இருந்தும் , உள்ளும் புறமும் தூய்மை உடையோராய் அன்னையின் அருளை வேண்டி நோன்பிருப்பர். தேவி தோத்திரப் பாடல்கள், சகலகலாவல்லி மாலை, அபிராமியந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், ஆகிய தோத்திரப் பாடல்களையும், திருமுறைகளை யும் பாராயணம் செய்து வழிபட்டு, உலகமாதாவின் அருளை வேண்டி நிற்பர்.

நவராத்திரி விழாவை இந்துக்களின் கலைத் திருவிழா என்றே கூறலாம். சிறப்பாக, நவராத்திரி தினத்தின் இறுதி மூன்று நாட்களும் கலையம்சத்திற் சிறந்து விளங்குகின்றன.வாழ்க்கை என்பதும் ஒரு கலையே. அழகுணர்ச்சியும் இறையுணர்வும் இந்நாட் களில் ஏற்படுகின்றன. இவ்விழா வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள், நூல்நிலையங்கள், வாசிகசாலைகள், வியாபார நிலையங்கள், கலைமன்றங் கள், போன்றவற்றில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாட்களில் பேச்சுப்போட்டிகள், சொற்பொழிவுகள், நாடகம், கவியரங்கம், பட்டிமன் றம், நடனம், போன்ற கல்வி கலை அம்சங்கள், இடத்துக்கு இடம் வேறுபட்ட வகையில் நடைபெறுகின்றன.

பத்தாம் நாள் "விஜயதசமி " என அழைக்கப்படு கின்றது. தமது தொழிலை வெற்றிகரமாக நடாத்துவதற்குரிய புண்ணி யநாளாக இத்தினத்தைக் கருதி, வித்தியாரம்பம், ஏர் பூட்டல், புதுக்கரு மங்கள் என்பவற்றை ஆரம்பித்து வைப்பர். இதனால் செய் தொழில் குறைவின்றி நிறைவேறும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

பண்டைக் காலத்தில் அரசர் பத்துநாட்களும் தேவிபூசை செய்துமுடித்த பின்னர் கவிஞர்கள், கல்விமான்கள், வித்து வான்கள், ஆகியோரை அழைத்துக் கௌரவிப்பது வழக்கம். விஜயத சமி அன்று அரசன் சிம்மாசனம், குடை, சாமரை, முதலியவற்றையும், யானை குதிரைகளையும், பூசிப்பார்கள். மல்யுத்தம், வாணவேடிக்கை விளையாட்டுக்கள், இரதங்களினதும், குதிரைகளினதும், அணிவகுப்பு, ஆகியனவும் நடைபெறும். விஜயநகர மன்னரும் மைசூர் மன்னரும் நவராத்திரி வைபவத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடினர் என்று பண்டைய வரலாறு கூறுகின்றது.

www.padippakam.com



விஜயதசமியன்று ஆலயங்களில் நிகழும் ஒரு முக்கியமான பூசை " மானம்பூ" (மகா நோன்பு) அல்லது மகிடாதூரனைச் சங்காரம் செய்தமையைக் குறித்து நடைபெறும் பூசையாகும். ஆலயங்களில் வன்னிமரம், அல்லது வாழை மரத்தை நாட்டி மகிடாதூரன் என்ற பெயருடைய அதூரனைத் தேவி சங்காரம் செய்த நிகழ்ச்சிக்கு ஒப்பாக இம்மரத்தை வெட்டி வீழ்த்தி திருவிழா செய்வர். மகிடாதூரனைக் கொன்ற சம்பவமே மகிடாதூர சங்காரம் எனப்படும். மகிடாதூர சங்காரம் என்பது உண்மையில் ஆன்மாக்களைப் பிடித்து வரும் மும்மலங்களை அழித்தலைக் குறிக்கும். எனவே ஒன்பது நாட்களும் தேவியை வழிபட்டுப் பெற்ற சக்தியினால் அவற்றினை அழித்து விடமுடியும். அதனால் ஞானம் கைகூடும் என்பது உண்மை. இதனாலேயே பத்தாம் நாள் விஜயதசமி என்று சொல்லப்படுகிறது.

இந்துக்கள் நவராத்திரி தினத்தில் முறையாக நோன்பிருந்து பராசக்தியின் அருளினைப் பெறவேண்டும். வாழ்வில் இனிமையும் நிம்மதியும் பெற்று மனத்தை ஒருநிலைப்படுத்திய தெய்வ சிந்தனையில் வாழ இத்தகைய சமயதினங்கள், விரதங்கள் அமைந்துள்ளன. நவராத்திரி தவிர சிவராத்திரி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி, திருக்கார்த்திகை, கந்தசஷ்டி, போன்ற விரதங்கள் சமய அடிப்படையில் அமைந்த வாழ்க்கைமுறையை வலியுறுத்துகின்றன. இத்தினங்களை அனுட்டிக்கும்போது " நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த மனப்பான்மைக்கு இணங்க தூயமனத்தினராய் இறையுணர்வுடன் வாழ்தல் அவசியம்.

நவராத்திரி தினத்திலே நாம் சக்தியின் இன்னருளைப் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ அவனது பாதகமலங்களைப் பூசிப்போமாக.

www.padippakam.com



# மனிதனும் விஞ்ஞானமும்

மனித நாகரிகவளர்ச்சியின் ஆரம்பகட்டங்களாக கைகளின் உதவியுடன் ஏதாவது பொருட்களைக் கருவிகளாகப் பயன்படுத்தல், மொழிவளர்ச்சி சிந்தனை வளர்ச்சி ஆகியன இருந்தன என்று நாகரிகவியல் கூறுகின்றது. இவ்வாறாக வளர்ச்சி பெற்ற இன்றைய மனிதனின் அபரிதமான வாழ்க்கை முன்னேற்றத்துக்குக் காரணம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் என்றால் மிகையாகாது. சந்திரனையும் சூரியனையும் நெருப்பையும் வணங்கிய மனிதன் வாழ்ந்தது ஒருகாலம். சந்திரனிலேயே காலடியைப் பதித்துவிட்ட மனிதன் வாழும் காலமே இன்றைய விஞ்ஞானயுகம் ஆகும். விஞ்ஞானமும் மனிதனும் இணைந்ததன் பிரதிபலிப்பையும் அதன் தாக்கங்களையும் இன்று நடைமுறையிற் காண்கிறோம்.

நாட்டின் முன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொருவனும் விஞ்ஞானத்தினால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைபற்றிச் சிந்திக்காமல் இருக்கமுடியாது. விஞ்ஞானத்தி - னால் பலவிதமான நன்மைகள் ஏற்படுகின்றன. மனிதசக்தியைக் குறைத்து விஞ்ஞானமே இன்று சகலவேலைகளையும் செய்யத் தொடங்கியதனால் மனிதன் சௌகரியமாக வாழக்கூடியதாக இருக்கின் - றது. இயற்கையோடு போராடி வாழவேண்டிய ஒரு கஸ்டமான சூழ்நிலையிலிருந்து மனிதன் தப்பிவிட்டான். ஏன்! நாம் தப்பிவிட்டோம் என்றும் சொல்லலாம். இருந்த இடத்திலேயே யாவற்றையும் செய்துமுடிக்கக் கூடிய அத்தனை வசதிகளையும் இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானம் செய்துகொடுக்கின்றது என்றால் விஞ்ஞானத்தின் பயன்பாடுகள்தான் என்னே! இதனாலன்றோ இன்று உலகம் வெகுவாகச் சுருங்கிவிட்டது! என்று கூறப்படுகின்றது.

விஞ்ஞானம் மனித வாழ்க்கைக்கு முன்னேற்றமான பல நன்மைகளைத் தான் செய்கின்றது என்று கூறமுடியாது. வாழ்க்கையை அழித்துவிடக்கூடிய சக்தியையும் விஞ்ஞானம் கொண்டுள்ளது என்பதை எவரும் மறுக்கமுடியாது. விஞ்ஞானம்!!! அது நன்மையையும் பயக்கும் : தீமையையும் பயக்கும். அதை மனிதன் பாவிக்கும் திறமையை, சூழ்நிலையை , காலத்தைப் பொறுத்துத்தான் அதன் பயன் அவனுக்குச் சாதகமாக அமையும். மனிதன் பயன்படுத்தும் சூரியசக்தியைப் போன்றது விஞ்ஞானம்.சக்தி நல்லதா? கெட்டதா? என்பது கூறமுடியாத ஒன்று. இந்த இரண்டையும் செய்

யக்கூடிய வல்லமையைக் கத்தி கொண்டுள்ளது. கத்தியின் குணம் கத்தியை உபயோகப்படுத்துபவனைப் பொறுத்திருக்கிறதேயன்றி கத்தியைப் பொறுத்ததன்று. கத்தியைக்கொண்டு நற்காரியங்களையும் செய்யலாம். உயிரையும் போக்கலாம். இதேபோன்றது தான் விஞ்ஞானம் ஆகும்.

இன்று விஞ்ஞானம் மனிதனுடன் பின்னிப் பிணைந்துவிட்டது. அல்லது மனிதனை ஆக்கிரமித்துவிட்டது என்றும் கூறலாம். தம்மால் எதுவும் செய்யமுடியும் என்ற கொள்கை பரவிவருவதற்கு முக்கிய காரணம் விஞ்ஞான வளர்ச்சியே. சகல துறைகளிலும் இன்று விஞ்ஞானம் புகுந்துவிட்டதால் மனிதனால் செய்யமுடியாதது எதுவும் இல்லை என்ற நிலை வந்துவிட்டது. எத்தனையோ பல விந்தைகளை, தொழில்நுட்பங்களை, இயற்கையை வெல்லும் சக்திகளை ஏற்படுத்தி மனிதன் விஞ்ஞானத்துடன் இணைந்துவிட்டான். கூருங்கக்கூறின் பரிசோதனைக் குழாயில் கருவை உருவாக்கி வெற்றி கண்டான் மனிதன். இதயத்தை மாற்றியும் செயற்கை இரத்தக் குழாய்களை மாற்றியும் மனிதனின் ஆயுளை நீடிக்கச் செய்கிறான். ஆனால் ஒரு உயிரை செயற்கைப் பொருட்களால் உற்பத்தி செய்ய முடிவதில்லை. இறந்த உயிரை மீட்டுக்கொள்ள முடிவதில்லை. இந்த ஒன்றிலே விஞ்ஞானம் தோற்றுவிடுகின்றது. இங்கேதான் விஞ்ஞானத்துக்கும் மனிதனுக்கும் மேலான ஒரு சக்தி உண்டென ஏகக் குரலாக ஏற்கப்படுகின்றது.அதுதான் உருவமற்று எங்கும் வியாபித்து நிற்கும் இறைசக்தி ஆகும்.

விஞ்ஞானத்தினால் பல அழிவு நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. அவற்றுக்கும் விஞ்ஞானம் கைகொடுக்கின்றது என்பது மாறாத உண்மை. உதாரணமாக உலகெங்கும் நடக்கும் போரினிலே புதிய கண்டுபிடிப்புகளான அணுவாயுதங்கள், அணுகுண்டுகள், பீரங்கிகள், நச்சுப்புகைவிசைக் கருவிகள் முதலானவைகள் உலகை அழித்துவிடுவதில் செயற்படுவது கண்கூடு. விஞ்ஞானம் மனிதனுக்கு உதவி செய்து அன்றாடம் அவன் வாழ்வில் இணைந்துவிட்ட சூழ்நிலையில் பல பாதகமான செயல் நடவடிக்கைகளையும் செய்து மனிதவாழ்வின் அழிவுக்கும் காரணமாக விஞ்ஞானம் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். எனவே விஞ்ஞானத்தை மனிதன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் புகுத்தவேண்டும்.

கல்லோடு கல் தேய்த்து, தடியோடு தடி தேய்த்து தீ மூட்டிய மனிதன் இன்று மின்சாரத்தில் தீ மூட்டுகிறான். மின்னொளியால் இரவைப் பகலாக்குகிறான் என்றால் மனிதனுடன் இணைந்து

www.padippakam.com



செய்யும் புதுமைகள் தான் என்னே! சொல்லிட முடியுமா?
விஞ்ஞானம் மனிதவாழ்க்கையின் மேம்பாடு : விஞ்ஞானம் நாட்டு முன்னேற்றத்தின் குறியீடு : விஞ்ஞானத்தின் பயன்பாடு இன்றேல் மனிதன் கற்காலத்தவனே.

விஞ்ஞான வளர்ச்சியின் உச்சத்தினால் மனிதன் நாஸ்திகக் கொள்கைகளில் சபலம் கொள்ளாது நன்னெறியிற் சென்று, விஞ்ஞானத்தை நல்ல துறைகளிற் பயன்படுத்தி தம் வாழ்வையும் நாட்டையும் உலகையும் முன்னேற்றுவிக்க வேண்டும்.

விஞ்ஞானமே நல்லதைச் செய்!
வீணே உலகை அழிக்க எண்ணாதே!

படிப்பகம்

# இன்பத்தமிழில் இலக்கியச்சுவை

மனிதன் படைத்துக் கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச்சிறந்தது மொழியாகும். பேசுவதற்கும் எழுதுவதற்கும் உரியதாக மனிதன் படைத்துக் கொண்ட மொழி இல்லையாயின் இன்றைய நாகரிக வளர்ச்சியே இல்லை எனலாம். அந்த வகையில் தோன்றித் தொன்மையானதும் இனிமையானதுமாக விளங்கும் மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகும். இந்த மொழியை அடிப்படையாகக் கொண்டு தமிழின் சொற்கள் என்னும் கற்களால் அழகும் இனிமையும் ததும்பக்கட்டப்படும் கட்டிடம் எனவும் மனித இனத்தின் அனுபவங்களைக் கலை நயத்தோடு எடுத்துரைப்பது எனவும் தமிழிலக்கியத்துக்கு இலக்கணம் கூறப்படுகிறது. இதுவே கலைகளில் சிறந்தது என்பது கலை வல்லோராலும், மொழி வல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவு எனலாம். இந்த இலக்கியம் தரும் சுவை எமது மொழியிலே எத்தகைய மெய்ப்பாடுகளைப் (உணர்வுகளை) பிரதிபலிக்கின்றது என்பதைச் சற்று நோக்குவோம்.

புலன்களுக்கும் புலன்களின் வாயிலாக மனதுக்கும் இன்பம் தருவதைக் குறிக்கும் உணர்வுதான் சுவை என்றனர் முன்னோர். வடமொழியில் இது ரசம் எனப்படுகிறது. கலைதரும் இன்பத்தையே சுவை என்றும் வாழ்க்கையில் உள்ள அனுபவத்துக்கு ஏற்ப அச்சுவையைப் பல்வகைப் பாகுபாடு செய்துள்ளனர். ஆனால் தொல்காப்பியனார் அவை புலப்படும் வகையை விளக்குவதற்காக எட்டுச் சுவை என்றார். அவையாவன............

" நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப --

இந்த எட்டும் வாழ்க்கையில் வெவ்வேறாக இருப்பினும் கலைத்துறையில், கலைத்துறையில் இவை யாவும் அளிக்கும் பயன் ஒன்றே எனவும், அதுவே இலக்கியம் தரும் இன்பம் எனவும் செப்பியுள்ளனர். இத்தகைய சுவைகளைத் தாங்கியே தமிழில் உள்ள இலக்கிய நூல்கள் 'யாவும் வெளிவந்து படிப்பவர் மனதுக்கு இன்பம் அளிக்கின்றன. படிப்பவரும் ஆசிரியரின் உணர்வைத் தாம் பெற்றுக்கொண்டு, இலக்கியத்தைப் படித்து இன்புறுகின்றனர். புலன்களுக்கு இன்பம் தருவனவற்றை எல்லாம் அழகு எனக் கூறுவது இலக்கியம். ஓவியத்திலும் சிற்பத்திலும் மட்டுமல்லாமல் இசையிலும் இலக்கியத்திலும் அழகு உண்டு. உணர்ச்சிக்கு ஏற்றவாறு பொருத்தமாயுள்ள ஒலிநயம், சொல்லமைப்பு, கற்பனைத் திறன், சொல் அலங்காரம் என்பன வேறுபடும்போது இலக்கியத்தில்

சுவைகள் வேறுபடுகின்றன. நாம் உணவினை உண்ணும்போது நாக்கினால் அதன் சுவையை உணர்கிறோம். ஆனால் இலக்கியத்தில் உள்ள சுவையை அறிவதற்குத் தமிழறிவும் இரசனை மனப்பயிற்சியும் இருக்கவேண்டும். "தமிழறியான் சுவையே அறியான்" என்பது பாவேந்தர் பாரதிதாசனின் கருத்தாகும்.

தமிழிலே வல்லோசை , மெல்லோசை, இடையோசை என மூன்று ஓசைகள் உண்டு. வல்லோசையில் உள்ள "த" என்ற எழுத்தும் மெல்லோசையிலுள்ள " மி" என்ற எழுத்தும், இடையோசையிலுள்ள "ழ்" என்ற எழுத்தும் சேர்ந்து உருவானதே தமிழ் என்ற பதமாகும். இத்தமிழின் இனிமையைச் சுவைத்த பாரதிதாசனார்.....

..... கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும் ........

போன்ற சுவைகளைவிட இனிமையானது தமிழின் இனிமை என்றார்.

ஒரு படைப்பில் ஆக்கியோன் தன் சொந்த உணர்ச்சியைக் கூறுவதற்குத் தன் கற்பனையில் படைத்த பாத்திரங்களின் உணர்ச்சியாக மாற்றி எழுதும்போது, அந்த உணர்ச்சி படிப்பவர் மனதில் ஏற்படுமாயின் அந்த இலக்கியம் வெற்றி பெறுகிறது எனலாம். இன்பத் தமிழிலே எழுந்த இலக்கியங்கள் யாவும் புலன்களுக்கு இன்பம் தருகின்றன. உணர்ச்சிக்கு ஏற்றவாறு பொருத்தமாயுள்ள ஒலிநயம், சொல்லமைப்பு, நடைநயம், என்பன ஒன்று சேரும்போது இலக்கியத்தில் சுவை வேறுபடுகின்றன. தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்கள், அகநானூற்று– புறநானூற்றுப் பாடல்கள், எழுதிய புலவர்கள் முதல் வள்ளுவர், ஒளவையார் , கம்பர், இளங்கோ, பாரதி, பாரதிதாசன் வரை இன்றைய அறிஞர்கள் வரையுள்ள சுவை ததும்பும் இலக்கியங்கள் இன்பத்தமிழின் பெருமையை எடுத்தியம்புகின்றன.

எமது இன்பத்தமிழிலே தேன்சுவை சொட்டுவதை இந்த வசன கவிதையிலே பார்க்கலாம்.

" நான் தமிழைப் படித்தேன் இரசித்தேன் – பின்
அதன் சுவையை நுகர்ந்தேன்
என்னே இனிமையென வியந்தேன்
இன்று தமிழால் நான் பெருமையடைந்தேன்–உங்கள்
முன்னே தலை நிமிர்ந்தேன் "--------

இங்கே வந்துள்ள படித்தேன், இரசித்தேன், நுகர்ந்தேன், வியந்தேன்,பெருமையடைந்தேன், தலை நிமிர்ந்தேன், என்ற வினைகளைப் பாருங்கள்! இங்கே "தேன் தேன் " எனத் தேன் சிந்துகின்றது. இச்சிறு உதாரணத்தில் இன்பத் தமிழ் இலக்கியத்தில் உள்ள சுவையை உணரமுடியும். தமிழிலுள்ள இலக்கியச்சுவையைப் பற்றிக் கூறமுற்படுவது கடல் நீர் ஆழத்தைக் காண முற்படுவது போன்றதாகும். ஒரு சொல்லிலேயே பல பொருள் தரும், பலசுவை தரும் தன்மையும் வார்த்தையால் மாயாஜாலம் செய் யும் விந்தையும் எமது தமிழ்மொழிக்கே உண்டு.

தமிழ் தோன்றிய நாட்டைச் செந்தமிழ் நாடு என்று பாடிய பாரதி,செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்றார். தமிழ்நாடு என்று சொல்லும் போதே தேன்வந்து பாய்கிறது என்றால் தமிழையும் அது தரும் இன்பத்தையும் படிக்கும்போதும், நுகரும்போதும் பாயும் தேனுக்கு .... இன்பச்சுவைக்கு.... இலக்கிய இன்பத்துக்கு......எல்லையே இல்லை எனலாம்.

# நல்லைநகர் ஆறுமுகநாவலர்

யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் என்னும் நற் பதியிலே தமிழ் வாழ, சைவம் வாழ அவதரித்த பெருந்தகை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார். பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றித் தமி ழுக்குப் பணியாற்றிய ஈழத்தமிழ் அறிஞர்களுள் முதன்மையானவர் நாவலர் அவர்களே எனலாம். தமிழ் கூறும் நல்லுலகின் ஒரு அவதார புருஷர் இவர். சமயகுரவர் நால்வருக்குப் பின் சைவத் - தையும் தமிழையும் வாழவைத்த பெரியார் எனப் புகழப்படுகின்றார். இருளகற்றி ஒளி வீசவந்த அகல்விளக்கு நாவலர் அவர்களே என்று அன்றும் இன்றும் போற்றப்படுகின்றார்.

நாவலர், இலங்கையின் மணி முடி எனத்திகழும் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரிலே 1822ம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கந்தப்ப பிள்ளை. தாயார் பெயர் சிவகாமி அம்மையார் ஆவார். இவருக்குப் பெற்றோர் இட்ட இளமைப்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும்.

www.padippakam.com



ஆறுமுகம் தம் ஆரம்பக்கல்வியை நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியா யரிடமும் பின் - னர் குருகுலக்கல்வியைச் சேனாதிராய முதலியார்,சரவ ணமுத்துப் புலவரிடமும் பயின்றார். இளமைப்பருவத்திலே இவர் மிக ஆர்வத்துடன் நன்னூல்,இரகுவம்சம், திருக்குறள், திருக்கோவையார், சீவகசிந் – தாமணி, முதலிய பல பழம்பெரும் நூல்களைக் கற்றுத் தேறினார். இதன் பின்னர் இவர் யாழ்ப்பாண மத்தியகல்லூரியிலே பீற்றர் பார்சிவல் முதலியாரிடம் ஆங்கிலக் கல்வியைக் கற்றார். அதனோடு சமஸ்கிருதத்தையும் இவர் கற்கத் தவறவில்லை. இவ்வாறு மும் மொழி வித்தகனாக ஆறுமுகம் விளங்கினார்.

பத்தொன்பது வயது இளைஞனாக இவர் இருக்கும்போது இவருடைய தமிழ்ப்புலமையைக் கண்ட பீற்றர் பார் சிவல் [illegible] தமது பாடசாலையில் தமிழ், ஆங்கில உபாத்தி யாயராகவும் தமக்குத் தமிழ்ப்பண்டிதராகவும் அமர்த்திக் கொண்டார். 1849ம் ஆண்டு கிறிஸ்தவ மதபரம்பலைத் தடுப்பதற்காக நாவலர் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் சைவப்பிரசங்கம் நிகழ்த்தி வந் தார். இவரது பிரசங்கத்தைக் கேள்வியுற்றுப் பல இடங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்தனர். இவருடைய நாவன்மை மிக்க இனிமை யான பிரசங்கத்தில் மக்கள் தம்மையே மறந்திருந்தனர். பலர் தெளிவு பெற்றுச் சைவத்தின் மேன்மையை உணர்ந்தனர். இவரது புகழ் இந் தியா முழுவதும் காட்டுத்தீ போல் பரவியது. இதன் பயனாக திருவா வடுதுறை ஆதீனத்தார் இவரது திறமையைப் புகழ்ந்தும் வாக்கு வல்லபத்தை வியந்தும் " நாவலர்" என்னும் திவ்வியநாமத்தை வழங் கினார்கள். அப்போது நாவலர் இருபத்தேழு வயது இளைஞனாக இருந்தார். பேச்சில் நாவன்மை மிக்கவர் என்பதனாலேயே இவருக்கு நாவலர் என்ற சிறப்புப் பெயர் கிடைத்தது. அன்றுமுதல் ஆறுமுகநா வலர் என இவர் அழைக்கப்பட்டார்.

ஆங்கில ஆட்சியிலே வசதியான உத்தியோகத் தைப் பெறும் வாய்ப்பிருந்தும் இவர் அதனை விரும்பவில்லை. இல் வாழ்க்கையிலும் புகவில்லை. இவை அனைத்துக்கும் காரணம் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தல் வேண்டும் என்ற பேராசையே ஆகும். இலவசக்கல்வி, இலவச நூல்கள்,தாய்மொழிக்கல்வி என்று பெருமைப்படும் கல்விச்சாதனைகளை அன்றே நிலைநாட்டினார் நாவலர். தெய்வநெறியும் கல்வியழகும் பொலிந்து விளங்கும் ஒரு சமுதாயத்தைக் காணத் துடித்தார். தமிழ்மொழியைப் பரப்பி அதன் மேம்பாட்டுக்காக சிறுவர் பாலபாடம் முதல் சைவவினாவிடை போன்ற பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவருடைய பாலபாடங் கள் இலங்கை மாணவர்களுக்கு மட்டுமல்ல தமிழக மாணவர்களுக் கும் வழிகாட்டிகளாக இருந்தன. திருக்குறள்– பரிமேலழகர் உரை,

www.padippakam.com



சேனாவரையம், பாரதம், நன்னூல் காண்டிகையுரை, திருக்கோவை உரை, பெரியபுராணம் முதலிய நூல்களைத் திருத்திப் பிழையின்றி அச்சிட்டார். சிறந்த பதிப்பாசிரியரான உ.வே.சாமிநாதையருக்கு நல்ல வழிகாட்டியாக நாவலர் திகழ்ந்தார். கிறிஸ்தவ மதப்பரம்பலை எதிர்த்துப் பல மதகண்டன நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் என்பவற்றை வெளியிட்டு சைவமக்களை நல்வழிப்படுத்தினார். முதன்முதல் யாழ்ப்பாணமக்களுக்கு அச்சியந்திரத்தை அறிமுகப் படுத்தி நூல்களை வெளியிட்ட பெருமை இவருக்கே உரியது.

தமிழில் உள்ள கடினமான பழைய உரைநடையைப் பாமரரும் கற்றறியும் வண்ணம் இலகுமயப் படுத்தினார். சிறுசிறு வாக்கியங்கள் கொண்ட உரைநடையைத் தமிழிற் புகுத்தி தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆவன செய்தார். இதன் காரணமாக இந்தியத் தமிழறிஞர் சூரியநாராயணசாஸ்திரி அவர்கள் நாவலருக்கு " வசனநடைகைவந்த வல்லாளர் " என்ற பட்டத்தைச் சூட்டினார். நாவலர் கல்வி வளர்ச்சிகருதி யாழ்ப்பாணத்திலும் வண்ணார் பண்ணையிலும், இந்தியாவிலுள்ள சிதம்பரத்திலும் சைவப் பாடசாலைகளை நிறுவினார். இதைத் தொடர்ந்து மேலும் யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம், மாதகல், இணுவில், பருத்தித்துறை, வேலணை, போன்ற பல இடங்களிலும் பாடசாலைகளை உருவாக்கினார். தேவார திருவாசகங்களை முறைப்படி ஓதுவதற்கு ஊக்கமளித்தார். கோயில் வழிபாடு நல்லொழுக்கம் என்பவற்றை சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் போதித்தார். ஏழைமக்களுக்கு இரங்கி " கஞ்சித்தொட்டித் தர்மம்" செய்து அவர்களின் பசியை நீக்கினார். திண்ணைப் பள்ளிக்கூடம் அமைத்து இலவசக் கல்வியைப் போதித்தார். இவை மட்டுமன்றி பைபிளைத் தூயதமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார்.பைபி – ளை மொழிபெயர்ப்புச் செய்த சென்னை அறிஞர்களின் மொழி பெயர்ப்பைவிட நாவலர் அவர்களின் மொழிபெயர்ப்பே சிறந்தது எனத் தெரிவுசெய்யப்பட்டது. கிறிஸ்தவ மதத்தை எதிர்த்தாலும் அவர்களுடைய வேதநூலை மொழிபெயர்த்தமை இவரது புலமையைப் புலப்படுத்துகிறது.

நாவலரின் கல்விப்பணி , சமயப்பணி, தமிழ்ப்பணி, நூலாசிரியப்பணி எனப் பல வகைகளில் பணிகள் தொடர்ந்தன. இத்தகைய அரிய பல சேவைகளினாலே இவருக்கு ' வசனநடைகைவந்த வல்லாளர், ஐந்தாம் குரவர், பரசமயகோளரி, போன்ற பல சிறப்பு விருதுகள் இவரை நாடி வந்தன. கற்றல், கற்பித்தல் என்பவற்றை உயிர்நாடியாகக் கொண்ட இவர் தமது ஐம்பத்தேழாம் வயதிலே வானுலகில் தமிழ்ச்சேவை செய்யப்போவது போல் 1879ம் ஆண்டு மார்கழி மாதம் விண்ணகம் எய்தினார். இவரது இழப்பால் தமிழன்னை

www.padippakam.com



பரிதவித்தாள்.சைவசமயம் வழிகாட்டலின்றித் துயருற்றது. இவரது பிரிவைத் தாங்கமுடியாத சி.வை. தாமோதரம்பிள்ளை அவர் — கள் கண்ணீர் வடித்து-

நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே— எல்லவரும்
ஏத்து புராணாகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறிவெங்கே அறை.

என உருகிப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சி.வை.தாமோதரம்பிள்ளை

மேலை நாட்டு மொழி நாகிகம் பண்பாடுகளின் ஆதிக்கத்தில் நலிவுற்ற நிலையிலே, வாழ்ந்த அன்னை மொழியாம் எமது தமிழ்மொழிக்கு ஆதரவுக்கரம் கொடுத்துத் தாங்கி நின்று, அளப்பரியசேவை செய்த அறிஞர்கள் பலர். அவர்களின் வரிசையில் சி.வை.தாமோதரம்பிள்ளையும் ஒருவராகப் போற்றப்படுகின்றார்.

1832ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலேயுள்ள சிறுப்பிட்டி என்னும் ஊரிலே தோன்றிய அறிவொளி சி.வை.தாமோதரம்பிள்ளை ஆவார். இவரது தந்தையார் பெயர் வைரவநாதர். தாயார் பெயர் பெருந்தேவி அம்மையார். ஆங்கில ஆட்சியால் ஆங்கிலமொழியும் கிறிஸ்தவசமயமும் போட்டிபோட்டு நிலைபெற்றிருந்த வேளையில் தாமோதரனார் கிறிஸ்தவ மிஷனறிக் கல்லூரியில் தமது ஆரம்பக் கல்வியைத் தொடரவேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார். இவர் ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலமொழியைக் கற்றாலும் தமிழ்மொழி மீது அளவற்ற பற்றுக்கொண்டு, முத்துக்குமார கவிராயரிடம் தனிப்பட்ட முறையிலே தமிழைக் கற்றுச் சிறந்த புலமை எய்தினார்.

யாழ்ப்பாணத்திற் தாம் கற்ற கல்வியுடன் நின்றுவிடாது, அதிலே திருப்தியடையாமல் சென்னைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்று உயர்கல்வியைக் கற்றார். 1857 ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் முதன்முதல் நடாத்திய கலைமாணிப் பரீட்சையில் முதல்வராகத் தேறிய பெருமை பெற்றார். இவர் தமிழ் நாட்டில் வகித்த ஆசிரியர், கணக்காளர், உயர்நீதிபதி, பல்கலைக் கழகப் பரிசோதகர் போன்றவற்றின் சேவையைப் பாராட்டிய சென்னை

www.padippakam.com


அரசாங்கம் இவருக்கு " இராவ்பகதூர் "எனும் பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தியது. எவ்வளவுதான் பட்டம் பதவி கிடைத்தாலும் தன் அன்னைமொழி ஆதரவின்றித் தவிப்பதுபோல் உணர்ந்தார்.இவர் தேசப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று மிக்கவராக விளங்கி அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

பண்டை இலக்கியங்கள் இவரது காலத்தில் தேடுவாரின்றி அழிந்துவந்தன. ஏட்டுச்சுவடிகளாக இருந்த நூல்கள் சிதைந்து மறைந்தவண்ணம் இருந்தன. இந்நிலைகளைத் தாமோத ரனார் கண்டு மனங் கொதித்ததார்: கண்ணீர் வடித்தார். இந்நூல்க ளுக்கு உயிர்கொடுக்க வேண்டுமென உணர்ந்து அதற்கான முயற்சி களில் ஈடுபட்டார். கண்துஞ்சாது உணவை வெறுத்து, தமது வறுமை நிலையிலும் மனம் சோராது, தம்கைப்பொருளையும் செலவு செய்து பழைய இலக்கியங்களையும் தேடி எடுத்தார். சிதைவுற்ற நிலையில், தொட்டாற்கூட தூளாகிவிடும் நிலையிலுள்ள ஏடுகளைத் தேடி எடுத்து பலவற்றைப் பதிப்பித்தார். அவ்வேளையில் இந்திய அறிஞர் உ.வே.சுவாமிநாதையரின் உதவியும் இவருக்குக் கிடைத் தது. தாமோதரனார் சிறந்த பதிப்பாசிரியராக விளங்கியதுடன் பாடசாலை ஆசிரியராகவும் யாழ்ப்பாணத்திற் கடமையாற்றினார். சிறு வர்களின் கல்விவளர்ச்சியில் நாட்டம் கொண்டு, 1876ம் ஆண்டில் ஏழாலையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவி, அதற்கான சகல செலவுகளையும் தாமே பொறுப்பேற்றார். சுன்னாகம் அ.முத்துக் குமாரசுவாமிப் புலவர் அவர்களின் கற்பித்தற்பணியைப் பெற்ற பாக்கி யம் இப்பாடசாலையே ஆகும்.

நூல்களைப் பதிப்பித்து உருவம் கொடுத்ததுடன் நின்றுவிடாமல் தாமோதரனார் பல நூல்களையும் இயற்றினார். ஆறாம், ஏழாம் வகுப்புப் புத்தகங்கள், நட்சத்திரமாலை, சைவமகத்துவம், கட்டளைக்கலித்துறை, ஆதியாகம கீர்த்தனம் போன்றவை இவற்றுள் முக்கியமானவை. வீரசோழியம், தணிகைப் புராணம், இலக்கண விளக்கம், தொல்காப்பியம், கலித்தொகை சூளாமணி முதலிய நூல்களைப் பதிப்பித்தார்.

தமிழ்மொழிக்கும் நாட்டுக்கும் பல வழிகளில் பணிசெய்த தாமோதரனார் தமிழீழத்திலும் தென்னிந்தியாவிலும் தம் பெயரை நிலைநாட்டிவிட்டு 1900 ம் ஆண்டில் பரமபதம் எய்தினார். இவரது இழப்பால் அந்தோ! தமிழன்னை உருகிக் கண்ணீர் வடித்தாள். அவர் அழிந்தாலும் அவரது பெயரை வாழவைத்துக் கொண்டிருக்கும் அவரது நூல்களால் அன்னைமொழிக்கு ஆறுதல் என்றே சொல்லமுடியும். இன்றும் இங்கே அவர் பெயர் உச்சரிப்பதற்கு அவருடைய பணிகளும் பாடசாலைகளும், நூல்களுமே காரணம் எனலாம்.

# நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

ஆங்கிலமொழி ஆட்சியிலே அன்னைமொழி தத்தளிக்கையிலே தமிழறிஞர்கள் பலர் தோன்றி தமிழன்னையைத் தம் ஈன்ற தாய்க்கு ஈடாக மதித்துப்போற்றி வளர்த்தனர். அவ்வாறு அன்னை மொழியைத் தன்னிலையிற் தளம்பாது பாதுகாத்த அறிஞர் களுள் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் ஒருவராவர். தமிழையும சைவத்தையும் வளர்த்து யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்திய நல்லை நகர் ஆறுமுகநாவலரின் பின் அதே பணியைச் செய்த பெரியார்களுள் இவரும் ஒருவர் என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணத்திலுள்ள நவாலியூரிலே முருகபக்தர்களான கதிர்காமரும் இலக்குமிப்பிள்ளையும் மகப்பேறின்றி வருந்தினார்கள். இவர்களுடைய வேண்டுதலுக்கு முருகனருள் கிட்டியது போலவே 1880 ம் ஆண்டு ஆனிமாதம் 12 ம் திகதி ஒரு ஆண்மகவு பிறந்தது. அவரே எங்கள் சோமசுந்தரனார் ஆவார். இளமையிலே இவர் கல்வியிற் சிறந்து விளங்கி, தமிழ் ஆங்கிலம், வடமொழி ஆகியமொழிகளில் தேர்ச்சி பெற்றார்.தமது பதினைந்தாவது வயதிலே அட்டகிரி முருகன் மீது பதிகம் பாடி மக்களை வியப்பில் ஆழ்த்தினார். இயல்பாகவே கவிபாடும் வண்மை வாய்ந்த இவரை "வரகவி " என்று மக்கள் அழைத்தனர். இவர் வட்டுக்கோட்டையில் ஒரு பாடசாலையை ஆரம்பித்து அங்கே நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினார். தமிழ் , ஆங்கிலம், இதிகாசம் ஆகிய பாடங்களைப் போதித்தார். இவரது நற்பணியாலே தமிழ்க்கல்வியும் சைவசமயமும் வளர்ந்து சிறப்படைந்தன. சோமசுந்தரனார் பக்திப் பாடல்கள் பாடுவதில் விருப்பம் கொண்டார். வறுமையும் பிணியும் இவரை வாட்டியபோது கடவுள் வழிபாட்டினாலே இவற்றை வெல்ல முடியும் என உணர்ந்து முருகக்கடவுள் மீதும் நாமகள் மீதும் பல்லாயிரம் பாடல்களைப் பாடினார். இவரது காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த மறைமலையடிகள் முதலான அறிஞர்கள் தமது பாராட்டுக் களைத் தெரிவித்தனர். இதனால் இவருடைய புகழ் தென்னிந்தி-யாவில் பரவியது.

1925 ம் ஆண்டு "உயிரிளங்குமரன்" என்னும் நாடகத்தை எழுதி நடிப்பித்தார். அந்த நாடகத்தின் தரத்தை மெச்சிய இலங்கைத் தமிழ்ப் புலவர்கள் ' புலவர் "என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

www.padippakam.com



புலவர் அவர்கள் சிறுவர்களுக்கான பல பாடல்களை எழுதினார். அவற்றுள் முக்கியமானவை ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி, போன்ற பாடல்கள் (முக்கியமானவை) அத்தோடு இவருடைய சில பாடல்கள் சிறுவர்களுக்கான பாடப்புத்தகங்களிலும் இடம் பெற்றன. கேசம் நிறைந்த முகத்தில் தெரிந்த அறிவு ஒளியினாலும் இவரது பாடல்களாலும் கவரப்பட்ட சிறுவர்கள் இவரைத் " தங்கத் தாத்தா " என்று அழைத்தனர். புலவர் எழுதிய நூல்களுள் முக்கியமானது உயிரிளங்குமாரன் என்னும் நாடக நூலாகும். மேலும் இவர் இலங்கைவளம், நாமகள் புகழ்மாலை, சிறுவர் செந்தமிழ், விநாயகர் பாமாலை, நல்லைத்திருப்புகழ், நல்லையந்தாதி, அட்டகிரிக்கலம்பகம் முதலிய பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதித் தமிழ் மொழிக்கும் சைவசமயத்துக்கும் வளம் சேர்த்தார்.

உடல் மூப்படைந்தாலும் தமிழறிவிலே மூப்படையாது எழுபத்திமூன்று வயதுவரை வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தார். இதைப் பொறுக்காத காலன் 1953 ம் ஆண்டு ஆனிமாதம் பத்தாம் திகதி இவருடைய இன்னுயிரைக் கவர்ந்து சென்றான். புலவர் மண்ணகத்தை விட்டுச் சென்றாலும் இன்று நாம் தாய்நாட்டில் மட்டுமன்றி, இந்த ஜேர்மனிய நாட்டில் அதாவது ஐரோப்பியநாட்டிலும் அவர் புகழைப் பேசுவதற்குக் காரணம் அவர் விட்டுச் சென்ற தமிழ் சைவப் பணிகளே காரணமெனின் மிகையாகாது.

படிப்பகம்

# சுவாமி விபுலாநந்தர்

அன்பு, அறிவு ஆனந்தம்,அடக்கம் என்பவற்றின் ஒரு வடிவமே சுவாமி விபுலாநந்தர்.இவ்வுலகில் அவர் எம்மிடையே அவர் இல்லாவிட்டாலும் அழியாப்புகழுடன் வாழும் பெருந்தகை.தமிழுக்கும் தமிழ்ச்சமுகத்துக்கும் செயற்கரிய சேவை செய்த மனித தெய்வம். அவர்தம் வாழ்வே மானிடர்வாழ்வுக்கு ஒரு வரைவிலக்கணம். அன்றுதொடக்கம் இன்றுவரையும் இலங்கை – இந்தியா மட்டுமல்ல தற்போது ஜேர்மனியிலும் அந்தச்செம்மலின் நாமம் ஒலிக்கப் படுகின்றது என்றால் அவரது பெருமைதான் என்னே! ஈழம் தந்த ஜோதி! யாழ்நூலின் தந்தையை நாம் எப்படி மறக்கமுடியும்?

ஈழநாட்டிலே மீன்பாடும் மட்டுநகர் சார்ந்த காரைதீவிலே 1892ம் ஆண்டு கண்ணம்மையாரின் மணிவயிற்றிலே வந்துதித்த அருந்தவப் புதல்வர் விபுலாநந்தர் ஆவார். சாமித் தம்பியும் கண்ணம்மையும் செய்த தவப்பேற்றினால் அவதாரபுருஷராக அவதரித்தவர் விபுலாநந்தர்.இவரது இளமைப் பெயர் மயில்வாகனன் என்பதாகும். மயில்வாகனன் இளவயதிலிருந்தே தமிழ் வடமொழி ஆங்கிலம் ஆகியமொழிகளைக் கற்றார்.மிகத்திறமையோடு கல்விகற்ற இவர் வாலிபப்பருவம் அடையுமுன்னரே வையகம் போற்றும் சாதனைகளை செய்ய ஆரம்பித்துவிட்டார். பன்மொழிப் புலவரானதோடு பல பட்டங்களையும் தம் அயராமுயற்சியால் பெற்றுக்கொண்டார். விஞ்ஞானம், கணிதம், பொறியியல் அனைத்துத் துறைகளிலும் கரை கண்டார் மயில்வாகனனார்.ஆயினும் மதம், மக்கள், மக்கள்சேவை, ஆகிய மூன்றும் அவர் இதயத்தை ஈர்த்தன.

ஆசிரியராக, அதிபராக, பேராசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, நூலாசிரியராக, இவர் அரும்பெரும் சேவைகள் செய்தபோதும் அவரின் மனம் துறவறத்தையே நாடியது.நிலையற்ற வாழ்வை வெறுத்து நிலையான பேரின்பம் தரும் துறவுவாழ்க்கையில் இவர் ஈடுபாடு கொண்டு, உத்தியோகத்தை வெறுத்தார். பின் சென்னை இராம கிருஷ்ண மடத்தை நாடி,அங்கே தொண்டராகப் பணிபுரிவதில் பேரின்பம் அடைந்தார். இவருடைய துறவறத்தையும் சேவையையும் வியந்த இராமகிருஷ்ண மடத்தினர் " பிரபோதசைதன்யர்" என்ற நாமத்தை இவருக்குச் சூட்டினர். 1927ம் ஆண்டு இவர் துறவிப்பட்டம் பெற்று 'சுவாமி விபுலாநந்தர்' என்ற தீட்சாநாமம் கிடைக்கப்பெற்றார். மனைவாழ்க்கை வேண்டாம் : மனைவி வேண்டாம்: என இல்லற வாழ்வையே இளமையிற் துறந்த வள்ளல் "சுவாமிப்பட்டத்தை" மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

சமயம், மொழி,தமிழிசை, மேலைத் தேயநாடகங்கள்,பழந்தமிழ் நூல்கள், முதலியவற்றை அவர் துருவி ஆராய்ந்தார்.கட்டுரை எழுதுவதிலும் இசையையும் நாடகங்களையும் ஒப்புநோக்கி ஆராய்வதிலும் அவர் வல்லவராக விளங்கினார். இந்த ஆய்வின் பயனாக ஆங்கிலவாணி, மதங்கசூளாமணி, யாழ்நூல், முதலிய நூல்கள் அவரால் இயற்றப்பட்டன. அடிகளார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளில் மிகச்சிறந்ததும் காலத்தால் அழியாததுமாக விளங்குவது அவர் இயற்றிய யாழ்நூலாகும். பண்டைத் தமிழரின் இசையைக் கண்டுபிடித்து, அழியாமற் பேணிக்காத்துச் சென்ற பெரியோன் விபுலாநந்தர் என்றால் மிகையாகாது.

முச்சங்ககாலத்தில் முடிமன்னர் காவலும்போய், ஆதரிப்பார் இல்லாமல் சீரழிந்து, கெட்டுச்சிதைந்து, மூலை முடுக்கில் கிடந்த தமிழ் ஏடுகளைத் தேடிப்பிடித்து, அவற் றிற்கு உருவம் கொடுத்தார். நாட்டிய தாரகைகளுக்கு அருவிருந் தான நாட்டிய நாடகங்களைத் தீஞ்சுவைத் தமிழிலே மெருகூட்டி "முத்தமிழ் வித்தகர்" என்ற ஒப்பற்ற அரிய நாமத்தையும் வரித்துக் கொண்டார்.

தீந்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகள் எளிமையான நடையிலே, இசையிலே, தங்கத் தமிழைத் தரணியிலே சிறப்புறத் தங்கவைத்தார். அதற்காகவே முன்னின்று என்றும் உழைத் தார். இவற்றோடு தமது சேவையை நிறுத்திக் கொண்டாரா? இல்லவே இல்லை. ஏழைமாணவர் கற்றுப் பயனடைய கல்வியறிவு ஊட்டிய சான்றோனாகவும் விளங்கினார். காரைதீவிலே சாரதா வித்தியா லயத்தையும் , திருகோணமலையிலே இந்துக்கல்லூரியையும் அமைத்த திறலோன். இவை இன்றும் அடிகளாரின் நாமத்தைப் பறைசாற்றிய வண்ணம், அவரின் பெருமைப்படுத்திய வண்ணம் இருக்கின்றன.

ஆங்கிலம் கற்றவர்கள் தமிழ்மொழியைத் தாய்நாட்டிலே அலட்சியம்செய்த காலத்திற் பிறந்த அடிகளார், ஆங்கி லத்தையும் தமிழையும் இருகண்களாகவே மதித்து,தமது கல்வியிலே மேன்மை பெற்றார். இவ்விடத்தில் ஒரு விடயத்தை நாம் சிந்திக்க வேண்டும். இங்கு ஜேர்மனியில் தமிழைப் பேச மனமின்றி வாழும் சிறுவர்களையும், தமிழைப் போதிக்க விரும்பாத பெற்றோர்களையும் எண்ணி வேதனைப்பட வேண்டியுள்ளது. விபுலாநந்தர் போல் ஏன் நாம் ஜேர்மன் மொழியையும் தமிழ்மொழியையும் எமது இரு கண்க ளாகக் கருதி கல்வியிலே முன்னேறமுடியாது? விபுலாநந்தர் போல நாம்

www.padippakam.com



தமிழுக்குப் பணிகள் செய்யாவிட்டாலும் தமிழைக் கற்காமல் இருப்பது முறையாகுமா? இதை எம்மால் ஏன் செய்யமுடியாது? ஏன் செய்யக்கூடாது? எனச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தமிழ்நாட்டின் முதலாவது "தமிழ்ப்பேராசிரியர்" என்னும் சிறப்பினைப் பெற்று, இறுதி மூச்சு வரையும் பேராசானாய் அளப்பரிய சேவை செய்த அடிகளார் 1947 ம் ஆண்டு ஆடிமாதம் 19ம் திகதி அமரரானார்.இவர் வாழ்ந்த காலமோ குறுகியது. ஆனால் அவர் சாதித்த சாதனைகளோ அளவிடற்கரியன. அவற்றுள்ளே இன்று வரையும் மற்றவர்களால் மேற்கொள்ளப்படாத காரியங்களை அன்றே செய்து முடித்தார் சுவாமி விபுலாநந்தர். சுவாமிகள் மண்ணைவிட்டு விண்ணுக்குச் சென்றாலும் அவர் ஆற்றிய பணிகள் எம்மத்தியிலே அழியாத சின்னங்களாக, வாழையடி வாழையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

எத்தனையோ மானிடர்கள் பிறக்கின்றார்கள்: இறக்கின்றார்கள்: கணக்கில் இல்லை. ஆனால் புகழோடு தோன்றியவர்கள் பூமி உள்ளவரை நிலைத்திருப்பர். " தோன்றிற் புகழொடு தோன்றுக.. என்ற வள்ளுவரின் வாக்குக்கு அமையத் தோன்றிப் புகழ்பூத்து, இறந்தும் வாழ்ந்து கொண்டிருப்பவர் விபுலாநந்தர்.நம் தாயகம் ஈன்றெடுத்த தவப்புதல்வரின் சரிதம் பற்றி ஜேர்மன் நாட்டிலும் பேசப்படுவதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

அன்னைமொழியாம் அழகுதமிழே வாழி!
இனிய தமிழுக்கு இதயக்கமலம் மகிழ்ந்து
தன்னையே அர்ப்பணித்து முத்தமிழ் வித்தகனாக '
அன்னை ஈழம் தந்த விபுலாநந்தரே வாழி வாழி!!

படிப்பகம்

35

# ஔவையார்

தமிழ்மொழி வரலாற்றிலே சங்கப் புலவர்கள் வரிசையிலே ஔவையாருக்குத் தனிச்சிறப்பு உண்டு. இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராக வாழ்ந்த பெண்புலவர் என்ற மதிப்பையும் பெறுகின்றார். இன்று ஔவையாரைப்பற்றி அறியாத பெரியவர்களோ சிறுவர்களோ இல்லை எனலாம். இதற்குக் காரணம் அவர் ஆக்கி எமக்களித்த நீதிநெறிகளும் நல்லுரைகளுமே ஆகும்.

ஔவையார் கி.பி 2ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கூறப்படுகின்றது. கடைச்சங்க காலப்புலவர்களில் இவரும் ஒருவர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஔவையாரின் பாடல்கள் புறநாநூறு முதலிய சங்க நூல்களிலே இடம் பெற்றுள்ளன. கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய அதியமான் மனமுவந்து அளித்த அற்புத நெல்லிக்கனியை உண்டு இவர் நெடுங்காலம் வாழ்ந்தார் என்று சங்கநூல்கள் கூறுகின்றன. ஔவையாரின் பிறப்பு, தாய் தந்தையர் வரலாறு , வாழ்க்கை என்பனபற்றித் திடமான வரலாறு இன்மையால் பலர் இவரைப் பற்றிப் பலவாறு எழுதியுள்ளனர்.

ஔவையாரைப் பற்றி நாம் அறியக்கூடிய பல கதைகள் இருக்கின்றன. ஔவையாரும்– முருகனும், ஔவையாரும் விநாயகரும், ஔவையாரும்– அரசனும்,ஔவையாரும்– வள்ளுவரும், ஔவையாரும் –குடியானவனும், எனப் பற்பல கதைகள் இருக்கின்றன ஔவையார் மிகவும் முதுமையுடையவராகவே என்றும் காணப்படுகின்றார்.அவர் இளமையிலேயே முதுமை பெற்றவர். ஆண்புலவர்கள் மத்தியில் இளமை பொருந்திய மங்கையாக வாழ்வது தமது தமிழ்த் தொண்டுக்கு இடையூறு என்றெண்ணி, விநாயகப் பெருமானிடம் "கிழவி" உருவத்தை வேண்டிப் பெற்றதாகப் புராணக்கதைகள் உண்டு. இதன் காரணத்தாலேயே அவர் ஔவைப்பாட்டி என்றும், ஔவைக்கிழவி என்றும், கூனற்கிழவி என்றும் அன்போடு அழைக்கப்பட்டார். ஔவையார் சிறந்த புலமை வாய்ந்தவர். இதனால் மற்றைய புலவர்களுடன் வாதிட்டு வெற்றிகள் பெற்றார்.மற்றைய புலவர்கள் அஞ்சி ஒதுங்கும் வண்ணம் சொற்போரிட்டு வாகைசூடும் புகழ் பெற்றிருந்தமையால் தன்னைவிட வேறொருவரும் இல்லை எனக் கர்வம் கொண்டிருந்தார். இந்தக் கர்வத்தை முருகப்பெருமான் சிறுவனாக வந்து அவரைத் தோற்கடித்தான் என்ற கதை நாம் எல்லோரும் அறிந்ததே.

ஔவையார் பாடிய பாடல்களுள் இறவாது இன்றும் உயிர் பெற்றிருப்பவை ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல் - வழி, ஞானக்குறள், அசதிக்கோவை, என்பனவாகும். இவை எல்லாம் தமிழுக்குப் பெருமையளிக்கக் கூடியன. பெரிய நீதிநூல்களிலே காணப் - படும் கருத்துக்களை எல்லாம் வடித்தெடுத்து எளிமை ததும்ப அளித் — துள்ளார்.ஔவையாரின் ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் அரத்திற் தொடங்கி சூத்திரம் போல அமைந்துள்ளன. சிறுவர்கள் மனப்பாடம் செய்யக்கூடிய அளவுக்கு இலகுவானவையாக இந்நூல்கள் இருக் கின்றன.

ஔவையார் மக்களோடு ஏற்றத்தாழ்வின்றி அன்போடு பழகினார். ஔவையார் தான் வாழ்ந்த காலத்திலுள்ள சமூகச்சீர்கேடு களைத் திருத்த முற்பட்டார். பலருக்குப் பல அறிவுரைகளைக் கூறி நல்வழிப்படுத்தினார். தனிப்பாடல்கள் பலவற்றில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறிவுரைகளைக் கூறினார். உதாரணத்துக்கு ஒரு பாடலை நோக்குவோம்.

காலையிலே பல்கலைநூல் கல்லாத் தலைமகனும்
ஆலையெரி போன்ற அயலானும் – சால
மனைக்கட் டழிக்கும் மனையாளும் இம்மூவர்
தனக்கு அட்டமத்துச் சனி.

படியாத மூத்தமகனும், பக்கத்தில் உள்ள பகைவனும், வரவுக்கு மிஞ்சிச் செலவழிக்கின்ற மனையாளும் அட்டமத்துச் சனிகள் என்று மேலே உறுதியாகக் கூறியுள்ளார்.

ஔவையார் முருகப்பெருமான் மீதும் விநாயகப் பெருமான் மீதும் அளவற்ற பக்தி கொண்டவர். மூவேந்தரும் போற் றும் முத்தமிழ்த் தாய் ஔவையார் ஐங்கரத்தனிடம் பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் என்ற நாலும் கலந்து கொடுத்து மூன்று தமிழும் பெற்ற மூதாட்டி ஆவார். விநாயகரை வேண்டிப் பாடிய பாடல் .......

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் –கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

ஔவையார் தமிழ் சிறக்கத் தமிழ்நாடு பெருமையுற இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடிய தெய்வீகப் புலவர்.இவ்வாறு தமிழுக்கு வளம் பெருக்கிய புலவர்களில் ஔவையார் சிறப்புப் பெறுகின்றார். அத்துடன் இறையருள் பெற்ற இந்த ஔவையார் போல் இன்றுவரை வேறோர் ஔவையார் பிறந்ததாகச் சான்றுகள் இல்லை.

www.padippakam.com



நல்லிசைப்புலமை வாய்ந்த ஔவையார் தமிழ் மக்களுக்கு வேண்டிய ஒழுக்கங்களையும் அறிவுரைகளையும் இனிக்க இனிக்க இனிய தமிழில் பாடியவள். மக்கள் வாழவேண்டிய நெறிகளை எடுத்துக்கூறும் இவரது நூல்களை நாம் கற்கவேண்டும். அதன் வழி ஒழுக வேண்டும். தமிழ் உள்ளவரை ஔவையாருடைய நூல்கள் யாவும் நிலையான பெருமையுடன் வாழ்ந்துகொண்டிருக்கும்.

ஔவைக்கிழவி நம் கிழவி
அமிழ்தின் இனிய சொற்கிழவி——

# திருவள்ளுவர்

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" ...... எனக் கவிதையிலே பெருமித உணர்ச்சி கொள்கின்றார் பாரதியார். யார் அந்தத் திருவள்ளுவர்? எந்தநாட்டுக்கும், எம் மொழியினருக்கும், எவ்வினத்தவருக்கும், எக்காலத்தவருக்கும் பொதுவாகப் பயன்படும் நூலான திருக்குறளை இயற்றிய பெருமகனே அவர். திருவள்ளுவர்! ஆகா! உலக அரங்கிலே தமிழர்களையும், தமிழகத்தையும் தலை நிமிர வைத்த ஒருபெயர். ரஸ்யஞானி டால்ஸ்டாயையும் அண்ணல் காந்தியடிகளையும் கவர்ந்த பெயரும் நூலும் இதுவாகும்.

மனிதசமுதாயத்துக்கு வாழும்வழி காட்டிய இப்புலவரின் வரலாறு சான்றோர்களால் முழுமையாக ஒப்புக் கொள்ளக்கூடிய அளவுக்கு எங்குமே இல்லை எனலாம்.இருந்தாலும் உலகிடையே என்றும் நின்றுவாழ்கின்ற, தரணி புகழ்கின்ற செம்மொழியாம் தமிழ்மொழிக்கு உலகப்புகழ் தேடித்தந்த திருக்குறளை, இரண்டாம் நூற்றாண்டிலே இயற்றிய பெரியோன் திருவள்ளுவர் என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்று கூறமுடியும்.

திருவள்ளுவர் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் பிறந்தார் என்றும்,இவரது பெற்றோர்கள் பகவான் – ஆதி ஆகியோர் எனவும் கூறப்படுகின்றது. திருவள்ளுவர் மதுரையிலே வாழ்ந்தார் என்றும், மயிலையிலே வாழ்ந்தார் என்றும் ஐயப்பாடுகள்

www.padippakam.com



உண்டு.ஆனால் இந்தியாவிலே பிறந்தார் என்பது நிரூபணமான உண்மையாகும்.சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் வாழ்க்கை வரலாறே இன்னும் தெளிவான முறையில் அறிஞர் உலகத்தால் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்றால், இற்றைக்கு 2000 நூற்றாண்டுகளின் முன் வாழ்ந்த வள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றிலே தெளிவின்மை இருக்கத்தான் செய்கின்றன.

திருவள்ளுவர் ஒரு தமிழ்ப்புலவர். அவர் நெசவுத்தொழிலைத் தம் தொழிலாகச் செய்தார். வாசுகி என்னும் கற்புக்கரசியை மணந்து இல்லறம் என்னும் நல்லறத்தை உலகுக்கு உணர்த்திய பெருந்தகையாளன் ஆவார். பொருட்செல்வத்தில் நாட்டமின்றி அருட்செல்வம் கண்டு உணர்த்திய அருளாளர். தம் வாழ்நாளிலே தமிழ்மொழி மட்டுமன்றி வடமொழியையும்கற்று,நீதிகளைப் புகுத்தவேண்டும் என்று, இருஅடிக் குறட்பாக்களிலே பாரிய பொருளை உணர்த்தினார். ஒழுக்கத்தின் சிகரமாக, அறிவின் ஒளியாக கருவிலே திருவுடையவராக விளங்கிய ஒரு பெருமகனே இந்தத் திருவள்ளுவர் ஆவார். எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடன் அறம் என்பதையே மதமாகக் கொண்டார். இத்தகைய எண்ணம் கொண்ட அவதார புருஷராகிய வள்ளுவரைப்பற்றிப் பேசும்போது நாம் பெருமையடைய வேண்டும்.

மதுரையிலே பாண்டிய மன்னனிடத்தில் உட்துறைக் கருமத்தில் தலைவராக வள்ளுவப் பதவியில் பணியாற்றினார். வள்ளுவப் பதவி என்பது பறை அறிவித்தலாகும். காலம் செல்லச் செல்ல இவரது திறமையால் அரசரின் அந்தரங்க ஆலோசகராகவும் இவர் செயற்பட்டார். மற்றும் சோழமன்னன் கரிகாலன் திருவள்ளுவர் காலத்தில் வாழ்ந்தான் எனவும் கூறப்படுகின்றது. திருவள்ளுவர் திருக்குறளிலே " சொல் வன்மையை" அமைச்சியலிலே கூறியிருப்பதால் அவருக்கு செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யாமொழித் தேவர், தெய்வப்புலவர், என்ற பெயர்களும் வழங்கின.

திருவள்ளுவர் எப்படிப்பட்டவர்? என அவரை இனங் காணவேண்டுமாயின் அவர் இயற்றிய நூலின் மூலமே புரிந்து கொள்ளமுடியும். எழுதுவோனின் தன்மையை அவன் எழுத்திலிருந்தே அறியும்படி அமைந்தமைக்கு உதாரணம் இப்பெரியாரே. இவர் இயற்றிய திருக்குறள் ஒரு தீந்தமிழ் ஓவியம். அறம், ஒழுக்கம் பற்றிய மேம்பாட்டு உணர்ச்சியையும், தமிழ்ப்பற்று உணர்ச்சியையும் உள்ளங்களில் உதிக்கச் செய்யும் உன்னதமான நூலாகும்.இந்நூலிலே சொல்லாத விடயங்கள் எதுவுமில்லை. நூற்றிமுப்பத்துமூன்று அதிகாரங்களையும், ஆயிரத்துமுன்னூற்றி முப்பது குறட்பாக்களையும்

www.padippakam.com



கொண்டு அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், என்ற முப்பால்களையும் உள்ளடக்கியுள்ளது திருக்குறள். இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் ஜேர்மனிய மொழியிலே மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்நூல் திருக்குறள் என்றால் இதைவிட வேறு என்ன உண்டு இதன் பெருமைக்கு?

இன்று திருக்குறள் உலகத்தின் பல முக்கிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது. அதைப் பற்றி மற்றைய அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்களுக்கும், விமர்சனங்களுக்கும் அளவே இல்லை. அத்தகைய நூல்களைப் பேணிப்பாதுகாத்து வைக்கவே ஒருபெரிய நூலகம் பற்றாது.

உலகப் பொதுமறையாக, எழுதா மறையாகப் போற்றப்பட்டு வரும் திருக்குறளைக் கற்று, அதன்வழி நாமும் வாழப் பழகிக் கொள்ளவேண்டும். எல்லா நாட்டுக்கும் எல்லா மக்களுக்கும் பொதுவான நெறிகளை இந்நூல் கூறுவதால் நாம் எங்கு வாழ்ந்தாலும் அதனைப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் நாம் மனிதநேயத்துடன் மற்றவர் மெச்சும்படி வாழமுடியும். காலத்துக்கு ஏற்றவாறு நன்னெறிகள் கூறும்முறைப்படி வாழ்ந்து நாமும் பயனடைவோமாக.

படிப்பகம்

# பாவேந்தர் பாரதிதாசன்

பழைய மூடப்பழக்கங்களைத் தகர்த்தெறிய, சாதிமதக் கொடுமைகளைத் தூள்தூளாக்க,பகுத்தறிவை விரிவாக்க, தமிழ்ப்பற்று பொங்கியெழ, பெண்ணடிமைத்தனம் நொறுங்க, பிறந்தது ஒரு புரட்சிக்கவி. மகாகவி பாரதியாரின் வழியிலே தன் புரட்சிப்பாதையைத் தொடர்ந்து, அவரின் பணிவான நண்பன் என்பது போல் " பாரதி தாசன்" புனைபெயரைச் சூடிக்கொண் — டவர் சுப்புரத்தினம். இவரே பின்னால் புரட்சிப்பாவலன் ஆனார்.

இந்தியாவிலுள்ள புதுவை நகரிலே 1891ம் ஆண்டு சித்திரைமாதம் 29ம் திகதி கனகசபை முதலியாருக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மூன்றாவது மகனாக அவதரித்தவரே பாரதிதாசன் ஆவார். பெற்றோர்கள் இவருக்கு இட்ட இளமைப்பெயர் சுப்புரத்தினம் என்பதாகும். சுப்புரத்தினம் இளமையிலேயே மிகவும் குறும்புக்காரச் சிறுவனாக இருந்தான். இவன் செய்த குற்றங்களால், குறும்புகளால் அவருடைய வகுப்பாசிரியர்களால் வெளியேற்றப் பட்ட சம்பவங்களும் பல நடந்தன. பின்னர் வயது வந்ததும் கவி இயற்றுவதில் விருப்பமுடையவராக இருந்தார். " விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பார்கள். அது போல் சுப்புரத்தினத்தையும் மதிப்பிடக்கூடியதாக இருந்தது. அதேவேளை இவர் பிறவிக்கவிஞர் என்பதற்கான அறிகுறிகளும் தென்பட்டன.

கல்லூரியிலே பயின்று "தமிழ்ப் புலவர்" தேர்விலே முதன்மையாகத் தேர்ச்சிபெற்றுத் தமிழாசிரியர் ஆனார். புதுவை மாநிலத்தில் பல்வேறு பாடசாலைகளிலும் பணியாற்றினார். தம்முடைய பதினெட்டாவது வயதுமுதல் ஐம்பத்தைந்து வயதுவரை முப்பத்தியேழு ஆண்டுகள் ஆசிரியசேவை புரிந்து கல்விச்செல்வத்தை மனம்போல அள்ளி வழங்கினார்.

சுப்புரத்தினம் ஒருமுறை பாரதியாருடன் நட்புக் கொண்டு, கலந்துரையாடி அவரது திறமையை அறிந்து கொண்டார். தமிழ்–விடுதலை– சீர்திருத்தம் ரீதியிலான கருத்துப் பரி – மாறல்கள் இவர்களிடையே ஏற்பட்டன. பாரதியார்மீது கொண்ட மதிப் –பாலும் அன்பாலும் தனதுபெயரை "பாரதிதாசன்" என மாற்றிக்கொண் – டார். அன்று முதல் பாரதிதாசன் என்ற பெயர் நிலைபெற்றுவிட்டது.

www.padippakam.com



1920ம் ஆண்டு மணம் புரிந்து நான்கு மழலைகளின் தந்தையானார். குடும்பஸ்தனாக இவர் இருந்தாலும் அரசியலில் தொடர்புகொண்டு, சட்டமன்றத்தேர்வில் வெற்றிபெற்று அம்மன்றத்தின் தலைவரானார். சமுதாயத்திலுள்ள சீர்கேடுகளைக் கண்டு மனம் கொதித்து, சமுதாய விழிப்புணர்வுப் பாடல்களையும் , தேசியப் பாடல்களையும் பாடினார். தமிழ்மொழி மீது அதீத பற்றுக் கொண்டு தமது உயிருக்கு ஒப்பாகவே தமிழ்மொழியை நேசித்தார். தமிழன்னையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்த இவர் " தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று தமிழுக்காகவே அயராதுழைத்தார்.

"சாவெனில் தமிழுக்காகச் சாகவேண்டும் - என்
சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும் ...................." என்று தமிழுக்காக தமிழின நலத்துக்காக சாகவும் துணிந்தவர் பாரதிதாசன். இவர் எழுதிய நூல்கள் பலதரப்பட்டவை.கவிதை,சிறுகதை, கட்டுரை, நாடகம், இலக்கணம் போன்ற சகல துறைகளிலுமாக எழுபத்திரண்டு நூல்களை இயற்றினார்.அத்துடன் தேசநேசன், ஆத்மசாந்தி, தாய்நாடு, முல்லை, குயில், புதுவைமுரசு முதலான பத்திரிகைகளின் ஆசிரியரா கவும் பணியாற்றினார்.

பாவேந்தர் பாரதிதாசன் புரட்சிகளையும் புரட்சிக்கருத்துக்களையும் வெளிப்படுத்திய முதற்பாவலரும் இறுதிப் பாவலரும் ஆவார் என தந்தை பெரியார் ஓரிடத்தில் கூறியுள்ளார். அவருக்கு ஈடாக இன்னும் எந்த ஒரு பாவலரும் தோன்றவில்லை. பாரதியாரின் பாடல்களைப்போல பாரதிதாசனுடைய பாடல்கள் யாவும் சீர்திருத்தத்தையும் விழிப்புணர்ச்சியையும் மக்களுக்கு ஊட்டின. இன்றும் ஊட்டிவருகின்றன. மதங்களிலும் பழைய ஆசாரங்களிலும் மூழ்கிக்கிடந்த மக்களிடையே இவரது பாடல்கள் பெருமாற்றத்தைத் தோற்றுவித்தன. ஆதலாலே இவர் ஒரு புரட்சிக்கவி ஆனார்.

புரட்சிக்கவியின் வன்மையைப் பாராட்டி 1962ம் ஆண்டு இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் மூதறிஞர் இராஜாஜி பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். இந்தப் புகழைத் தாங்கிக்கொள்ள முடியாமலோ என்னவோ 1964 ம் ஆண்டு இப்புரட் சிக்கவி இம்மண்ணை விட்டு மேலுலகத்தில் புரட்சிப்பாடல் இயற்றச் சென்றது.அன்னாரின் இழப்பு தமிழன்னையின் பேரிழப்பாயிற்று. கவிஞரின் மறைவுக்குப் பின்னரே அதாவது 1970 ம் ஆண்டு இவரு டைய " பிசிராந்தையார்" என்னும் நாடகத்துக்கு சாகித்திய அகடமிப் பரிசு கிடைத்தது. இவ்வாறு அவர் தம் மறைவிலும் புகழ் தேடினார்.

www.padippakam.com



இக்கவியின் நினைவாக 1982 ம் ஆண்டு திருச்சியிலே "பாரதிதாசன் பல்கலைக்கழகம்" என்றபெயரில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல இவரது நூல்கள், சேவைகள், என்பன இன்றும் அழியாச்சின்னங்களாகப் பரிணமிக்கின்றன.

பாரதிதாசன் ஒரு தமிழ்க்கவி ', தமிழரின் கவி: தமிழன் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவி: தமிழரின் புகழ் மேதினியில் ஓங்கவேண்டும் எனப் பிறந்த கவி : இத்தகைய கவியை இழந்து தவிக்கும் தமிழ் உலகத்துக்கு இனியொரு பாவேந்தர் பிறக்கமாட்டாரோ? பாவேந்தர் பெயர் ஜேர்மனியில் ஒலிக்கப் படுகின்றது. 9.5.92 அன்று எசன் நகரில்(ஜேர்மனி) புரட்சிப்பாவலர் பாரதிதாசனின் நூற்றியோராவது பிறந்தநாள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதை எண்ணும்போது எமது பெரியார்களின் சேவைகளும் தொண்டுகளும் எத்துணை முற்போக்கானவை, அவசியமானவை என எண்ணிப் பெருமைப்படுவோம்.

வாழ்க பாரதிதாசன் புகழ்!
வளம் படுத்துவோம் எம்தமிழை!!

படிப்பகம்

# மகாகவி சுப்பிரமணியபாரதியார்

ஆங்கிலேய ஆட்சியால் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியா சுதந்திரம் பெறுவதற்கும், மக்கள் சுயநிர்ணய உரிமை யுடன் வாழ்வதற்கும் சமூகச்சீர்கேடுகள் மண்ணோடு மண்ணாகிப் போவதற்கும் கவிதை எனும் தமது ஆயுதத்தைப் பயன்படுத்தி மக்களை வீறுகொள்ளச் செய்த கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார். சமூகச் சீர்திருத்தவாதியாக , அரசியல்வாதியாக, வேதாந்தியாக பற்பல கவிதைகளையும் எழுதியதுடன் இந்திய சுதந்திரத்துக்காகவும் போராடினார். சமூகச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாகத் தோன்றியதே இவரது சுதந்திரப் போராட்டம் எனில் மிகையாகாது.

சுப்பிரமணிய பாரதியார் இந்தியாவிலுள்ள எட்டயபுரம் எனும் ஊரிலே 1882 ம் ஆண்டு மார்கழிமாதம் 11ம் திகதி பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் லட்சுமி அம்மாள். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சுப்பிரம ணியன் என்பதாகும். மக்கள் இவரை " சுப்பையா " என்றும் அழைத் தனர். சுப்பிரமணியன் தனது ஐந்தாவது வயதிலேயே பெற்ற அன்னை யை இழந்தார். இவர் தந்தையாரின் அரவணைப்பில் வாழ்ந்து தமது கல்வியைக் கற்றதுடன் கவி பாடுவதிலும் திறமை பெற்றார். ஏழு வயதிலேயே கவி பாடத்தொடங்கிய சுப்பிரமணியனின் ஆற்றலைக் கண்டு எல்லோரும் அதிசயித்தனர். பாமரரும் புரிந்துகொள்ளும் வகை யிலே கவிதை இயற்றும் உற்சாகத்தையும் வேகத்தையும் கண்டு வியந்த எட்டையபுரத்துச் சமஸ்தானப் புலவர்கள் அவருக்கு "பாரதியார்" என்னும் பட்டத்தை வழங்கினர். இதன் பின்னர் சுப்பிரம ணியன் " சுப்பிரமணிய பாரதியார் " ஆகி தமிழிலக்கிய வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுவிட்டார்.

சுப்பிரமணிய பாரதியார் தமிழ், சமஸ்கிருதம்,கிந்தி, ஆங்கிலம், ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். சமூகச்சீர்திருத் தம், பெண்களின் சமவுரிமை, பெண்கல்வி, சாதி பேதமற்ற சமுதாயம், என்பன இவரின் முக்கிய கொள்கைகளாக இருந்தன. இத்தகைய புரட்சி உணர்வே பாரதியாரை இந்திய விடுதலைப் போராட்டத்துக்குள் உந்தித் தள்ளும் சக்தியாக அமைந்தது. பாடசாலை ஆசிரியராக இருந்த இவர் சுதேசமித்திரன் என்ற பத்திரிகைக்கு துணையாசிரியரான போது தமது கருத்துக்களை வெளியிட அப்பத்திரிகையையே பயன் படுத்தினார். பின்னர் சக்கரவர்த்தினி என்ற பத்திரிகைக்குத் தானே ஆசி ரியராகித் தம் கொள்கைகளை வெளியிட்டார். பின்னர் 1905 ம் ஆண்டு

" இந்தியா " என்ற வாரப்பத்திரிகையை உருவாக்கித் தமது அரசியற் கருத்துக்களை மக்களிடையே முழுமூச்சாகப் பரப்பினார். அறியாமையில் மூழ்கிக் கிடந்த சமுதாயத்தைத் தட்டி எழுப்பினார்.

" அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே
உச்சி மீது வானிடிந்தும் அச்சமென்பதில்லையே"......

என வீராவேசமாக முழங்கி மக்களுக்குத் துணிவையும் வீரத்தையும் புகட்டவிரும்பினார். குழந்தைகளுக்காகப் பல பாடல்கள் பாடி அவர்களிடையே ஒற்றுமையுணர்வையும் சுறுசுறுப்பையும் ஏற்படுத்தினார்.

" ஓடி விளையாடு பாப்பா ! நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா! ஒரு குழந்தையும் வையாதே பாப்பா!

எனக் குழந்தைகளின் மனதிலே ஆழப் பதியும் வண்ணம் பலபாடல்களைப் பாடினார். விழிப்புணர்ச்சி மிக்க அவரது கவிதைகள் பாமரமக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. " சுதேச கீதங்கள்" என்ற பெயரில் இவரது அரசியல் விழிப்புக்கவிதைகள் மக்களை அடைந்தன. இதன் காரணமாக பிரித்தானிய அரசின் எதிர்ப்புக்கு உள்ளானார். பொலீஸ் தேடுதலுக்கு உள்ளானபோதும் தமது கருத்துக்களைத் துணிவுடன் பரப்பி வந்தார். பல நூல்களை எழுதினார். கண்ணன் பாட்டு , குயிற்பாட்டு , பாஞ்சாலி சபதம், போன்ற காவியங்களை எழுதி வெளியிட்டார். இவற்றை விட தனிப்பட்ட பாடல்களையே ஏராளமாக எழுதினார்.

சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையும் ஆங்கிலப் பெண்மணியுமான நிவேதிதாதேவி இராமகிருஷ்ண மடத்தில் துறவியாக வாழ்ந்து வந்தார். பெண்கல்விக்கு ஊக்கமூட்டி, சமயத்தை வளர்த்து வந்த இவரைப் பாரதியார் சந்தித்த பின்பே பெண்ணின் அடிமைத்தனையை நீக்கவேண்டும் என உத்வேகம் கொண்டார். அன்னை நிவேதிதாதேவி பாரதியாரை நோக்கி, உமது மனைவி எங்கே? ஏன் இங்கு அழைத்துவரவில்லை? என வினவியபோது அவர், பொது இடங்களுக்கு மனைவியரை நாம் அழைத்துச் செல்வதில்லை என்று கூறினார். இதைக் கேட்டவுடன் நிவேதிதாதேவி கோபத்துடன் "சமூகத்தில் ஒரு பகுதியை அடிமைப்படுத்தி வைத்தால் மறுபகுதி எப்படிச் சுதந்திரம் பெறமுடியும்? பழையதை மறந்து உன்மனைவியை உனது இடக்கரமாகப் பாவித்துக்கொள்" என்று புத்திமதி கூறினார். இதன் பின்னர் பெண்சீர்திருத்தம் நாடியது மட்டுமன்றிச் செயலிலும் செய்து காட்டினார். அதற்காகப் பலவழிகளில் உழைத்தார்.

" மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் — என்றும்,

www.padippakam.com



பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் "............ என்றும் புதுமைப் பெண்களைப் பாரதி படைத்தார். இவ்வாறு ஒரு தீவிரவாதியாக வாழ்ந்த பாரதியாருக்கு மகாத்மா காந்தியுடன் பழகும் அரிய சந்தர்ப்பமும் கிடைத்தது. இத்தகைய தன்மைகளால் பாரதியார் புரட்சிக்கவியாக புதுமைக்கவியாக, கவியரசராக, மகாகவியாக, மாறிப் பல சீர்திருத்தக் கொள்கைகளையும் ,சமுதாய முன்னேற்றகரமான கருத்துக்களையும் மக்கள் மத்தியில் வைத்த மக்கள்கவிஞர் பாரதியாரே. எளியநடை, எளிய சந்தம் ,பொதுமக்கள் விரும்பும் மெட்டு, முதலிய கவிதை யுக்திகளைக் கையாண்டு கவிதைகள் எழுதியதன் மூலம் பழைய இலக்கண மரபுக்கவிதைகளுக்கு விடுதலை கொடுத்தார்.

தமிழ்மொழி மீது அதீத பற்றுக்கொண்டு தமிழ் வளர்ச்சிக்காக அரிய பல சேவைகள் செய்தார். யாமறிந்த மொழி களிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என தமிழின் இனிமையை வியந்து கவிதையில் போற்றியுள்ளார். மக்கள் சீர்திருத்தம், மண்விடுதலை, பெண்விடுதலை, சமரச சன்மார்க்கக் கோட்பாடு, என்பவற்றினைப் பெறுவதற்காக அயராது, தம் உழைப்பாலும் உள்ளத் தாலும் உழைத்த பாரதியார் தமது வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட வேதாந்தக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பினார். அத்துடன் காளி, சரஸ்வதி, கண்ணன், முருகன், சக்தி உட்பட்ட பல தெய்வங்கள் மீது அருட்பாக்களைப் பாடி ,சமுதாய விழிப்புணர்வையே வேண்டிநின்றார். இத்தகைய சேவைகளின் பின் பாரதியார் 1920ல் மீண்டும் சுதேசமித்திரனுக்கு உதவியாசிரியராகப் பணி புரிந்தார். பல கருத்துக்களை இப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டு வரும்வேளையில் வறுமை இவரைப் பற்றிக் கொண்டது. பிற உயிர்களிடம் அன்பும் அக்கறையும் கொண்ட பாரதியாருக்கு ஆதரவு எதுவும் கிடைக்கவில்லை. அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை. எனவே ஆத்ம திருப்திக்காகவும் மனச்சாந்திக்கா கவும் ஆலயவழிபாட்டுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டார். முப்பத்துமூன்று வயதிலேயே முதுமையுணர்வை அவர் அடையக் காரணம் ஓய்வின்றி , உறக்கமின்றி , சமுதாயச் சீர்திருத்தத்துக்குத் தம் உடலைப் பயன் பயன்படுத்தியமையே ஆகும். ஆலய வழிபாட்டுக் குச் சென்ற பாரதியார் அங்கு நின்ற கோயில் யானைக்கு தம் அர்ச்ச னைத் தட்டிலுள்ள பழத்தைக் கொடுத்தபோது, அவர் யானையாலே தூக்கியெறியப்பட்டு நோய்வாய்ப்பட்டார். இந்நோய் மாறாமல் சில நாட் கள் வருந்திய பாரதியார் 1921 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ம் திகதி அமரரானார்.

மக்கள் விடுதலைக்கும், மண்விடுதலைக்கும் பாடுபட்ட பாரதியார் இவ்வுலகினின்றும் விடுதலை பெற்றுவிட்டார். சமுதாயம் சிறப்படையப் பாடுபட்ட மகாகவியின் இறப்பு பரிதாபகரமானது என்பதாலோ என்னவோ பாரதியாரின் இறப்பைப் பலர் எழுதவும் பேசவும் தயங்கியுள்ளனர். பாரதியார் இவ்வுலகை விட்டுச் சென்றாலும் தமிழ் மக்கள் உள்ளங்களிடையே எங்கும் என்றும் வாழ்ந்து வருகிறார். அவர் விதைத்த கவிதைக் கருத்துக்கள் இன்று முளைவிட்டுக்கொண்டே இருக்கின்றன. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவு இன்றும் எம் மத்தியில் நிறைவேறுகிறது என்பதை நோக்கும் போது, பாரதி ஒரு " தீர்க்க தரிசி " என்று கூறுவதில் தவறில்லை.

வாழ்க எம் தமிழ்!
வாழ்க பாரதி புகழ்!

47

# அகிம்சைத் தந்தை காந்தியடிகள்

உலகம்போற்றும் உத்தமராகவும் மாந்தருக்குள் ஒரு தெய்வமாகவும் விளங்கிய காந்தியடிகளின் நாமம் இன்று உலகெங்கும் பேசப்படுகிறது. மக்களின் சுதந்திர உணர்வைத் தட்டியெழுப்பி அடிமை விலங்கைத் தகர்த்தெறிந்த வீரர். அறிவுச்சுடர், அரசியல் மேதை, இந்தியநாட்டின் இணையில்லாத் தந்தை, அவருடைய வாழ்க்கை நெறி மக்களை நல்வழியில் நடத்திச்செல்லும் ஞானஒளி. கடமை வாழ்வுநடத்துவோரின் கலங்கரை விளக்கமாக, இவரது வாழ்க்கை உலகுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகும். அண்ணல் காந்தியடிகள் "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என்றமுறையில் சுதந்திரத்தை அகிம்சாமுறையில் சுவீகரித்துக் கொண்ட மகான் இவர்.

சுதந்திரத்தின் சுவடின்றி பாரததேசம் ஆங்கிலேய ஆட்சியியால் அல்லற்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் என்னும் ஊரில் 1869 ம் ஆண்டு அக்டோபர்மாதம் 2 ம் திகதி பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் (காபா) கரம்சந்காந்தி: தாயார் பெயர் புத்திலிபாய் அம்மையார்.காந்தியடிகளுக்குப் பெற்றோர் இட்ட இளமைப்பெயர் மோகனதாஸ் காந்தி என்பதாகும். காந்தியடிகளிடம் இளமையிலேயே அன்பு, அடக்கம், இரக்கம், உண்மைபேசுதல் ஆகிய நல்ல பண்புகள் அமைந்திருந்தன. இதனால் இவர் உள்ளத்தில் தூய்மை, செயலில் தூய்மை, பேச்சில் தூய்மை காணப்பட்டன.

காந்தியடிகள் எல்லோரிடத்திலும் இரக்கம் கொண்டவர். விஷேடமாக தமது பெற்றோர்களில் தீராதபாசம் உடையவர். சூரிய வணக்கம் செய்து, உணவருந்தும் பழக்கம் கொண்டவர் இவரது தாயார் புத்திலிபாய் அம்மையார். மழைக்காலங்களில் சூரிய உதயம் தாமதமாகவே, உணவு அருந்தாமல் காத்திருக்கும் தாயைப் பார்த்து வேதனைப்படுவார் சிறுவனாக இருந்த மோகனதாஸ் காந்தி.

சிரவணன் என்பவனின் கதைமூலம் தன் பெற்றோருக்குச் செய்யும் தொண்டு ,கடமை என்பவற்றையும், அரிச்சந்திரன் கதைமூலம் உண்மையின் பெருமையினையும் மோகனதாஸ் காந்தி அறிந்துகொண்டார். இவை இரண்டும் அவரது இளவயதில் ஆழப்பதிந்து,அவரது வாழ்நாள் முழுவதும் துணைநின்றன. இவற்றைத் தமது தாரகை மந்திரமாகப் போற்றி வாழ்ந்தார் அண்ணல் காந்தியடிகள்.

காந்தியடிகள் பாடசாலைப்படிப்பை முடித்தபின்பு சட்டக்கல்வி பயில்வதற்காக இங்கிலாந்து சென்றார். அவ்வாறு செல்லும்போது தாயாருக்கு அளித்த வாக்குறுதிகளின்படி 'மது, மாது , மாமிசம் என்பவற்றை இறுதிவரையும் நாடாது, கல்வியைக் கருத்துடன் கற்று "பாரிஸ்டர் பட்டம் " பெற்றுத் தாய்நாடு திரும்பினார். பின் வழக்கறிஞரான காந்தி இந்தியநாட்டு மக்களுக்கு மட்டுமல்ல தென்னாபிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களிடையேயும் விழிப்பையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தினார். தென்னாபிரிக்க அரசாங்கத்தையும் அவர்களது இன ஒதுக்கல் கொள்கைகளையும் எதிர்த்து ,அவர் நடாத்திய போராட்டம் வரலாற்றுப் புகழ் பெற்றதாகும்.

காந்தியடிகள் இந்திய சுதந்திரத்துக்காக அரும்பாடுபட்டார்.நாட்டுப்பற்றையும் சுதந்திரத்தையும் மக்களுக்கு ஊட்டினார். ஆங்கில அரசினர் காந்தியடிகளைப் பலமுறை சிறைப் படுத்தினார்கள். ஆங்கிலேய ஆட்சியை அகற்றுவதற்காக அவர் பல திட்டங்களை வகுத்தார். அகிம்சை வழிப்போராட்டம், கதர் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் என்பவற்றைத் தோற்றுவித்தார். தீண்டாமையை ஒழிக்க அரும்பாடுபட்டார். அண்ணலின் வாழ்க்கைத் துணைவியாராகிய கஸ்தூரிபாய் அம்மையாரும் காந்தியடிகளின் கொள்கைகளுக்கு உறுதுணையாக இருந்தார். குடும்பஸ்தராக காந்தி இருந்தாலும் தம்வாழ்நாளிற் பெரும்பகுதியை வகுப்புவாதவெறியை ஒழிப்பதற்கும் மற்றொருபகுதியை ~~வகுப்புவாதவெறியை~~ ஒழிப்பதற்கும் செலவிட்டார். பெண்விடுதலைக்கும் அவர்களது உணர்வுகளுக்கும் முதன்மைகொடுத்த பெருந்தலைவர் காந்திமகான் ஆவார்.பெண்களின் தனித்துவம் பற்றிய பல கருத்துக்களையும் நூல்களையும் வெளியிட்டார். அன்னை கஸ்தூரிபாயுடன் நடத்திய இல்லறவாழ்க்கையிலே பெண்மைக்கு அளித்த மகத்துவத்தை காந்தி எழுதிய சுயசரிதை நூலிலிருந்து அறியலாம். எளிமையின் உருவமாய், தொண்டின் சின்னமாய் , தியாகத்தின் மறுஉருவமாய், காந்தியடிகள் விளங்கினார். அதனால் தான் அவர் மனிதராக அல்லாமல் மகாத்மாவாக மதிக்கப்பட்டார். இன்றும் எம்மத்தியில் மதிக்கப்படுகிறார்: ஏன் இந்த உலகம் உள்ளவரை மதிக்கப்படுவார். ஏழைஎளியவர்களின் அன்றாட வாழ்க்கையிலே பங்குகொண்டு அவர்களின் துன்பங்களைப் போக்குவதே இறைபணி என எண்ணி வாழ்ந்தார். படைப்பலத்தையோ, போர்க் கருவிகைளையோ நம்பியிருக்காது ஆன்மீகபலத்தினால் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்த இந்தியாவுக்கு விடுதலைபெற்றுத் தந்தார். மக்கள் வையகத்தில் வாழ வழி காட்டினார்.மக்களை அரசியற்துறையிலும் ஆன்மீகத்தறையிலும் இணைத்து , அவர்களுக்கு சுதந்திரத்தை வாங்கிக்கொடுத்த பெருமை காந்திஜிக்கே உரியது. இதனால் இவர்

www.padippakam.com



தேசபிதாவாக உயர்ந்து தனிச்சிறப்புப் பெறுகின்றார். சிந்தனையிலும் பேச்சிலும், செயலிலும் உண்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்த அவர் தமது வாழ்க்கைச் சரிதநூலுக்கு " சத்திய சோதனை" எனப்பெயரிட்டு எமக்கீந்தார்.

புன்னகை மன்னர் காந்தியண்ணலின் அமைதி நிறைந்த பார்வை பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும். அவருடைய அன்பு கனிந்த மொழிகள் நமது உணர்ச்சிகளைத் தன்வயப்படுத்தும். அவருடைய பொக்கைவாய்ப் புன்னகைக்கு அடிமையாகாதார் எவரும் இல்லை. சத்தியம் சான்ற பெருந்தகையோன் காந்தி "தேசபிதா" 1948 ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி கொடியவன் ஒருவனின் கைத்துப்பாக்கிக்கு இரையானார். அந்தோ! பரிதாபம். எந்த மண்ணுக்காககச் சுதந்திரம் வேண்டிப் போராடினாரோ அந்த மண்ணிலேயே அவரது உடல் சரிந்தது. "கரே ராமா! கரே ராமா!" என்ற வார்த்தை வானிற் கலந்தது. ஈடிணையற்ற தன் மைந்தனின் உயிரற்ற சீரத்தைப் பாரதமாதா தன்னிரு கரங்களால் அணைத்துக் கண்ணீர்விட்டாள்.

தீயவற்றைப் பார்க்காதே: தீயவற்றைப் பேசாதே: தீயவற்றைக் கேட்காதே: இவையே அண்ணல் நமக்குக் காட்டிய அறவழியாகும். புகழுடம்புடன் காந்தியடிகள் இன்று நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவரது அறிவுரைகளையும், வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளையும், சத்திய சோதனை என்னும் நூலையும் எம்வாழ்க்கையோடு இணைப்பதே நாம் அவருக்குச் செலுத்தும் நன்றி எனலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# கரும்புலி வீரர்கள்

கரும்புலிகள் என்றால் கறுத்த நிறமுடைய புலிகள் என்று பொருள்படும். புலிகள் எனும்போது எல்லோரும் அறிந்த, தெரிந்த தமிழீழத் தாயகத்தை விரும்பி நிற்கும் விடுதலை வீரர்கள் என்பதைக் குறித்து நிற்கின்றது. இங்கே " கருமை" எனும் அடை மொழியை நாம் நோக்கின் அது இருள் என்பதை எமக்குத் தெளிவு படுத்துகின்றது. அத்துடன் இருளிலுள்ள பொருள் எதுவும் புலப்படா தது போன்று மறைமுகமான, இரகசியமான— புலப்படாத செயற்பாட் டைக் கொண்டவைதான் கரும்புலி வீரரின் நடவடிக்கைகள் என்பதையே " கரும்புலி" என்ற பதம் எடுத்தியம்புகின்றது. இது மட் டுமன்று சளைக்காத திடமுடைய மனோபாவம், தளராத வைராக்கி யம், மனத்துணிவு என்பவற்றின் நடமாடும் உருவங்களே கரும்புலி கள் எனின் மிகையாகாது.

எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாக உதயமாகியதே கரும்புலிகளின் தோற்றம். பலம் வாய்ந்த எதிரியை எதிர்த்து நிற்கவேண்டிய சிறிய சமுதாயமாகிய எமக்கு சம யோசிதமான போராட்ட யுக்தி கொண்ட பலம் வாய்ந்த ஆயுதம் ஒன்று தேவை. அந்த ஆயுதம் தான் " கரும்புலி " என எமது தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களால் கரும்புலி பற்றிய வரைவிலக்கணம் கூறப்பட்டது. கரும்புலிகள் எமது விடுதலை இயக்கத்தின் தற்காப்புக் கவசங்கள்: எதிரிகளின் படைப்பலத்தை மனப்பலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காண விழையும் அபூர்வப் பிறவிகள். " கரும்" என்ற சொல்லின் போர்வைக்குள் இலட்சிய மூச்சாகக் கொண்டு, பெயரையும் முகத்தையும், மறைத்து போராட்டத் தேரினை முன்னோக்கித் தள்ளி விடும் வலிமை மிகு சக்கரங்களாகத் திகழ்கின்றனர். உலகில் பிறந்த ஒவ்வொருவரும் மிக விரும்பி நேசிப்பது தத்தம் உயிரையே ஆகும்.அதற்காக அவன் எத்தனையோ நடவடிக்கைகளை மேற்கொள் கின்றான். உயிர் வாழவேண்டும் என்றும், சொகுசாக வாழவேண்டும் என்றும் அவன் படும் பாடுகள் எத்தனை எத்தனையோ? சொல்லில் அடங்கா. ஆனால் அதே மனித உருவம் எடுத்த கரும்புலிகளின் காதல் அவர்தம் உயிரிலல்ல: அரிது அரிது எனக் கூறும் மானிடப் பிறப்பின் வாழ்க்கையிலும் அல்ல. அவன் தன்னைவிட தன் குறிக் கோள் ஒன்றையே நேசிக்கிறான். தமிழீழ விடுதலையைக் காதலிக்கி

றான். அதற்காகத் தன் வாழ்க்கையை மனமுவந்து ஒப்புக்கொடுக்கும் தெய்வீகத் தன்மையுடைய துறவி ஆகின்றான். இத்துறவிகள் அசாதாரண மானிடர்களே.

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டு விட்ட இலட்சியவெறி கொண்டவர்களின் தியாகங்கள், சாதனைகள், எழுத்திலோ, பேச்சிலோ வடிக்கமுடியாதவை. பாரதக் கதையில் வரும் கர்ணனையும் விஞ்சிவிட்ட உயர்ந்த வள்ளல்கள் இவர்கள். அன்று 1987 ம் ஆண்டு தீவிரம் வாய்ந்த சிங்கள இராணுவத்தின் திடீர் நடவடிக்கைகளால் மக்கள் குழம்பி, போராட்டத்தில் நம்பிக்கையை இழக்கக்கூடிய சூழ்நிலையிலே மிகுபலம் வாய்ந்த ஓராயுதம் எம் மண்ணை மீட்கத் தேவைப்பட்டது. இதே ஆண்டு ஆடிமாதம் ஐந்தாம் திகதி நெல்லியடி மகா வித்தியாலயத்தில் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருந்த இராணுவ முகாமிற்குள் முதன்முதலாக, தற்கொலை ஆயுதமாகத் தன்னைப் பாவித்து, இராணுவ யந்திரத்தைத் தவிடு பொடியாக்கிய முதல் வீரமனிதர் " கப்டன் மில்லர் " அவர்களே. கரும்புலி வரலாற்றில் ஆணிவேராகி எமது போராட்டத்திலே பொறிக்கப்பட்டுவிட்டார். அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலிகளின் தாக்குதல்கள் நடைபெற்று வீரமரணம் அடைந்துள்ளனர்.

போர்க்களம் செல்லும் ஒவ்வொரு விடுதலை வீரனும் வீராங்கனைகளும் எந்நேரத்திலும் சாவைச் சந்திக்கத் தயாரான நிலையிலேதான் செல்கின்றார்கள். ஆனால் சாவுக்கு நியமிக்கப்பட்ட நேரம் எது என்று தெரியாமலே போருக்குப் போய் திரும்பி வருவதும் உண்டு: வீரமரணம் எய்துவதும் உண்டு. ஆனால் கரும்புலிகளின் நிலையோ வேறுவிதமானது. களம் புகுவதற்குச் சில நாட்கள் முன்னரேயே தங்கள் சாவைத் தெரிந்து வைத்திருக்கின்றனர். அதாவது இறப்பை நேசித்து அதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள். அடுத்த கணநேரத்தில் " நான் சாகப் போகிறேன் " என்ற முடிவான ஒரு உண்மையைத் தெரிந்து கொண்டு அஞ்சா நெஞ்சுடன் வெடிமருந்துகளை மலர்மாலையென அணிந்து, மலர்ந்த முகத்தோடு எதிரியின் முகாம் எனும் களப்பலிக்குச் செல்கின்றான் கரும்புலி. அங்கே " தமிழீழ விடுதலை " என்ற மூச்சினை விடுவதே அந்தக் கருவேங்கையின் தீராதவேட்கை ஆகும்.

வெடிமருந்துடன் உடல் வெடித்துச் சிதறுவதற்கு மனித மனம் ஒருபோதும் இடம் கொடாது. சாதாரண மனிதனால் இது சாத்தியமற்றது. ஆனால் தன்னை அழித்துக் கொள்ளத் தயாரான மனோதிடமும் ஆன்மீகபலமும் பின்னிப் பிணைந்து, மனவுறுதி

www.padippakam.com



உரமேறிய வீர உணர்வுள்ள தியாகச் செயல் எமது கரும்புலிகளுக்குத்தான் சொந்தமானது. இந்நடவடிக்கையை உலகெங்குமே காண முடியாது. ஆகையால் உலக அதிசயங்களில் புதுமையானதாகும்.

களம் புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீர சாதனைகள் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு தடுமாற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தும் அதேவேளையில் தமிழ்மக்களின் சுதந்திர தாகத்தை மேலும் ஒருபடி வளர்த்துச் செல்ல வழிவகுக்கின்றன.

கரும்புலிகளின் நினைவுநாட்களிலே அவர்தம் தியாகத்தை ஆராதிப்பது அவர்களுக்கு நாம் செய்யும் சிறிய கைம்மாறாகும். எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்து, எழுதப்படாத சரித்திரங்களான தியாகிகளை எமது நினைவில் என்றென்றும் நிலைநிறுத்திப் பூசிப்போமாக!

# தியாகச்சுடர் திலீபன்

காலம் காலமாக " சிறுபான்மை இனம்" என்ற போர்வையில் ஒதுக்கப்பட்டுவந்த தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் வாழ, சுதந்திர சோஷலிச தமிழீழத்தை அமைக்கும் பணியில் தலைவர் பிரபாகரன் அவர்கள் அச்சாணியானார். இந்தத் தமிழீழ தர்மயுத்தத்தில் பலரையும் பலவற்றையும் இழந்துதான் தமது தலைமையை வழிநடத்த வேண்டும் என்பது விடுதலைப்புலிகளின் உன்னதமான கொள்கைகளில் ஒன்றாக இருந்தது. அந்த வகையிலே விடுதலை இயக்கமும் நாமும் இழந்துவிட்ட மாமனிதர்கள், மறைந்தும் மணம் வீசும் கற்பூரத்தியாகிகள், கரும்புலி ஆன்மீகபலவான்கள், அகிம்சையுடன் மரணநோன்பு தழுவியவர்கள், நேருக்குநேர் பொருத மாவீரர்கள், மக்களுக்காக மரணித்த போராளிகள் எனப்பட்ட தியாகிகளின் வரிசையிலே அகிம்சைப் போர்க்கொடி தூக்கிய மனிதப்புனிதன் திலீபனைப் பற்றியும் அவரது தன்னலமற்ற தன்மைபற்றியும் தியாகச்செயல் பற்றியும் பேசுவதும் பூசிப்பதும் தமிழீழ மக்களாகிய எமக்குப் பெருமையன்றோ! "

www.padippakam.com



மனிதப்புனிதன் திலீபனைப்பற்றித் தெரியாத, அறியாத ஈழத்தமிழர் எவருமே இல்லை. மக்களுக்காக மரணித்த அந்தத் தியாகியை அந்த மண்ணின் மக்கள் அறியாமற்போக நியாயம் இல்லையே! தமிழீழ மண்ணாம் " ஊரெழு" என்னும் சிற்றூர் திலீபனின் பிறப்பினால் பெருமை பெற்றுவிட்டது. ஊரெழு என்ற கிராமத்திலே திரு.திருமதி.இராசையா தம்பதிகளின் தவப்புதல்வனாக 1963ம் ' ஆண்டு கார்த்திகைமாதம் 29ம் திகதி பிறந்தார் திலீபன்.இவருக்குப் பெற்றோர் இட்ட இளமைப்பெயர் பார்த்திபன் என்ற அரிய நாமமாகும். பார்த்திபன் பிறந்து ஒன்பதாவது மாதத்திலே ஈன்றெடுத்த அன்னை தன் மகவைத் தமிழீழ அன்னையிடம் ஒப்படைத்துவிட்டு விண்ண—கம் சென்றுவிட்டாள். அந்தோ! பரிதாபம்!! தாயின் அரவணைப்பை அன்போடு பராமரித்த தந்தையிடம் பெறமுடியாமற் போகவே தமிழீழ அன்னையை நேசித்து, அவள் மடிமீது துயில ஆதங்கம் கொண்டார் பார்த்திபன். தந்தையாரின் சிறந்த வளர்ப்பிலே கல்வி கற்றுத் திறமைமிக்க மாணவனாகத் திகழ்ந்தார். பாடசாலை அதிபருக்கு மகனாகப் பிறந்தது மட்டுமன்றி பொருளாதார வசதிநிறைந்த சூழ்நிலையில் வளர்ந்தார். யாழ். இந்துக் கல்லூரியிலே தமது உயர்படிப்பை மேற்கொண்டு வந்தபோதும் இவருடைய மனம் தாய்மண் விடுதலையிலும் மக்கள் விடுதலையிலும் அக்கறை கொண்டது. 1983ம் ஆண்டு ஈவிரக்கமின்றி கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்கள இனவெறியர்களின் கொடுமைகளையும் உயிர்ப்பலி வேட்கையையும் கண்டு மனம் குமுறிக் கொதித்தெழுந்தார். இந்த அட்டூழியங்களை அறவே ஒழித்திடத் திடசங்கற்பம் கொண்டார். பல்கலைக் கழகத்திலே மருத்துவப் பட்டப்படிப்பைப் பயிலும் வாய்ப்புக் கிடைத்தபோதும் அதைத் துச்சமாக மதித்துத் தட்டிக்கழித்தார். மருத்துவத்தின் மூலம் மனிதவுயிர்களைக் காக்கமுடியும். ஆனால் முழுமக்களையும் காப்பதற்கு மருத்துவம் இடமளிக்காது என உணர்ந்து, மக்களைக் காக்கவும் மண்ணை மீட்கவும் விடுதலைப்பணியைத் தேர்ந்தெடுத்தார். இதே பணியினைச் செய்துவந்த விடுத்லைப் புலிகள் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார். விடுதலைப் புலிகள் இயக்கம் இவருக்கு இட்ட பெயரே திலீபன் என்பதாகும்.

தனது நாடு, மக்கள் மொழி என்பவற்றையே நேசித்து அறிவியல் ரீதியிலான பலதிட்டங்ளைத்தீட்டி, இயக்கத்துக்குப் பெருமை தேடிக்கொடுத்து, தலைவரின் நம்பிக்கைக்கு உரியவராகி, மிகக்குறுகிய காலத்தில் யாழ்மாவட்ட அரசியற்பிரிவு பொறுப்பாளராக விளங்கினார். இவருடைய அன்பான குணமும் பேச்சுக்களும் மக்களைக் கவர்ந்தன. சிங்கள இராணுவத்தினால் அல்லற்

படும் ஈழத்தமிழ் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுகிறோம் என்ற பெய ரில் " ஒப்பந்தம்" ஒன்றைச் செய்ய முன்வந்தது இந்திய அரசு. இந்திய வல்லாதிக்க வியூகத்தின் கீழ் இலங்கையைக் கட்டுப்படுத்—தும் இந்த ஒப்பந்தம் 1987ல் ஈழத்தமிழரின் தலைவிதியை நிர்ணயித் — தது. விடுதலைப்புலிகளின் உடன்பாடில்லாமல் நடைபெற்ற இந்த உடன்படிக்கையில் கூறியபடி இலங்கையரசு நிறைவேற்றவில்லை. மாறாக " சமாதான ஒப்பந்தம் " என்ற போர்வையில் சமாதானப் படையுடன் சிங்கள ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்ற தைக் கவனித்தார் திலீபன். மனங் கொதித்தார்: வீறு கொணடெழுந் தார். இதை இன்னும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என தன் வாழ்க்கைக்கே முடிவான ஒரு முடிவுக்கு வந்தார். " மக்கள் புரட்சி வெடிக்கப் போகின்றது" என்று தலைவர் பிரபாகரன் சென்னையில் ஆரம்பித்து வைத்த அகிம்சைப் போராட்டத்தை பாரததேசத்திடம் உரிமைகோரி ஆரம்பித்தார்.

தலைவரின் தலைமையிலே 1987ம் ஆண்டு புரட்டாதி 15ம் திகதி ஐந்து அம்சக்கோரிக்கையை முன்வைத்த திலீபன் நல்லூர் வடக்கு வீதியிலுள்ள " கந்தன்கருணை" இல்லத்தின் முன் அமைதிப்படை என்ற பெயரில் வந்த, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிராக அறப்போர் தொடுத்தார். அந்த அம்சக்கோ ரிக்கைகள் பின்வருமாறு :

1. பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் சிறைவைக்கப்பட்ட தமிழர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.
2. வடக்கு—கிழக்கு மாநிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும்.
3. இடைக்கால அரசு அமைக்கப்படும்வரை நிவாரணப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது.
4. இடைக்கால அரசு அமைந்தபிறகே அதன் பொறுப்பில் போலீஸ் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும்.
5. சிங்கள ஊர்க்காவல் படையினரிடமிருந்து ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

இவருடைய உண்ணாவிரதம் மக்கள் மத்தியில் மாபெரும் எழுச்சியைத் தோற்றுவித்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரச அலுவலகங்களுக்கு முன்னால் மறியற் போராட் டங்கள் ஆரம்பமாகின. யாழ்ப்பாணத்திலுள்ள இலட்சக்கணக்கான மாணவர்கள் ஊர்வலங்கள் பலவற்றை நடத்தி, இந்தியாவுக்கு எதி ரான கோஷங்களை முழங்கினர். சிறுவர் —சிறுமியர் பெண்கள், முதி யோர் என மக்களணிகள் திரண்டன.

www.padippakam.com



பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தை இந்திய அரசு கொச்சைப் படுத்த முயன்றது. நீராகாரம் கூட அருந்தாமல் ஒருவாரகாலத்துக்கு மேலாக உண்ணாவிரதமிருந்தார். அகிம்சைத் தந்தை மகாத்மா காந்தி நீர் அருந்தித் தமது உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். ஆனால் திலீபனோ அவரை மிஞ்சிவிடும் நிலையில் பதினொரு நாட்கள் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் தன்னை வருத்தித் தமிழ்பேசும் மக்களின் விடுதலைத் தீயைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தார். இவர் உண்ணா நோன்பிருந்து மரணப்படுக்கையில் இருந்தபோதும் " மக்கள் எழுச்சிபெற்றுவிட்டார்கள்: தலைவரை உறுதியாக இருக்கச் சொல்லுங்கள்: எனக்காக எதையும் விட்டுக் கொடுக்க வேண்டாம் " என்று கூறிய தியாகத்தின் சிகரம் புரட்டாதித் திங்கள் 26ம் திகதி அத்திவாரமற்ற கட்டிடமெனச் சரிந்து, காற்றினுட் கலந்து, சுதந்திர வானில் விடிவெள்ளியாகிவிட்டது.

மருத்துவ வசதிகளையும் ஏற்காது, நீரும் அருந்ாது உண்ணாவிரதம் இருந்து உலகில் புதிய அத்தியாயம் ஒன்றைச் சிருஸ்டித்து விடுதலைப் போராட்டத்துக்கு மட்டுமன்றி எமது இனத்துக்கே பெருமை சேர்த்த தியாகச்சுடர் திலீபன். " மக்கள் புரட்சி வெடிக்கப் போகிறது" எனத் தீர்க்க தரிசனமாகக் கூறிய திலீபன் தமது மண்ணுக்காக, மக்களுக்காக, விலைமதிப்பற்ற உயிரை அர்ப்பணித்தார் அந்த அர்ப்பணத்தில் அவர் அனுபவித்த வேதனைகள் சொல்லில் வடிக்க முடியாதவை. பேச்சில் உரைக்க முடியாதவை. தினம் தினம் நிமிடத்துக்கு நிமிடம் ...... செக்கனுக்குச் செக்கன் உடலிலிருந்து உயிர் விலகிவரும் மாபெரும் மரணநோன்பினை அல்லவா எமக்காக அவர் நோற்றார். தம் சாவினாலே விடுதலைக்கோர் சாவியானார் திலீபப் பெருந்தகை. " மக்களுக்காக மரணிக்கத் தயார் " தயார் எனக்கூறி அதனை நிரூபித்துக்காட்டிய திலீபனின் பாதையிலே நடந்து சென்று, அதன் வழி அகிம்சைத்தாய் அன்னை பூபதியும் தம் இன்னுயிரைத் தாயக விடுதலைக்காக மரணநோன்பிருந்து அர்ப்பணித்தார். அது மட்டுமல்ல விடுதலைப்புலி இயக்கத்தினரின் தாயகப்பற்று, தார்மீகப்பற்று, செயலில் உறுதி, கொள்கையில் உறுதி,போராட்ட வடிவத்தில் புதுமை போன்ற பல அம்சங்களை இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல இந்த உலகநாடுகளுக்கே புலப்பட வைத்தது திலீபனின் மரணம் என்றால் மிகையாகாது.

படிப்பகம்

# அன்னை பூபதி

அன்னை பூமிக்காக அமைதி வாழ்வு வேண்டி, இந்திய அமைதிப்படையிடம் அடிபணியாது, அறப்போர் தொடுத்து தம் மண்ணுக்காக மரணித்தவர் அகிம்சைத்தாய் அன்னை பூபதி ஆவார். மாதர்குலத்துக்கு எழுச்சிப் பாதையை வழிவகுத்து, அன்னையர் முன்னணித் திலகமாக நின்று இந்தியப் படைக்குத் தக்க பாடம் புகட்டி மரணத்தைத் தம் இனத்துக்காக அரவணைத்த தியாகத்தாய். அன்னையின் தியாகச்செயல் தமிழன்னையர் குலத்துக்கு தைரியமூட்டும் ஒரு எழுச்சிப் பாடம். ஏன் மாணவ மாணவிகளுக் கும் உரமூட்டிய தாயாகவும் விளங்குகின்றார். ஒரு அன்புத் தாயாய் அமைதியொடு நின்று அகிம்சைநெறி கடைப்பிடித்த நவயுக வீரத் தாயே பூபதி அம்மா.

1938 ம் ஆண்டு மட்டுநகர் ஈன்றெடுத்த மாது சிரோன்மணி பூபதி அம்மையாரின் மகத்தான வீர நெஞ்சும் , [redacted] 1987 ம் ஆண்டிலே இந்திய இராணுவம் தமிழீழத்தில் காலடி எடுத்து வைத்தபோது எரிமலையென வெடிக்கத் தொடங்கியது.

தென் தமிழீழத்தின் தெருவோரம் எங்கும் தமிழ னின் பிணங்கள்: இரத்த வெள்ளத்தில் மிதந்த மனித உடல்கள்: ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடாவடித்தனமான படுகொலைகளுக்குத் தாமும் துணைபோவது போல் சேர்ந்துகொண்ட இந்திய இராணுவம் செய்த படுகொலைகள், பாலியல் வன்முறைகள், மற்றும் குண்டு வெடிப்புப் புகையால் புகைமேகமாகி, மயானக் கோலத்துடன் காட்சி அளித்தது மட்டுநகராம் மீன்பாடும் பொன்னகர். அந்நியரின் ஆக்கிர மிப்பையும் அதர்மத்தையும் கண்டு ஆவேசத்துடன் மனம் குமுறி, அகிம்சைப்போரைத் தொடுக்க உறுதி கொண்டார். அலையும் எம் இனத்துக்கு விடிவுகாண அன்னையர் முன்னணியை வழிப்படுத்தி அவர்களின் அச்சாணியாக அணிதிரண்டார் அன்னை பூபதி.

" இந்தியப்படை உடனடியாக யுத்தநிறுத்தத்தை அறிவிக்கவேண்டும் : விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் " என்ற கோரிக்கையை எண்ணெயாகக் கொண்டு " திலீப மாவீரன் " எனும் அகிம்சை விளக்கு யாழ்ப்பாணத்தில் பிரகாசித்தது. இந்த திலீபன் விரும்பிய மக்கள் புரட்சி தென்தமிழீழத்திலே அன்னை யர் எழுச்சியாக வெடித்தது. திலீபன் காட்டிய அகிம்சைப்போர் மாமாங்கப் பிள்ளையார் கோவில் முன்றலிலே அன்னையர் முன்னணியி னரால் மேற்கொள்ளப்பட்டது.

இந்திய இராணுவத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனங்களினாலே எதுவும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள், பச்சிளம் பாலகர்கள் , பருவக்கன்னியர்கள் எல்லோருமே தாக்கப்பட்டனர். இந்த நயவஞ்சக நடவடிக்கைகளை எதிர்த்து முதன்முதல் உண்ணாவிரதம் இருந்தவர் அன்னம்மா டேவிட் என்பவராவர். இவரது உண்ணா விரதத்தையும் அன்னையர் முன்னணி ஆதரவையும் கண்டு , எதுவித நோக்கமும் இல்லாத கூலிப்படையான இந்திய இராணுவம் சீறி எழுந்தது. அன்னம்மா டேவிட் அன்னை மீது ஆத்திரங் கொண்டு அவரைப் பலவந்தமாகத் தூக்கிச் சென்றது இந்திய இராணுவம். பொய்ப்பிரசாரம் செய்து உண்ணாவிரதத்தைப் பழித்துரைத்த இந்திய இராணுவத்தின் வெறித்தனம் கண்டு வெகுண்டெழுந்தார் அன்னை பூபதி. அன்னையரின் போராட்ட இலட்சியத்தை வென்றெடுக்க வேண்டுமென உறுதி பூண்ட அவர் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தான் தொடர முன்வந்தார்.

இந்தியப் படைக்கு எதிராக மீண்டும் உண்ணாவிரதப் போர். காந்தி தேசத்தின் முகத்திரையைக் கிழித்து உலகினுக்குக் காட்ட முடிவெடுத்தார் அன்னை பூபதி. "என் சுய விருப்பத்தின் பெயரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும் வரை — சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன்: நினைவிழந்த நிலையிலும் என்னை ஒருவரும் தூக்கிச் செல்ல இயலாது " என்று எழுதிய அவரது கடிதம் இந்தியப் படைக்குச் சவாலாக அமைந்தது. அன்று 19.03.88 ஒரு பொன்னான புனித நாள்-அன்னை அகிம்சைப் போர் ஆரம்பித்து தமிழீழத் தமிழர் வரலாற்றில் சிறப்பு வாய்ந்த திருநாள். மட்டக்களப்பு, அம்பாறை , திருகோணமலை, என தென்தமிழ் ஈழமெங்கும் அன்னையின் அகிம்சைப்போர் அதிவேகமாகப் பரவியது. அதேவேளை இந்தியப்படை தம்மாலான அனைத்து இராணுவ வன்முறைகளைச் செய்து கதிகலங்க வைத்தது. எதற்குமே அன்னை பூபதி அசையவில்லை. உதடுகள் வற்றி நா வறண்டபோதும் மாறாத அவருடைய பேச்சு உலக நாடெங்கும் கேட்டதுபோல், உலகநாட்டுப் பத்திரிகையாளர்கள் அனைவரும் வந்து, அன்னையின் உண்ணா விரதம் பற்றி வானொலி, பத்திரிகைகளில் செய்திகள் வெளியிட்டனர். அன்னையின் கோரிக்கைக்கு அவரது அன்புக் கணவர் திருகணபதிப்பிள்ளை அவர்களும் அசையா மனதுடன் இறுதிவரையும் இசைந்து கொடுத்தார். இந்திய அதிகாரிகளின் முயற்சிகள் எல்லாவற்றுக்கும் ஆட்டம் காணாத அன்னை பூபதி " தமிழீழத்தாயகம் " என்ற

www.padippakam.com



சிந்தனையோடு, சிறுகச்சிறுக இறந்து, 1988 ஏப்ரல் 19ம் திகதி தம் உயிரைத் தமிழ் மண்ணுக்கு முழுமையாக அர்ப்பணித்துவிட்டு, மண்ணிற் சரிந்தது அந்தத் தியாகசிந்தனையைச் சுமந்த பூதவுடல்.

ஒரு தாயின் ஒப்பற்ற தியாகமாக, தமிழீழப் பெண்ணினத்தின் எழுச்சிவடிவமாக, நெஞ்சுறுதி கொண்ட வீரத்தாயாக அன்னையின் அறப்போர் முடிவுற்றது. இப்போரைப் பார்த்து மௌனமாக இருந்தது இந்திய அரசு. தமது ஐம்பதாவது வயதில் வயிற்றுப்பசி, விடுதலைப்பசி, ஒற்றுமைப்பசி, அன்புப்பசி, தாய்ப்பசி போன்ற பசிகளோடு பிரிந்த இவர் தமிழ் நெஞ்சங்களிலே நீங்கா இடம் பெற்றுள்ளார். தமிழ்மக்களின் எழுச்சியையும் விடுதலை வேட்கையினையும் அடக்கிவிட முடியாது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அன்னையின் அகிம்சைப் போர் அகில உலகத்துக்கும் எடுத்துக் காட்டியது. இந்திய இராணுவத்துக்கு " அபகீர்த்தி " எனும் மாலையை அணிவித்து அமரர் ஆனார் பூபதித் தாயார். இவர் பிறந்த மண்ணை மட்டும் விட்டுப் பிரிந்தாரேயொழிய தமிழ்மக்களின் மனங்களை விட்டுப் பிரியவில்லை. அவர் இன்றும் மட்டக்களப்பு, மாமாங்கப் பிள்ளையார் கோவில், போன்ற இடங்களிலெல்லாம் தன் மனம் போன போக்கில் சுதந்திரமாகச் சுற்றிவருவதையும் , இன்னும் விடிவு கிடைக்காத தன்னையையும் எண்ணி வருந்துவதையும் நாம் அறியோம். ஆனால்_ அந்த அன்னையும் ஆண்டவனும் அறியாமல் இருக்க மாட்டார்கள்.

அகிம்சைத் தாய் அன்னை பூபதியின் தியாகத்தைப் போற்றுவோம்: அவருடைய தற்கொடைத் தியாகத்தை ஆராதனை செய்து அனுதினம் நினைவு கூர்வோம். அன்னை காட்டிய வழிசென்று , அவரின் அடிபணிந்து " தமிழீழத்தை" வென்- றெடுக்க உறுதி கொள்வோம்.

அன்னையின் புகழ் அகிலமெங்கும் பரவுக!
அன்னையின் வேட்கை நிறைவு பெறுக!!
தன்னையீந்த அன்னை நாமம் வாழ்க!!!

www.padippakam.com



# தமிழர் தாயகம்

" தமிழர் தாயகம் "என்பதனை நாம் நோக்கும் போது, ஈழத்தில் வாழ்கின்ற தமிழினத்துக்கென தனித்துவமான சுதந் திர தாயகம் என்பதை நாம் நினைவிற் கொள்வோம். சொந்த நாடின்றி நாடோடிகளாக உலகநாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர்களுக்கும், பிறந்த நாட்டிலேயே அகதிகளாகப் பல இன்னல்களை அனுபவித்து முடிவற்ற நிலையில் பரிதவிக்கும் தமிழர்களுக்கும் சொந்தமான ஒரு தாய்பூமி அவசியம். இந்த அவசியத் தேவையை நிவர்த்திசெய்யும் பாரிய பொறுப்பை மைது போராளி உடன்பிறப்புகளைக் கொண்ட விடுதலை இயக்கங்கள் செய்துவருகின்றன. இதன் பயனாக ஈழத்தமிழ ருக்கு கிடைக்கவுள்ள தாயகத்தையும் அதன் தன்மைகளையும் சிறிது நோக்குவோம்.

ஈழத்திலே ஆதித்தமிழர்கள் சுதந்திர தாயகத்தில் வாழ்ந்தார்கள் என்பது சரித்திர வரலாறு. பின் இடைப்பட்ட காலத் தில் ஏற்பட்ட அரசியற்போட்டிகளாலும் , இராச்சியத்தைக் கைப்பற்றும் நோக்கினாலும் இந்த சுதந்திர தாயகம் தமிழர்களின் கையைவிட்டு நழுவிவிட்டது. அன்றுமுதல் எம்மினத்தவர் நசுக்கப்பட்ட இனமாக , இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ்ந்து வருகி றார்கள். இதை இன்னும் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது என்பதை நிரூபிப்பனவாக இன் — றைய நம் தாயக சுதந்திரப்போர் நடந்துகொண்டிருக்கின்றது. எம்மி — னத்து வீரமறவர்கள் இப்புனிதசேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் — கள். பலர் இதற்காகவே மடிந்தும் விட்டார்கள். இந்த விடுதலைத் தீ தணியும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அதன் பின்பு தமிழர்களாகிய எமக்கென்றொரு தாயகம் உதயமாகப் போவது திண்ணம். அதன் பெயர் தமிழீழம் என்பதாகவே அமையும். இனத்தின் பெயரும் தேச த்தின் பெயரும் இணைந்து உருவான இந்த நாமத்தைக் கேட் கும் சுதேசிகளுக்கு மனமகிழ்வூட்டுவதாக இருக்கும்.

சர்வதேச பூகோள, புவியியல் அரசியல் நிபுணரான பேராசிரியர் வில்லியம் துட் தலைமையிலான ஆராய்வாளர் கள் 2000 ம் ஆண்டளவில் உலக நாடுகளின் எண்ணிக்கை 200ஆக அதிகரிக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர். அந்த நாடுகளுக்குள் தமிழீழம் என்ற நாடும் இடம் பெறும் என்ற நம்பிக்கையை சர்வதேச

www.padippakam.com



ரீதியில் வெளியிட்டுள்ளனர். எனவே இன்னும் ஐந்தாறு வருடங்களுக்குள் நமக்கொரு சுதந்திர தாயகம் கிடைக்கும். அவ்வாறு கிடைத்தால் எம் சுதந்திரநிலை, வாழ்வியல் அம்சங்கள் எப்படி இருக்கும் ? எனச் சிந்தித்துப் பார்ப்போம். எமக்குரிய சுதந்திர தாயகம் எனச் சர்வதேச ரீதியில் இன்று அங்கீகரிக்கப் படாமையால் தீர்க்கதரிசனமான முறையில் நோக்க வேண்டியுள்ளது.

நம் தமிழருக்கென ஒரு தாயகம் புத்தளம் முதலான கரையோரப் பகுதி முதல், யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னிப் பகுதி கிழக்குக் கரையோரப் பகுதி , அம்பாந்தோட்டை வரையுமுள்ள சில பகுதிகள் என்பனவற்றை உள்ளடக்கியனவாக எமது தமிழீழ எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த ரீதியில் அமைந்த ஒரு தாயகம் எமக்குச் சொந்தமாகக் கிடைக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி? எமது தாயகத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய மூலப் பொருட்கள் எம்மிடம் ஏராளம் இருக்கின்றன. கடல்வளம், நிலக்கரிவளம், சுண்ணாம்பு வளம், பனைவளம், நிலக்கீழ் நீர்வளம், என்பன எமது பகுதியில் உள்ளன. இவற்றைக் கொண்டு நாம் படிப்படியாக எமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பலாம். மற்றும் காங்கேசன் துறை, ஊர்காவற்றுறை, திருகோணமலை, போன்ற துறைமுகங்கள் ஏனைய உலகநாடுகளோடு தொடர்பு கொள்வதற்கும், பொருட்களை ஏற்றுமதி – இறக்குமதி செய்வதற்கும் உதவும். அதற்கான முறையில் எமது தொழில் வல்லுனர்களைக் கொண்டு துறைமுகவேலைகளைத் துரிதப்படுத்தலாம். அடுத்து சீமெந்துத் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை, உப்பளங்கள், சீனித்தொழிற்சாலை, பனம்பொருளுற்பத்தித் தொழிற்சாலை முதலிய பல தொழில் நிலையங்கள் எமது பகுதியில் அதிகமாக உள்ளன. இவற்றை மேலும் அபிவிருத்தியடையச் செய்து எமது பொருளாதாரத்தை நாம் பெருக்க முடியும். இதன் வருமானத்தை ஸ்ரீலங்கா அரசு தானே அபகரித்து வருவது கண்கூடு. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து அதன் வருமானத்தை எமது பகுதிக்குப் பயன் படுத்தினால் எமது பொருளாதாரத்தில் தளம்பல் ஏற்படாது என எதிர்பார்க்க முடியும். மீன் வளமிக்க வாஜ் மீன்பிடிமேடை எமது கடல் வலயத்துக்குள் அமைந்துள்ளது. எமது மீனவர்களுக்கு தகுந்த உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். மீன்பிடித் தொழிலை விஸ்தரித்து கடலுணவு வகைகளை வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்து எமது அந்நிய செலவாணியைப் பெருக்கிக் கொள்ளலாம். இதே போன்று பனம்பொருளுற்பத்தி ,தென்னைப் பிரயோசனங்களும் எமது பிரதேசத்துக்கு வரு

www.padippakam.com



வாயைத் தேடித் தரக்கூடிய பொருட்களாகும். பனம் பொருள்களுக்கு வெளிநாடுகளிலே அதிக கிராக்கி உண்டு. எனவே இதன் மூலமும் எமது அந்நியச் செலவாணியைப் பெற்றுக் கொள்வதோடு , எம்மிடம் இல்லாதனவற்றையும் பற்றாக்குறையாக உள்ளனவற்றையும் நாம் இறக்குமதி செய்ய இப்பணத்தைப் பயன்படுத்தலாம்.

எமது அரசியல் இறைமை ஜனநாயகரீதியில் அமைந்து எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற மனப்பான்மை நிலவினால் சகல அரசியல், பொருளாதார, சட்டதிட்டங்கள் எல்லாம் மக்களுக்கு நன்மையே பயக்கும் என்று கூறலாம். மக்களுக்காக மக்களால் ஆளப்படுகின்ற ஒரு அரசியல் இறைமை இருந்து பொருளாதாரமும் வளர்ந்து வரத் தொடங்குமேயானால் எமது " தமிழீழம் " உலகநாடுகளின் கவனத்தைக் கவரும் வகையில் உலகப்படத்தில் இடம் பிடிக்கும் எனலாம்.

சுதந்திரப்போராட்டம் காரணமாக எம்மினத்தவர் பலர் உலகின் பரந்துபட்ட இடங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்களுக்கும் அவர்களது சந்ததிகளுக்கும் ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொருநாட்டுச் சூழலுக்கு ஏற்றபடி அறிவு அமைந்திருக்கும் என எதிர்பார்க்கலாம். அத்தகைய திறமைகளைக் கொண்ட அவர்கள் தமது தாயகத்தில் அவற்றை வெளிக்கொணரும் போது தாயகத்தின் வளர்ச்சி மேல்நோக்கிச் செல்லும்.

நமக்கென்ற தாயகமாக தமிழீழம் அமையும்போது நாம் எல்லோரும் ஒரு குடைக்கீழ் வாழும் மக்களாக வாழும் காலகட்டம் மிக அண்மையில் உள்ளது. அதை நாம் வரவேற்று நமதாக்கிக் கொள்ள ஆவலுடன் காத்திருப்போம். எம் தாயக விடுதலைக்கு எம்மாலான பணிகளைச் செய்வோம். அந்நியநாடு ஒருபோதும் அன்னை நாடாக முடியாது. எனவே நாம் எமது நாட்டு விடுதலைக்காக என்றும் பாடுபடுவோம் என உறுதிகொள்வோம்.

மலர்க தமிழ்த்தாயகம்!
வளர்க தமிழ்மொழி!

படிப்பகம்

# சிறுவர்களைப் பாதிக்கும் வெளிநாட்டுக் கலாச்சாரம்

ஒரு நாட்டின் கலாச்சாரம் அல்லது இனத்தின் கலாச்சாரம் என்பது சந்ததிக்குச் சந்ததி கடத்தப்பட்டு, மக்களாற் பின்பற்றப் பட்டு வருகின்றது. கலாச்சாரம் நாட்டு அபிவிருத்திக்கு ஏற்ப, விஞ்ஞான முன்னேற்றத்துக்கு ஏற்ப ஓரளவு மாறுந்தன்மை கொண்டது. அதாவது நாகரிகம் மாற்றமடையும் போது அங்கே கலாச்சாரமும் மாற்றம் அடைகிறது எனலாம். ஒவ்வொரு இன மக்களும் தத்தம் கலாச்சா ரங்களுக்கு மதிப்புக் கொடுத்துப் பேணி வருகின்றனர். சில இனங்களி டையே காரணம் புரியாத கலாச்சாரப் பண்புகளும் சில இனங்களி டையே அதிக செல்வாக்குப் பெற்று வருவதையும் இன்று உலகிற் காணலாம்.

சிறுவர்களைப் பாதிக்கும் வெளிநாட்டுக் கலாச்சா ரம் என்னும் தலைப்பை நாம் நோக்கும்போது, வெளிநாடுகளில் வாழ் தமிழ்ச் சிறுவர்களைப் பாதிக்கும் வெளிநாட்டுக் கலாச்சாரம் என்பதை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரை அமைகின்றது.

இன்று தாயகத்தில் நடைபெறுகின்ற விடுதலைப் போர் காரணமாகப் பலர் தாய்நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். வெளியேறிக் கொண்டும் இருக்கின்றனர். நாமும் அந்தப் பட்டியலுக்குள்ளே அடங்குகின்றோம் என்பதையும் மறக்கமுடியாது. நாம் தமிழர்கள், எமக்கென்ற தனித்துவமான பண்பாடு பண்டுதொட்டு இன்றுவரை எம்மினத்தை வழிநடத்தி வருகின்றது. பண்டைத் தமிழர் கலாச்சா ரத்தினின்றும் இன்றைய கலாச்சாரம் வேறுபட்ட ரீதியில் வளர்ந்து வருகின்றது எனலாம். பிறந்த தாய்நாட்டில் வாழும் எந்த இனமும் தம் கலாச்சாரத்தைப் பேணிக்காத்து அதன்படி வாழ்வது அவ்வினத் தவருக்கு கஸ்டமான காரியமாக இருக்கமாட்டா. அந்தக் கலாச்சாரப் பண்பு பிறப்பிலிருந்தே, பிறந்த மண்ணிலிருந்தே அவர்களின் உள்ளத் திலும் உடலிலும் அவர்களை அறியாமலே ஒட்டிக்கொண்டு விடுகின் றன. அத்தகைய சூழ்நிலையை விட்டு வெளியேறி இன்னொரு நாட் டில் வாழ்வோருக்கு அங்குள்ள கலாச்சாரம் ஒத்துப் போகாதனவாக இருக்கும். உதாரணமாக எமது கலாச்சாரத்தை எடுத்துக் கொண் டால் எம் கலாச்சாரத் தன்மைகள் மேனாட்டுக் கலாச்சாரத்துக்கு முற் றிலும் வேறுபட்ட.தாகும். அந்நாட்டுக் காலநிலை, அரசியல், பொருளா தாரம், சமயம், பண்பாடு பழக்கவழக்கம் , என்பவற்றுக்கு ஏற்பவே கலாச்சாரம் வேறுபட்டதாக உள்ளது. இத்தகைய தன்மைகளால்

வேறுபட்ட ஒரு வேற்றுக் கலரச்சாரத்தில் வாழ்கின்ற எம்மினத்தவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல. மேலும் எமது பண்பாட்டிற்கு முரணான பல பண்புகளை மேலைக் கலாச்சாரங்களிற் காணமுடிகிறது. வந்தேறு குடிகளாக வாழும் நாம் அவற்றைக் கண்டும் காணாததுபோல் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இவ்வாறு "ஓடும் பொன்னையும் ஒக்கவே நோக்கும் தன்மை " பெரியவர்களுக்கும் வயது வந்த இளையோருக்கும் உண்டு. அவர்கள் தமது கலாச்சாரத்துக்கும் வெளிநாட்டுக் கலாச்சாரத்துக்கும் வேற்றுமை காணக்கூடிய அறிவுப்பக்குவம் பெற்றவர்கள். ஆனால் சிறுவர்களைப் பொறுத்தவரையில் இந்தக் கலாச்சார பேதங்களோ, அவற்றைப் பகுத்துணர்ந்து நல்லது எது? கெட்டது எது? என்று உணரும் அறிவோ இல்லை. எனவே அவர்கள் மேலைக்கலாச்சாரமும் தமது கலாச்சாரமும் ஒன்றுதான் என்று எண்ணிவிடுகிறார்கள். இவ்வாறு மேலைக்கலாச்சாரம் அவர்கள் வாழ்கின்ற நாட்டுக்கு ஏற்ப தொற்றிக்கொள்கிறது.

மேலைக் கலாச்சாரத்தை மேலெழுந்தவாரியாக நோக்கின் கட்டுப்பாடற்ற பிள்ளைவளர்ப்பு முறை, பெற்றோர் பெரியோர்களுக்கு மதிப்பளியாமை, தம் விருப்பப்படி முடிவெடுக்க முயலுதல், பாலியல் சுதந்திரம் போன்ற தன்மைகள் மேலைக் கலாச்சாரத்தில் காண முடிகிறது. மேலும் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படும் படங்கள் வேறுபட்ட கருத்தினைக் கொடுப்பதாகவும், வளர்ந்தோர்க்கான படங்களாகவும் பெரும்பாலும் உள்ளன. இவற்றைப் பார்த்த சிறுவர்களின் மனோநிலையில் பாதிப்பை ஏற்படுத்த இப்படங்கள் வழிவகுக்கின்றன. பாடசாலை செல்லும் மேலைச்சிறுவர்கள் மத்தியில் புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைவஸ்து பாவித்தல், போன்ற தீயபழக்கங்கள் காணப்படுகின்றன. இதைப் பார்த்த ஆசிரியர்களும், பெரியோர்களும் வாய்மூடி மௌனியாகி, இவ் விடயத்தில் பாராமுகமாக நடந்துகொள்கின்றனர். இவர்களுடன் ஒன்றாகப் படித்து வரும் எமது இனச் சிறுவர்களும் இத்தகைய பழக்கவழக்கங்களுக்கு ஆளாகின்றனர். எமது கலாச்சாரத்தைப் பொறுத்தவரையில் இவை மாபெரும் குற்றச்செயல்களாகும். எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகள்மேல் மிகவும் அக்கறைகாட்டி எமது கலாச்சாரப்படி, பிள்ளைகளை வளர்த்தெடுத்து எமது கலாச்சாரத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடிக் கொடுக்கவேண்டும்.

மேலைக்காற்றுப் போல் வீசிவரும் வெளிநாட்டுக் கலாச்சாரங்களில் எமது பிள்ளைகள் மூழ்கிவிடாமல் அல்லது அக்காற்றுக்கு ஏற்ப சாய்ந்துவிடாமல் கண்காணிப்புடன்

வளர்ப்பது பெற்றோர் ஒவ்வொருவருடைய கடமையாகும். மேலும் எமது சிறுவர்களின் உடைகள், அலங்காரம் என்பவை மேனாட்டுப் பாணியைப் பிரதி செய்யாதவாறு இருப்பதற்குப் பெற்றோர் அவதானமாக இருக்கவேண்டும். அவர்களுடைய நடைமுறைகளைக் கவனித்து, அவர்களின் மனப்பாங்கைப் புரிந்துகொள்வதும் புத்திமதி புகட்டுவதும் அவசியம். இங்குள்ள காலநிலைத் தன்மைகளுக்கு ஏற்ப எமது கலாச்சாரத்தை ஓரளவு தளர்த்தினாலும் , எம் கலாச்சா - ரத்தை எங்கேயும் விட்டுக்கொடுக்காது பேணிவருவது எமது கடமையாகும்.

இறுதியாக எமது கலாச்சாரத்தில் மேனாட்டுக் கலாச்சாரம் புகுந்து, எமது சிறுவர்களைப் பிழையான வழிக்குத் திருப்பிவிடாமல் பாதுகாப்பதற்கு இங்கே எமது கலாச்சாரத்தைப் புலப்படுத்தும் வகையிலே விழாக்களையும் , கொண்டாட்டங்களையும் நடத்துதல் அவசியம். அத்துடன் அமைப்புகள், ஒன்றியங்கள், கல்விநிலையங்கள் , ஆலயங்கள் என்பற்றை உருவாக்கி எமது சிறார்களுக்கு நம் கலாச்சாரத்தைப் போதிக்க இங்குவாழ் தமிழன்பர்கள் முன்னின்று உழைப்பது இன்றைய காலத் தேவைகளில் முக்கியமானதாகும்.

# ஒற்றுமையே உயர்வு

மனிதசமுதாயத்துக்கு ஆதாரமான ஒரு பண்பாக ஒற்றுமை இருந்தால், அங்கே போட்டிகள் பொறாமைகள் சண்டைகள் உயிரிழப்புகள் என்பன ஏற்படா. சகோதரர்களிடையே ஒற்றுமை, குடும்பங்களிடையே ஒற்றுமை, சமூகங்களுக்கிடையே ஒற்றுமை, நாடுகளுக்கிடையே ஒற்றுமை என இருக்கும்போது சிறப் பான வாழ்க்கையை நாம் வாழலாம். ஒற்றுமையே ஒருவருக்குப் பலத்தைக் கொடுக்கின்றது. ஒன்றுபட்டு வாழ்வதால் நாம் பல நன்மை யான காரியங்களை வெற்றியாகச் செய்துமுடிக்கலாம். காக்கை இனம் ஒற்றுமையை எமக்குப் போதிக்கின்றது. ஒன்றிட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு. ஒற்றுமையே உயர்ந்த பலம், என்பதெல்லாம் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை எமக்கு எடுத்தியம்புகின்றன.

நாடுகளிடையே பூசல்கள், அரசியற்போட்டி கள் , விடுதலைப் போர்கள் என்பன ஏற்படுவதற்கு அவர்களிடையே சமரச ஒற்றுமை இன்மையே காரணமெனலாம். நாம் எங்கு வாழ்ந்தா லும் ஒற்றுமையுடன் வாழும்போது தான் நாம் சந்தோஷமாக வாழமுடி யும். எந்த ஒரு துறையிலும் மக்களிடையே அல்லது பங்காளரிடையே ஒற்றுமை இருக்கும்போது அவர்களை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது. திருட்டுத்தொழில் செய்பவராக இருந்தாலும் அவர்களிடம் ஒற்றுமை இருந்தால் அவர்கள் வாழ்நாள் முழுக்கத் திருடியே சம்பா தித்துவிடுவார்கள்.ஆகவே ஒற்றுமை என்ற செயற்பாடு எந்த ஒரு நட வடிக்கையிலும் இருக்கும்போது அந்நடவடிக்கை ஸ்திரமானதாக அமையும். ஒற்றுமைப் பண்பின் வழியாக சமாதானம் சகிப்புத்தன்மை என்ற குழந்தைகள் பிறக்கின்றன. ஒற்றுமையை எல்லா இடத்திலும் கடைப்பிடிப்பது இயலாத காரியம். கிரணரம் மானிடருக்குள்ளே ஒவ் வொரு மனவியல்பு படைத்தவர்களாக இருக்கின்றார்கள். இவர்களை எல்லாம் ஒருமுகப்படுத்துவது என்பது கடினமான விடயம். இருந்தும் ஒவ்வொருவரும் தத்தம் சிந்தனைகளால் உண்மைத் தன்மைகளை உணர்ந்து, வேற்றுமைகள் அவற்றுக்குள்ளே ஒற்றுமை காணுதலே சிறந்தது. உதாரணமாக நாம் ஐரோப்பியர் மத்தியில் வாழ்ந்தாலும் எம் மிடையே பலரிடம் ஒற்றுமையின்மையைக் காணக்கூடியதாயுள்ளது. ஆனால் இலங்கைத் தமிழர் என்ற வகையில் எமது இனத்தின் ஒற்று மையை வெளிநாட்டவருக்குக் காண்பிக்கவேண்டும்.அதைவிட்டு எமது இனத்தையே காட்டிக் கொடுத்து, இலாபம் பெறுவது என்பது எமதினத்துக்கு இழைக்கும் துரோகம் எனலாம்.

www.padippakam.com



ஐந்து விரல்களும் ஒற்றுமையாக இணை யும்போதுதான் ஒரு பொருளையோ கைவேலையையோ நாம் செய்ய முடியும். கட்டைவிரலின் ஒற்றுமை ...அதாவது அதன் தொழிற்பாடு இல்லாவிட்டால் நாம் அக்கையால் ஒன்றும் செய்யமுடியாது.ஒற்றுமை யைக்கண்டு எதிரிகளும் அஞ்சுவார்கள்.ஒற்றுமை மனிதநேயத்தை வளர்க்கின்றது.ஒருவர்மீது ஒருவர் அன்புகொள்ள வைக்கின்றது. உதவி செய்யவும் உதவியைப் பெறுவதற்கும் ஒற்றுமை வழிவகுக் கின்றது. ஏகோபித்த ஒற்றுமையின் முடிவால் சாம்ராஜ்யத்தையே தலை கீழாக மாற்றலாம். ஆயுதத்தால் பணப்பலத்தால் ஒற்றுமையை வளர்க்க முடியாதுபண்பட்ட அறிவால் அன்பால் பொறுமையால் சகிப் புத்தன்மையால் ஒற்றுமையை வளர்க்கமுடியும்.ஒற்றுமை மக்களிடை யேயுள்ள ஏழை—பணக்காரர், படித்தவர்—படியாதவர் , உயர்வு—தாழ்வு என்ற பேதங்களை அகற்றிவிடுகின்றது. நாம் எல்லோரும் மனிதர்கள்,

தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடு வோம் என்ற கருத்தை முன்வைத்த பாரதியார் ஒற்றுமைக்காகவும் தேசியத்துக்காதகவும் மனிதநேயத்துக்காகவும் பாடுபட்டமை நாமெல் லாம் அறிந்ததே.

சிறுவர்களுக்கென எழுதப்பட்ட ஒரு குட்டிக்கதை யிலேயே பெரியவர்களுக்கும் சேர்த்து போதனை போதிக்கப்படுகின்றது. இதற்கு உதாரணமாக ஒரு கதையை நோக்கின், ஒரு தந்தையார் சிறு விறகுத்தடி ஒன்றை முறித்த தம் மகனைப் பார்த்து, "கெட்டிக் காரன் வெகு சுலபமாக முறித்துவிட்டாய்" எனக்கூறினார். பின் ஐந்து ஆறு தடிகளை ஒன்றாகக் ஒரு கட்டாகக் கட்டிவிட்டு , அதை முறிக்கும்படி கூறினார். அப்போது அவரது மகன் எவ்வளவு முயற்சி செய்தும் விறகுக்கட்டை முறிக்கமுடியாமல் சோர்ந்து, அம்முயற்சி யைக் கைவிட்டுவிட்டான்.இங்கே நாம் புரிந்துகொள்ளும் கருத்துரை ஒற்றுமையாக இருக்கும்போது பலம்வாய்ந்த பலம் எம்மிடத்தில் இருக்கும் என்பதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# பணிவுடைமை

நாம் எல்லோரும் பணிவுடையவராக வாழ்ந்தால் சிறப்பான, நிம்மதியான ஒரு வாழ்க்கையை வாழலாம். எல்லோரும் பேதமின்றிக் கடைப்படிக்க வேண்டிய பண்பு பணிவு ஆகும். பணிவு அடக்கம் – கீழ்ப்படிவு என்பன ஏறக்குறைய ஒரே பொருளினைத் தருகின்ற சொற்களாகும். பணிந்து நடப்பதனால் ஒருவனுக்கு எந்நாளும் தலைக்குனிவு ஏற்படப்போவதில்லை. பணிவுடைமையை ஒரு அணியாக அணிந்தவன் மற்றவர்களால் கவரப்பட்டு அவர்களுடைய அன்பையும் புகழாரத்தையும் பெறுகின்றான். பணிவு எல்லோராலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு நெறியாக இருந்தாலும் குறிப்பாகப் பணக்காரர் தம் அலங்கார அணிகளுடன் பணிவு என்ற இந்த அணியையும் அணியவேண்டும். ஏனெனில் பணத்தால் சகலவற்றையும் சாதிக்கும் விந்தையான உலகம் இது. அன்பால் சாதிப்பதைவிட பணப்பலத்தால் சாதிக்கும் செயல்களே அதிகரித்து வருகின்றன. பணக்காரர்களாக சகல வசதிகளையும் பெற்றவர்களுக்கு ஏழை–எளியவர்கள் மானிடர்களாகவே காட்சியளிக்கமாட்டார்கள். பொருளிலலார்க்கு இவ்வுலகம் இல்லை. பொருள் படைத்த செல்வந்தர்களின் செல்வத்துடன் இன் – னொரு செல்வமாக 'பணிவு' இருக்கவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகையது.

செல்வந்தர்களிடம் பணிவு என்ற செல்வமும் இருக்கும்போது அவர்களுடைய செல்வத்தால் மற்றவர்கள் பயன்பெற்று வாழமுடியும். மக்களை மக்கள் ஆதரித்து அணைக்கும் மனோநிலையும் ஏற்படும்.

ஒருவர் பணிந்துபோவது தாழ்வு அல்ல. பெருமையையே பணிவு கொடுக்கும். பெருமைப்பண்பு பிறருடைய குறையை மன்னித்து மறக்கும் சக்தி கொண்டது. ஆனால் சிறுமைப் பண்புடையோர் மற்றவர்கள் குறைகளையே பெரிதாகத்தூக்கி அலசி ஆராய்ந்து அம்பலத்துக்குவிட்டு, ஊரறியச்செய்து இன்பம் காணும் தன்மை கொண்டவர்.பெருமைப்பண்பு கொண்டவர்கள் எதனையும் சகித்து, எப்போதும் பணிந்து நடக்கும் சுபாவம் உடையவர்களாகக் காணப்படுவார்கள். சகிப்புத்தன்மை கொண்டவர்களுக்கு மற்றவர்கள் விடுகின்ற பாரதூரமான தவறுகள் கடுகளவாகவே காட்சியளிக்கும். தவறு செய்தவர்களைத் திருத்தி மன்னிக்கும் தன்மை இவர்களுக்கே

உண்டு. பெரியோர்களுக்குச் சிறியவர்கள் பணிவுடையவர்களாக, கீழ்ப்படிவுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆசிரியர்களுக்கு மாணவர்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். தம் குருவுக்குச் சிஷ்யர்கள் பணிதல் வேண்டும். பிள்ளைகள் பெற்றோருக்குப் பணிதல் வேண்டும்.

ஆண்டவன் முன்னே பக்தன் அடங்கிப்பணிந்து மனத்தை ஒடுக்கி அவனருளைப் பெறவேண்டும். கற்றவர்களும் செருக்கு என்ற உடையைக் கழற்றி எறிந்துவிட்டு பணிவு என்ற அணியை அணிய வேண்டும். ஒரு மேலதிகாரியிடத்தில் ஐயா! சேர்! என்று பணிவுடன் கதைத்து எமது தேவைகளை வெற்றியாக முடிக்கலாம். அதற்காக 'நான்' ஆணவத்தைக் காட்டி , இவர் எனக்கு யார்? என்றும் செய்ய வேண்டியது அவருடைய கடமைதானே என்றும் இறுமாப்பு மனப் பான்மையோடு கதைக்க முற்பட்டாராயின் அவருக்குக் கிடைப்பது பாதகமான நிலைமைகளே எனலாம். பணிந்து 'சலாம்' போடுவது ஒரு தாழ்வுமனப்பான்மை, சேவகத்தன்மை எனச்சிலர் எண்ணக்கூடும். தற் பெருமை என்ற ஒரு பண்பு அதிகாரபலம் உள்ளவர்களிடம் மலிந்து இருப்பதால் அவர்களை நாடிச்செல்வோர் 'பணிவு' என்ற தன்மையையும் தம்முடன் துணைக்கு அழைத்துச் செல்லவேண்டும். இராவணன் போரிலே ஆயுதங்களை எல்லாம் இழந்து பணிந்து நிற் கும்போது இராமன் அவனைப் பார்த்து 'இன்று போய் நாளை வா! ' என்றான். இராமன் அன்றே இராவணனைக் கொன்றிருக்க முடியும். ஆனால் அது தர்மம் அல்ல என்றும் நிராயுதபாணியுடன் போரிட்டு வெற்றி பெறுவது வீரமல்ல என்றும் நினைத்து பண்புடன் அவனை அனுப்பி நாளை தயாராக வா! என்கின்றான். மறுநாள் சகல ஆயுதங்களுடனும் பரிவாரங்களுடனும் இராவணன் போருக்குத் தயாராகுவதற்கு அன்றைய நிராயுதபாணியான பணிவு அவனுக்குச் சாகாத்தன்மையை உருவாக்கியது எனலாம். பணிவுள்ளவனின் மனம் பண்பட்ட மனம் ஆகிறது. அங்கே தீய விதைகள் எதுவும் முளைக்கமாட்டா. நல்ல விளைநிலத்தில் விதைத்த விதை நன்றாக முளை கொள்வதுபோல பணிவு சகிப்புத்தன்மை, செருக்கற்ற தன்மை போன்ற பண்புகளுடைய மனிதனின் மனம் எனும் விளைநிலத்திலே நல்ல சிந்தனைகளே உயர்வான கொள்கைகளே முளைகொள்கின்றன.

ஆதாம் – ஏவாள் இறைவனுக்கு கீழ்ப்படியாமல் நடந்தமையால் மரணத்துக்கும் துன்பத்துக்கும் ஆளானார்கள், என்று கூறுகின்றது பைபிள். கீழ்ப்படிவற்றுக் குடும்பத்தையே வெறுத்துச் சென்றவர்கள் சுவரிற் பட்ட பந்துபோல் திரும்பவந்து திருந்தி வாழ்தலையே நாம் பெரும்பான்மையாகக் காணக்கூடியதாயுள்ளது. பணிந்து நட! மனத்தால் துணிந்து செய்! இதனால் நன்மையான பலனையே எதிர்பார்க்கலாம். பணிபவனிடத்திலே துணிவு இல்லை

www.padippakam.com



என்பது அர்த்தமல்ல. பணிவு இருக்கும் இடத்தில் துணிவும் இருத்தல் அவசியம். பணிவும் துணிவும் இருக்கும் ஒருவனின் எக்காரியமும் தோல்வியை நாடாது. பணிவு என்ற பண்பு ஒருவனுக்குத் தன் நம்பிக்கையை வளர்த்துவிடுகின்றது. தன்னம்பிக்கை இல்லாதவன் செய்யமுற்படும் எந்தச்செயலும் பாதியிலே நின்றுவிடுகின்றன. தன்னிலே நம்பிக்கை கொள்ளாமல் எச்செயலிலும் இறங்கக்கூடாது. எண்ணித் துணியவேண்டும். ஒன்றைச் செய்ய முற்படும்போது , நான்கு பக்கத்தாலும் சிந்தனையைக் கிளறிவிட்டு, அதனால் வரும் தாக்கங்கள் என்ன? என்பவற்றை ஆராய்ந்து ஒரு முடிவு எடுத்தபின்னரே அச் செயலில் இறங்கவேண்டும். அப்படியில்லாது ஒரு செயலில் இறங்கிய பின் ஏன் தொடங்கினோம்? எவ்வளவு சிக்கலாக இருக்கின்றது, என்று மனம் சோர்ந்து, செய்த காரியத்தை அப்படியே விட்டுவிடுவ—தால் ஏற்படும் நட்டங்கள் பல. மனக்குழப்பம், பொருள் நட்டம், நேரம் விரயம் என இவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். 'துணிந்த பின் மனமே துயரங் கொள்ளாதே! என்பதுபோல் பின்னர் ஏங்கி மனம் புண்ணாகி வாழ்வதால் நம் குறுகிய ஆயுளோ இன்னும் குறுகியதாகி விடும். எனவே ஒருவனுக்குத் தன்னம்பிக்கை மிக அவசியம். தன்னம்பிக்கைதான் ஒருவனுடைய மன ஊக்கத்துக்கு உற்சாகமூட்டும் மூலிகையாக, விற்றமின் மாத்திரையாக இருக்கின்றது. தன்னம்பிக்கை மனதைத் தளரவிடாது. இந்தத் தன்னம்பிக்கை ஒருவரின் வயது ஏற ஏறக் குறைந்து வருவது இயல்பு என்று பொதுவாக எல்லோரும் கதைக்கின்றோம். தன்னம்பிக்கையை மனம் வளர்த்தாலும் ஒரு செயலைச் செய்துமுடிக்கும் ஆற்றல் வயதாகியவுடன் அவ்வுடலுக்கு இல்லை என்பதே காரணமாகும். இது முற்றுமுழுக்க உண்மை என ஏற்றுக்கொள்ள முடியாது. உடல் தளர்ந்த நிலையிலும் தன்னம்பிக்கையுடன் உழைத்து, இலட்சிய வெறியுடன் வெற்றிகண்ட மகாத்மா காந்தியை இவ்வுலகம் அறியாததல்ல. அதற்காக எல்லோரும் காந்தித்தாத்தாவாகவோ, ஔவைக்கிழவியாகவோ வரமுடியும் எனக்கூற முன்வரவில்லை. இவர்கள் உலகப்பிரசித்தி பெறும்போது ஏன் நாம் சமூகப் பிரசித்தி பெறுமளவாவது வயது சென்றாலும் தன்னம்பிக்கையுடன் வாழமுடியாது? எனச் சிந்தித்து வாழ்க்கையிலே வெற்றிபெற வேண்டும். தன்னம்பிக்கையும் வயது வளர்ச்சியும் ஒன்றிலொன்று தங்கியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் இருபத்தைந்து வயது இளைஞன் தன்னம்பிக்கையுடன் செய்த செயல் ஒன்றை அவன் அறுபத்தைந்து வயதானவுடன் அதே உற்சாகத்தோடு தன்னம்பிக்கையோடு செய்து முடிப்பானா? என்பது கேள்விக்குறி.

எனவே வயது ஏற ஏற உடலின் முதிர்ச்சிக்கு ஏற்ப உடலியக்கம் மாறிவிடுவது போல மனத்திலுள்ள தன்னம்பிக்கையும் மாறிவிடும் என்பது உடற்கூற்றின் இரகசியம் எனலாம். வயது வளர்ச்சிக்கு ஏற்ப தேவைகள் மாறுகின்றன. ஒவ்வொரு தேவைகளும் அந்தந்த வயதில் அத்தியாவசியமாக இருக்கும். எனவே அத்தகைகைய தேைவைகளை நிறைவுசெய்ய தன்னம்பிக்கையுடன் உழைக்கவேண்டும். உடல் மூப்புக்கு ஏற்ப செயற்பாடுகளின் தீவிரம் குறைவடைகின்றது. கடினம் என எதையும் எண்ணாமல் துணிவுடனும் தன்னம்பிக்கையுடனும் நாம் செய்ய முனையவேண்டும். இவ்வாறான மனப்பான்மை இருக்கும் போது மற்றவர்களின் கையையே எந்நேரமும் எதிர்பார்க்கும் ஒரு இக்கட்டான நிலை எமக்கு ஏற்படாது.

## உலகநியதி

மானிடராகப் பிறந்த எல்லோருக்கும் மரணம் எவ்வாறு பொதுவானதோ, அதைப்போல கவலைகளும் பொதுவானவை. கவலைகள் இல்லாத மனிதர்களே இவ்வுலகில் இல்லை ', உயிரினங்களும் இல்லை. ஓட்டைக் குடிலில் வாழும் ஏழை முதல் அடுக்குமாளிகையிலே பஞ்சணையில் துயிலும் பெருங்குடிச் செல்வந்தன் வரை கவலைகள் சுதந்திரமாகத் தம் கைவரிசைகளைக் காட்டிவருகின்றன.

தமக்கு விதிக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் மனிதன் இப்புவியிலே வாழவேண்டும் என்பது இறைவனின் கட்டுப்பாடு. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலவரையறைக்குள் வாழும் மனிதர்களின் மன ஆசைகளுக்கோ எல்லை இல்லை. தம் வாழ்க்கைக்கான உயிரியற் தேவைகளை நாடி. ஆதியில் அலைந்த மனிதன் தற்போது ஆடம்பரத் தேவைகளுக்காக மன உலைச்சற்பட்டு, கவலைக்கு அடிபணிந்துவிட்டான்.ஒருவன் தனது வாழ்வியற் தேவை கருதி, ஒரு பொருளில் அல்லது ஒரு செயலில் நம்பிக்கை வைத்து அதில் வெற்றி கிடைக்கும் என எதிர்பார்த்திருக்கும் போது , அது நிறைவேறாவிடின் அங்கே அவனைக் கவலை பிடித்து, அவனது மன உந்துதலையும் மன இயக்கத்தையும் தளர்ச்சியடையச் செய்துவிடுகின்றது. சில வேளைகளில் கவலைகள் இன்னொரு விதமாகவும் வருவதுண்டு.

அதாவது தாம் மிகப் பிரியமாக நேசித்த ஒரு பொருளோ, அல்லது நெருங்கிய உறவுகளோ அவர்களை விட்டு நழுவிவிடும் போதும் பறிகொடுக்கும் போதும் அவர்களுடைய மனமாளிகையில் கவலைப் பேய்கள் குடிகொண்டு விடுகின்றன. அப்பேய்களை விரட்டியடிக்க அவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் சில மாதங்கள் வரை அவை அவர்களுடன் ஒட்டிக்கொண்டே இருக்கும். கவலைகளால் மனம் சோர்வடைகின்றது. செய்ய வேண்டிய அன்றாடக் கருமங்கள் தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்படும். எதிலும் பற்று ஏற்படுவதற்குப் பதிலாக எங்கும் வெற்றுத் தோற்றமும், வாழ்வியல் நிலையற்ற தன்மையும் ஏற்படும்.

மனதில் கவலைகள் குடிகொண்டிருக்க வயிற்றில் உள்ள பசி இறக்கை கட்டிப் பறந்துவிடும். பசித்தன்மை இல்லாமற் போகவே உடலிற் சோம்பல் ஏற்பட, நிலையான வாழ்க்கை என்று நினைத்து, இவ்வளவு காலமும் வாழ்ந்த வாழ்க்கை நிலையற்றது: என்ன வாழ்க்கை? என்ற தன்மையை அடிக்கடி மானிடருக்குக் கற்பித்துக் கொண்டிருப்பது இந்தக் கவலைகள் என்னும் போதனையாளர்களே என்றால் மிகையாகாது. சுடச்சுடத் தங்கம் ஜொலிக்கின்றது. அது நெருப்பிலே எரியுண்டு பட்டை தீட்டப்படும்போது தங்கத்தின் தரம் உயருகின்றது. இதேபோல் மனம் என்ற தங்கமும் கவலைகள் என்ற கனலினால் சுடப்படும்போது மனம் "பண்பட்ட தன்மை" என்னும் ஜொலிப்பை அடைகின்றது. கவலையால் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் கெடுபிடிக்குள் ஆளாகி, செயற்றிறன் அற்று நடைப் பிணமாகத் திரியும் மானிடர் வாழ்வு வறண்ட நிலத்து மரங்கள் போலாகிவிடுகின்றன. ஆனால் கவலைகள் வாழ்வின் ஒரு அங்கம் , அதை நாம் எவ்வளவு சீக்கிரம் மறக்கமுடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட வேண்டும். கவலைகளை மறந்து மனத்தை வேறு நடவடிக்கைகளில் நாடச் செய்யும் வண்ணம் எமது மூளை என்னும் தேரோட்டிக்கு அந்த மனமே வழி காட்டவேண்டும். மனம் இரண்டு வகைப்படும் என்று சொல்லப்படுகிறது. அதை உள்மனம், வெளிமனம் என்றோ அல்லது மனம் , மனச்சாட்சி என்றோ சொல்வார்கள். ஒரே நேரத்தில் இருமனமும் செயற்படும். மனம் ஒன்றைச் செய்ய நினைக்கும்போது மனச்சாட்சியாகிய மற்றமனம் (அடிமனம்)மனதுக்கு முன்னே தோன்றி நீ செய்வது சரியா? பிழையா? அதனால் வரும் விபரீதம் என்ன? என்பவற்றை விசாரிக்கும். இந்த வினாக்களுக்கு ஏற்ற பதில்களை மனம் கூறும் நிலையைப் பொறுத்து ஒருவருடைய வாழ்க்கைத் தேர் செலுத்தப்படுகிறது எனலாம்.

ஒருவருடைய கவலைகளை மறக்கச் செய்துவிடும் உத்தம நண்பன் மறதி என்றால் சிலருக்கு வியப்பாக இருக்கலாம். மறதி என்ற மன உணர்வு அல்லது மூளைத் தொழிற்பாடு இருப்பதனாற்தான் மனிதன் பூமியில் சிலகாலம் என்றாலும் சந்தோஷமாக வாழ்கின்றான். ஆனால் மறதிகள் மனிதவாழ்க்கையில் எல்லா இடத்திலும் இருக்குமேயானால் அவன் மனிதனாக வாழமுடியாது. மனித வாழ்க்கைக்கு ஆதாரமான தேவைகளில் மறதியின்மையும், தேவையற்றனவற்றில், மன உற்சாகத்தைத் தடை செய்யும் விடயங்களில் பயனற்ற பழக்கவழக்கங்களில் மறதியும் வேண் டும். அப்போதுதான் மனிதன் கவலைகளை வென்று, இன்ப துன்பங் களை ஒரே பார்வையில் நோக்கி நிம்மதியான வாழ்க்கை வாழமுடியும். இனிய நினைவுகளால் ஏற்படும் ஒருவனது மனக்கிளர்ச்சியை அவனது சிரிப்பும் முகபாவமும் காட்டிக் கொடுத்துவிடும். சிரிப்பு கவ லைக்கு மருந்தாவதோடு உடல் ஆரோக்கியத்துக்கும் உகந்தது. 'மறதி ' என்ற தொழிற்பாட்டால் கவலைகள் மறைக்கப்பட்டு, வேறு நாட்டங்களில் மனதைச் செலுத்தி, சிரித்து வாழப்பழகிக் கொண்டால் வாழ்க்கை இன்பமாக அமையும்.

கவலைகள் எல்லோருக்கும் பொதுவா னவை : எல்லோருடனும் உறவாடக்கூடியவை. ஆனால் அக்கவலை களின் தன்மைகள்தான் வேறுபட்டவை. பணம் நிறைந்த இலட்சாதிப திக்கோ தான் சேமித்த பணத்தை எப்படிப் பாதுகாப்பது? எந்த வங்கி யில் போட்டு வைப்பது? தனக்குப் பின்னால் இப்பணத்தை யார் அனு பவிப்பது? என்ற பல கவலைகளால் மனம் உழல்கின்றான். மேலும் பணம் இருந்தும் விரும்பிய உணவை உண்ண உடல் இடம் கொடுக்கவில்லையே பணத்தால் என்ன செய்வது? என ஏக்கமடைந்து கவலைப்படுகின்றான். ஆனால் ஏழையோ ஒரு வயிற்றுச் சோற்றுக்கு வழி இல்லையே , உடல் ஆரோக்கியமாக இருந்து பசி வயிற்றைக் கிள்ளும்போது உணவில்லையே என மனம் குமுறுகிறான்.

ஏன் நாம் வேறு இடங்களுக்கு உதாரணங் களைத் தேடிப் போகவேண்டும்? எம்மைச் சுற்றியே பல உதாரணங் கள், பல உண்மைத் தத்துவங்கள் இருக்கின்றன. சிந்தனை ஆற்றல் உள்ளவன் அவற்றைக் கண்டுபிடித்து உணர்கின்றான். ஏனையோர் இது புரியாமல் இதுவே எமது வாழ்க்கை என வாழ்கின்றனர். இன்று ஜேர்மனியிலோ மேலை நாடுகளிலோ வாழ்கின்ற எம்மையும் தாயகத்தில் வாழ்கின்ற எம்மினத்தவர்களின் நிலைமையையும் நோக்குவோம். ஜேர்ம னியில் நாம் விரும்பியதும் அதற்கு மேலுள்ளதுமான பலதரப்பட்ட பல் சுவைப்பட்ட உணவு வகைகள் இருக்கின்றன. ஆனால் எம்மிற் பலருக்கு அவற்றை உண்பதற்கு வயிறும் மனமும் இடம் கொடுப்

www.padippakam.com



பதில்லை. சூரியன் உதயமாகியதும் நிலம் வெப்பமடையும்போது ஏழு மணிக்குச் சுடச்சுட தோசை,பிட்டு, இட்லி, பழஞ்சோறு ,இடியப்பம் , சாப்பிடும் ஆசையும் அவாவும் ஜேர்மனியிலுள்ள எமக்கு எங்கே போய் விட்டது? இவற்றைச் சமைக்கக்கூடிய பொருட்கள் அவ்வளவும் இரு க்கின்றன. ஆனால் உண்ணவேண்டும் என்ற மனம் இல்லையே. மாறாக நமது தாயகத்தில் உள்ள நம்மினத்தோருக்கு காலையானதும் தேநீர் –காலைச்சாப்பாடு எனப் பசியால் வயிறுகள் எரிகின்றன. சிறிய பாண் துண்டுக்கோ .. பழைய சோற்றுக்கோ வழியில்லாமல் ஆலாய்ப் பறக்கிறார்கள். பசியும் தாகமும் அங்கே இருக்கின்றன. அதைப் போக் கும் உணவு வசதிகள் அங்கில்லை. இங்கே ஜேர்மனியிலே எமக்கு விரும்பிய உணவுகளை நிறைய வாங்கும் வசதியில் உள்ளோம். ஆனால் பசி இல்லை. இதுதான் உலக நியதி. ஒரு இடத்தில் இரவு இருந்தால் இன்னோரிடத்தில் பகல் இருக்கும். இது உலகப்புவியியல் நியதி.

உடுப்பதற்கு விதமான உடைகள் அரிது தாய்நாட்டிலே. இருந்தாலும் அணிகின்ற ஆடைகளும் விரைவில் கிழிந்துவிடும் காலநிலைத் தன் மைகள் எம் தாயகத்திலே உண்டு. அரிதான உடைகளையோ காயப் போட்ட இடத்தில் கறையான் தின்றதென்றும் மாடு தின்றுவிட்டதென் றும், மழையில் நனைந்து கரும்பேன் பிடித்து விட்டதென்றும்,நமக்கு உதவாமல் போய்விடுகின்றன. வேலியில் காயப்போடும்போது தடி,கம்பி கிழித்துவிட்டதென்றும் 'பீத்தல்' என்றும் நம் தாயகத்தில் உடைகள். ஓரிரு உடைகள் வைத்திருக்கும்போது இப்படி அவலங்கள். ஆனால் ஜேர்மனியில் வாழும் எமக்கோ, எமது பிள்ளைகளுக்கோ எந்த உடை யைப்போடுவது என்ற வேதனைகள்உடைகள் கிழியாமல் மங்காமல் அப்படியே இருக்க, அவற்றை எப்படி அப்புறப்படுத்துவது என்ற யோசனைகள். அழகான பல சட்டைகள் வாங்கி ஓரிரு முறை பாவித்து விட்டு, சிறுவர்களுக்கு அளவில்லாமல் போக வீசி எறியும் நிலைமைகள். தையல் ஊசியெடுத்துத் தைக்கவேண்டிய தேவை அற்ற நிலை. உடைகள் கிழிவதற்கோ, கறையான் தின்னுவதற்கோ, பழுதாகிப்போவதற்கோ சாத்தியமற்ற நிலை இங்கே. மாதத்துக்கு மாதம் உடை மாதிரிகள் மாறும்போது 'மொடர்ன் ' உடைகளை வாங்குகி றோம். இவை இயற்கையின் நியதியா?

உணவுகளைப் பொறுத்தமட்டில் இங்கே கொட்டும் உணவுகள் மண்ணோடு மண்ணாகப்போய் விடுகின்றன. ஒரு ஜீவனின் பசியை நீக்காது குப்பைவாளிகள் நிரப்பப்படுகின்றன. சிந்துகின்ற உணவுகளை உண்ணக் காகங்களோ நாய்களோ எறும்பு களோ இல்லை. ஆனால் தாயகத்தில் சிந்துகின்ற உணவுக்காகத்

www.padippakam.com



தவம் இருக்கும் ஜீவன்கள் எத்தனை எத்தனையோ? பச்சைப்பசேல் எனப் பரந்திருக்கும் புற்றரையில் புல்லை மேய்வதற்கு மிருகங்கள் இல்லாது பசும்புற்கள் வெட்டிக் கழிக்கப்படுகின்றன. அரிதாகவே சில இடங்களில் பண்ணையில் வளரும் மிருகங்களுக்கு இவை பயன்படுத் தப்படுகின்றன. மரங்களின் இலை,குழை , பழுத்தல்கள் எல்லாம் காற் றோடு காற்றாய்ப் பறக்கின்றன.: குப்பைக் கிடங்குகளையும் தஞ்சமடை கின்றன.இவற்றுக்காகக் காவலிருக்கின்ற ஆத்மாக்கள் தாயகத்தில் எத் தனையோ? இவ்வாறான தன்மைகள் எமக்குப் பல உண்மையான தத் துவங்களை வெளிப்படுத்துகின்றன.

இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான் உலகம்.

மகிழ்ச்சியும் துக்கமும் நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றவை.

இயற்கைத் தரையிலே வானுயர்ந்த மலை இருக்கும்போது, மாறாக இன்னோர் இடத்தில் பாதாளப் பள்ளத்தாக்கு இருக்கும். உலகில் எந்த ஒரு பொருளுக்கும் எந்த ஒரு சக்திக்கும் ஒரு எதிர்ப்பொருள், எதிர்ச் சக்தி, எதிர்ப்பியல்பு இருக்கின்றன என்பது ஆணித்தரமான உண்மை. தெய்வசக்தியிற்கூட அதை எதிர்க்கும் எதிர்ச்சக்தி உண்டு. இந்துக் கள் இச்சக்தியையே 'விதி' என்றும் 'ஊழ்வினை ' என்றும் முன்செய்த பழி என்றும் , அதுதான் தமது முயற்சியை எதிர்த்துத் தடைசெய்கி றது என நம்பிக்கை கொள்கிறார்கள். கிறீஸ்தவர்கள் சாத்தானின் செயல் என்கிறார்கள். இவற்றை நோக்கின் இறைசக்தியையும் எதிர்க் கும் ஒரு சக்தி உண்டு என்பது தெளிவாகிறது. இதை நாம் நம்ப முடியுமா? எனச் சிலர் அபிப்பிராயப்படலாம். கடவுள் - ஒரு ஆக்க சக்தி - பரிபாலிக்கும் சக்தி ஒன்று இருக்கிறது என நாம் நம்பும் போது, அதை எதிர்க்கும் தீயசக்தி ஒன்று இருக்கலாம்தானே ? என ஒரு வினாவை நமக்குள் நாமே கேட்டால் அதற்கான விடையை ஒவ் வொரு மனதுக்கும் ஏற்றபடி அறிந்துகொள்ளமுடியும்.

ஒரு தாரசுத் தட்டைச் சமப்படுத்தும் சக்தி மனிதனுக்கு உண்டு.ஆனால் உலகிலுள்ள நன்மை-தீமை, ஏற்றம்-இறக்கம் போன்ற தராசுத் தட்டுக்களை அவனால் சமப்படுத்தவே முடியாது. ஏனெனில் அவனை மிஞ்சிய ஒரு சக்தி இருக்கின்றது. அச்சக்தியே உலகெங்கும் வியாபித்துள்ளது. அதுவே இறைசக்தியாகும். அஞ்ஞா னிகளும் மெய்ஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொண்ட உண்மை. எனவே எதற்கும் 'நான்- நான்' என்ற ஆணவத்தைவிட்டு எமக்கு மேலுள்ள சக்தியாற்தான் செயற்படுகின்றோம் என்பதை மனதில் எண்ணி வாழும்போது தெய்வபலம் ஒருவருக்கு என்றும் துணையாக இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் வளர்த்த இத்தாலிய அறிஞர்

நமது அன்னை மொழியாம் தமிழ்மொழிமீது ஆர்வம் கொண்டு கற்று, அதன் வளர்ச்சிக்குத் தொண்டு செய்த அந்நியநாட்டு அறிஞர்கள் பலர். அவர்களுள்ளே வீரமாமுனிவர் எனப் பெயர் சூடிய பெஸ்கி, பெப்ரிஷியஸ், கால்ட்வெல், போன்ற அறிஞர்கள் குறிப்பிடக்கூடிய அளவில் தமிழுக்குத் தொண்டு செய்துள்ளனர். தமிழறிஞர்களால் மட்டுமன்றி அந்நியமொழி அறிஞர்களாலும் வளம்பெற்று உயர்ந்தது எமது தமிழ்மொழி. தமிழுக்குத் தொண்டு செய்த அந்நிய நாட்டவருள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றார் " பெஸ்கி" என்ற இத்தாலிய அறிஞர்.

பெஸ்கி, இத்தாலி நாட்டிலுள்ள காஸ்திகிளியோனே என்ற சிற்றூரிலே 1680ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9 ம் திகதி பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கொண்டல்போ பெஸ்கி. தாயார் பெயர் எலிசபெத் என்பதாகும். பெற்றோர் இவருக்கு இட்ட இளமைப் பெயர் கொன்சைன்ஷியஸ் ஜோசப் பெஸ்கி ஆகும்.இவர்கள் கிறீஸ்தவ மதத்தைப் பின்பற்றி அதனைப் பரப்புவதையே வாழ்க்கையின் பயன் எனக் கொண்டனர். பெஸ்கி இளமையிலேயே அறிவும் ஆற்றலும் மிகுந்தவராகக் காணப்பட்டார். பல மொழிகளைக் கற்க வேண்டும் என்ற ஆர்வமுடையவராக இருந்தார். தாய்மொழியான இத்தாலி மொழியில் தேர்ச்சி பெற்றார்.அத்துடன் போர்த்துக்கீச மொழி, ஈபுரு, கிரேக்க மொழி, இலத்தீன் மொழி, ஆகிய மொழிகளையும் பயின்றார்.

மக்களின் மீட்புக்காகச் சிலுவையில் தமது உயிரையே பலியாக்கிய ஜேசுநாதரின் தியாகச்செயல், அவரது பணிகள், இவருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. ஜேசுநாதரின் வாழ்க்கையால் கவரப்பட்ட இவர் பைபிளை விரும்பிக் கற்று அதன்படி ஒழுகினார். அதுமட்டுமன்றி பைபிள் பற்றிய போதனைகளை மற்றவர்களுக்குப் பரப்ப வேண்டும் என்று துறவியானார். ஜேசுசபையில் சேர்ந்து சமயநூலையும் அதன் விளக்கங்களையும் பயின்று குருப்பட்டம் பெற்றார். கிறிஸ்தவமதத்தை உலகளாவிய ரீதியில் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டு, அதன் காரணமாக இந்தியாவுக்கு வந்தார். அங்குள்ள தமிழர்களிடையே மதத்தைப் பரப்புவதற்கு அவர்களுடைய மொழியிலே தாம் பேச வேண்டும் என்ற அத்தியாவசியத்தை உணர்ந்து தமிழைக் கற்றார். தமிழ் மக்களோடு தாமும் ஒருவராக வாழ்ந்து, தமிழ்மொழி யைக் கற்றதோடு சுப்பிரதீபக் கவிராயரிடம் பழைய இலக்கண இலக் கிய நூல்களையும் கற்றார். ஏற்கனவே பலமொழிப்புலமை பெற்றிருந்த

www.padippakam.com



இவருக்கு தமிழைக் கற்பதில் சிரமம் இருக்கவில்லை.இதன் பயனாக தமிழ் உரைநடை நூல்களையும் செய்யுள் நூல்களையும் தாமே எழுதும் ஆற்றலைப் பெற்றார்.

தமிழ் மொழியைக் கற்ற பெஸ்கி தமிழர்களின் பண்பாடு களுக்கு அடிமையாகி, தமிழரைப் போலவே வேட்டியணிந்து சால் வை தரித்துத் தம்மைத் தமிழனாகவே மாற்றிக் கொண்டார். இவரது செயலாலும் குணத்தாலும் கவரப்பட்ட மக்கள் வீரமாமுனிவர் என இவரை அழைத்தனர். சதுரகராதி, தேம்பாவணி, திருக்காவலூர்க்கலம் பகம், அடைக்கலமாலை போன்ற செய்யுள் நூல்களையும் பரமார்த்த குரு கதை, வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், ஆகிய உரைநடை நூல்களையும் எழுதினார். அத்துடன் தமக்கு அந்நியமொழியான தமிழ்மொழிக்கு இலக்கணம் எழுதும் வியத்தகு திறமையைப் பெற்று " தொன்னூல் விளக்கம்" என்னும் இலக்கண நூலையும் எழுதி - னார். தமிழ்மொழிக்கு இலக்கணம் எழுதிய பேரறிஞர் பெஸ்கி என்ற புகழை இவர் பெற்றார். அத்துடன் திருக்குறளை இலத்தீன் மொழி - யில் மொழிபெயர்த்த பெருமையையும் இவரையே சார்கிறது.

சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும் செய்து புகழ் பரப்பி மக்களை ஆன்மீக வழிப்படுத்திய வீரமாமுனிவர் தன்னுடலைத் தமிழ்மண் ணிற்கே அர்ப்பணித்தார்.உயிரைத் தமிழ்மொழிக்கும் தம் சமயத்துக் கும் அர்ப்பணம் செய்தார். 1747 ம் ஆண்டு மாசிமாதம் 4 ம் திகதி இந்தியாவிலுள்ள அம்பலக்காட்டு மடத்தில் இவரின் இன்னுயிர் அடக் கம் பெற்றது. அவர் மறைந்தாலும் அவரது நூல்கள், சேவைகள் இன்னும் நம்மிடையே புகழுடம்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

தமிழுக்குத் தொண்டாற்றிய ஆங்கில நாட்டு அறி ஞர்கள் டாக்டர் கால்ட்வெல், 1815 ம் ஆண்டுக் காலகட்டத்தில் வாழ்ந்து தமிழ் வளர்ச்சிக்குச் சேவை செய்தார். 1820 முதல் 1908 வரை ஜியூ. போப் என்பவர் வாழ்ந்து தமிழ் வளர்ச்சிக்கு வழி செய்தார். திருக்குறளை இவர் ஆங்கிலமொழியில் மொழிபெயர்த்தார்.

18ம் நூற்றாண்டின் மத்தியபகுதியில் பெப்ரிஷியஸ், சீகன்பால்க், ஆகிய ஜேர்மனிய பாதிரிமார்கள் தமிழைக் கற்றுத் தேர்ந்த அறிஞர்களாகியது டன் தமது மதத்தையும் இந்தியாவில் பரப்பினர். தமிழ்மொழியில் பைபிள் பாடல்களை எழுதினார்கள்.தமிழுக்கு இலக்கணமும் எழுதினர் என வரலாறு சான்று பகர்கின்றது. அந்நிய அறிஞர்கள் இவ்வாறு தமிழுக்கு வளம் சேர்த்த போது, இங்கே அந்நிய நாடுகளில் வாழும் நாம் எமது தாய்மொழியைக் கற்காமல் வாழ்வது நியாயமாகுமா? தமிழுக்கு நாம் தொண்டு செய்யாவிட்டாலும் எங்கு நாம் வாழ்கி றோமோ அங்கு எமது மொழியைக் கற்கப் பின்னிற்கக் கூடாது.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கலை விளக்கு

மேல் நாட்டுச் சூழ்நிலையில் வாழ்ந்து
கொண்டிருக்கும் தமிழர்தம் மனைகளில்
சுடர் விட்டு ஒளிரட்டும் இக் கலைவிளக்கு



பத்திரிகைத் தொடர்புகளுக்கு

**S.Packiyanathan**
**Droote-13**
**44328 Dortmund**
**Germany**

*PHOTO COPIES ARE FREELY DONE BY*

**CARITAS**

*OF DORTMUND*

படிப்பகம்